# புனித வாரம் வழிபாட்டுக் கையேடு



# புனித வாரத் திருப்பலி வழிபாட்டு அமைப்பு முறை

## ஆண்டவரின் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

**(தயார் நிலையில் இருக்கவேண்டியவை)**

**(பவனி துவங்கும் இடத்தில்...)**

1. மேசை
2. வெள்ளைத்துணி (பீடத்துணி)
3. பவனி திருச்சிலுவை (அலங்கரிப்பட்டிருத்தல் நன்று)
4. தீர்த்தசொம்பு
5. தூபக்கலசம்
6. சாம்பிராணி
7. மெழுகுவர்த்திகள்
8. திருப்பலி புத்தகம்,
9. சிவப்பு நிற காப்பா (அ) திருப்பலி உடை
10. குருத்தோலைகள்
11. குருவிற்கான அலங்கரிக்கப்பட்ட குருத்தோலை

**பவனியில்...**

1. புகையும் தூபக்கலசம் ~ 1
2. மெழுகுவர்த்தி – 2
3. பவனி திருச்சிலுவை
4. குருக்கள்
5. மக்கள்

பவனி ஆலயத்தை அடைந்தவுடன் **"ஆண்டவர் புனித நகரத்தில்..."** என்ற பாடல் பாடப்படும்.

**ஆண்டவர் புனித நகரத்தில்**
நுழைகையில் எபிரேய சிறுவர் குழாம்
உயிர்த்தெழுதலை அறிவித்தவராய்

குருத்து மடல்களை ஏந்தி நின்று
உன்னதங்களிலே ஓசான்னா
என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்

எருசலேம் நகருக்கு இயேசு பிரான்
வருவதைக் கேட்ட மக்களெல்லலாம்
அவரை எதிர்க்கொண்டழைத்தனரே

குருத்து மடல்களை ஏந்தி நின்று
உன்னதங்களிலே ஓசான்னா
என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்

**ஆலயத்தில்...**

திருப்பலி பொருட்கள்

# குருத்து ஞாயிறு திருவழிபாட்டு பகுதிகள்

**பவனியில்...**

1. முன்னுரை
2. **"தாவீதின் மகனுக்கு ஓசான்னா..."** என்ற பாடல்

**தாவீதின் மகனுக்கு ஓசான்னா**
**ஆண்டவர் பெயரால் வருகிறவர்**
**ஆசி நிரம்ப பெற்றவரே**
**இஸ்ராயேலின் பேரரசே**
**உன்னதங்களிலே ஓசான்னா**

3. துவக்கச் சடங்கு (தி.பு. பக்: 94)
4. குருத்தோலைகளைகளை மந்திரிக்கும் சடங்கு (தி.பு. பக்: 94)
5. மன்றாடுவோமாக (தி.பு. பக்: 95)
6. குரு குருத்தோலைகளை மந்திரிக்கிறார்
7. நற்செய்தி வாசகம் (**A**. மத் 21:1-11 தி.பு. பக்: 95, **B** மாற்கு11:1-10 தி.பு. பக்:96 **C** லூக்19:29-40 தி.பு. பக்: 97)
8. பவனி துவக்கம் (தி.பு. பக்: 98)
   - (பவனி மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெற்று ஆலயத்தை அடையும். ஆலயத்தை அடைந்தவுடன் குரு காப்பா அணிந்திருந்தால் அதை அகற்றிவிட்டு திருப்பலி உடை அணிவார் **"ஆண்டவர் புனித நகரத்தில்..."** என்ற பாடல் பாடப்படும்.)

**ஆலயத்தினுள்...**

1. சபை மன்றாட்டு (தி.பு. பக்: 103)
2. முதல் வாசக முன்னுரை
3. முதல் வாசகம் (வாசக நூல் 1 பக்: 356, எசாயா 50: 4-7)
4. **"என் இறைவா என் இறைவா"** என்ற பதிலுரைப் பாடல் பாடப்படும்

**என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்?**

**என்னைப் பார்ப்போர் எல்லோரும் என்னை ஏளனம் செய்கின்றனர்**
**உதட்டை பிதுக்கி தலையை அசைக்கின்றனர்**
**ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே அவர் மீட்கட்டும்**
**அவருக்கு இவன் மீது பிரியமிருந்தால் இவனை விடுவிக்கட்டும் என்பார்கள்**

ஏனெனில் பல நாய்கள் என்னை சூழ்ந்து கொண்டன
பொல்லாதவர்கள் கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும்
அவர்களோ என்னைப் பார்க்கிறார்கள் பார்த்து அக்களிக்கிறார்கள்

என் ஆடைகளை தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள்
என் உடை மீது சீட்டு போடுகிறார்கள் ஆனால் நீரோ ஆண்டவரே
என்னை விட்டுத் தொலைவில் போய் விடாதேயும்
எனக்கு துணையான நீர் எனக்கு உதவி புரிய விரைந்து வாரும்

நானோ உம் நாமத்தை என் சகோதரருக்கு வெளிப்படுத்துவேன்
ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரை புகழுங்கள்
யாக்கோபின் சந்ததியே நீங்கள் அனைவரும் அவரைப் போற்றுங்கள்
இஸ்ரயேல் மக்களே நீங்கள் அனைவரும் அவரைப் அஞ்சுங்கள்

5. இரண்டாம் வாசகம் முன்னுரை
6. இரண்டாம் வாசகம் (வாசக நூல் 1 பக்: 357, பிலி 2: 6-11)
7. **"கிறிஸ்து தம்மை தாழ்த்தி..."** என்ற நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி சாவை ஏற்கும் அளவுக்கு
அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிபவரானார்.
ஆதலால் தான் கடவுள் அவரை எல்லோருக்கும் மேலாய் உயர்த்தி
எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

8. நற்செய்தி வாசகம் (மூன்று (அ) அதற்கு மேற்பட்டவர்களால் வாசிக்கப்படும்)
9. மறையுரை
10. விசுவாச அறிக்கை
11. விசுவாசிகளின் மன்றாட்டு
12. காணிக்கை மன்றாட்டு (தி.பு பக்: 103)
13. தொடக்கவுரை (தி.பு பக்: 103)
14. நற்கருணை மன்றாட்டு-1 - ஐ பயன்படுத்துவது நன்று.(1- பக்: 316, 3- பக்: 330)
15. திருவிருந்துச் சடங்கு (தி.பு பக்: 367)
16. நன்றி மன்றாட்டு (தி.பு பக்: 104)
17. இறுதி ஆசீர் (சிறப்பு ஆசீர், தி.பு பக்: 386 எண்: 5 ஆண்டவரின் திருப்பாடுகள்)

**கவனிக்கப்பட வேண்டியவை**

1. ஆலயத்திலிருந்து மலர்கள் அகற்றப்பற்றிருக்கவேண்டும்
2. பீட அலங்காரம் குருத்தோலைகளை பயன்படுத்தலாம்
3. பவனி துவங்கும் இடத்தில் தேவையேற்படின் ஒலிப் பெருக்கி வசதி செய்து கொள்ளவும்.
4. நற்செய்தி: இயேசுவின் இறப்பு நிகழ்வு (மூன்று (அ) அதற்கு மேற்பட்டவர்களால் வாசிக்கப்படும்)
5. நற்செய்திக்கு முன்பு தூபமிடப்படுவதில்லை.
6. நற்செய்தி ஆண்டுக்கேற்ப தேர்ந்து கொள்ளவும்.
7. 1~94 2~103 3~317/330 4~ 367 5~ 386

**குறிப்பு :**

திருப்பலி புத்தக பக்க எண்கள்: 1993 –ல் திருத்தப்பட்டு 2008~ல் வெளிவந்த பதிப்பின்படி குறிக்கப்பட்டுள்ளன.

# ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலி

## புனித வியாழன்

(தயாரிப்பு நிலையில் இருக்கவேண்டியவை)

1. திருப்பலிப் பொருட்கள்
2. இரு நாட்களுக்கு தேவையான
3. அப்பங்கள், அகன்ற விளிம்பு கொண்ட பாத்திரம்
4. குவளை நீர்(பாதம் கழுவுவதற்கு)
5. நற்கருணை பாத்திரத்தை மூடுவதற்கு பயன்படுத்தப்படும் துணி
6. சோப்பு
7. துண்டு-2 (இடுப்பில் கட்டுவதற்கு, துடைப்பதற்கு)
8. 12 அன்பளிப்புகள்
9. மரமணி (கிரிச்)
10. காப்பா
11. தோள்துகில் (Humeral veil)
12. தங்கநிற திருப்பலி உடைகள்
13. நற்கருணை ஆராதனைக்காக பீடம் (ஆலயத்தில்)
14. நற்கருணையை பாதுகாப்பாக வைக்க ஒரு இடம் (திருப்பபண்ட அறையில், ஆராதனைக்குப்பிறகு பாதுகாப்பாக வைப்பதற்கு)
15. தூபம்
16. சாம்பிராணி

**திருப்பலி அமைப்பு முறை**

1. திருப்பலி முன்னுரை
2. தொடக்க சடங்கு (தி.பு.ப.எண் 251)
3. உன்னதங்களிலே….. கீதம் (ஆலயமணிகள் ஒலிக்கும் அதுமுதல் பாஸ்கா திருவழிப்பு வரை ஆலயமணிகள் ஒலிக்காது. ஆலய மணிகளுக்கு பதிலாக மரமணி (கீரிச்) பயன்படுத்தவும்.
4. சபை மன்றாட்டு (தி.பு.ப.எண் 113)
5. முதல் வாசக முன்னுரை
6. முதல் வாசகம் (வாசக நூல்-1 பக். 405, வி.ப 12:1-8,11-14)
7. **“நாம் ஆசீர்வதிக்கும் கிண்ணம்……”** என்ற பதிலுரைப்பாடல்

**நான் ஆசீர்வதிக்கும் கிண்ணம்**
**கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்வதன்றோ**

**ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்**
**நான் என்ன கைம்மாறு செய்வேன்?**
**மீட்புக்காக நன்றி கூறி கிண்ணத்தைக் கையில் எடுத்து**
**ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்.**

**ஆண்டவர் தம் அடியாரின் மரணம்**

அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது
ஆண்டவரே நான் உம் ஊழியன், உம் அடியான்
உமது அடியாளின் மகன் என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்

புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்
ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன்
ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும்
அவருக்கு என் பொருத்தனைகளை செலுத்துவேன்

8. இரண்டாம் வாசக முன்னுரை
9. இரண்டாம் வாசகம் (வாசக நூல்-1 பக். 407, 1கொரி11: 23-26)
10. **“புதியதோர் கட்டளை உங்களுக்கு தருகின்றேன்………”** என்ற வாழ்த்தொலி

புதியதோர் கட்டளைஉங்களுக்குத் தருகின்றேன்
உங்களைநான் அன்புசெய்ததுபோலவே
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்புசெய்யுங்கள்
என்றுரைக்கின்றார் எம்பெருமான் இயேசு.

11. நற்செய்தி வாசகம் (வாசக நூல்- 1 பக்.407 யோ13:1-15)
12. மறையுரை
13. பாதம் கழுவும் சடங்கு

(குரு திருப்பலி உடையை அகற்றிவிட்டு இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு பாதங்களை கழுவி முத்தமிடுவார் பின்பு அவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படும், அப்பொழுது ‘‘ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது? ’’ என்ற பாடல் பாடப்பெறும்)

14. விசுவாச அறிக்கை சொல்லப்படுவது இல்லை
15. விசுவாசிகளின் மன்றாட்டு
16. காணிக்கைப் பவனி:

    (தவக்காலத்தில் நோன்பு மூலம் சேகரித்த உணவுப் பொருட்களைக் காணிக்கையாக கொடுப்பது வரவேற்கத்தக்கது.)

காணிக்கை மன்றாட்டு : (தி. பு. ப.எண் 115)
தொடக்கவுரை : (தி. பு. ப. எண் 291 கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் - 1)
நற்கருணை மன்றாட்டு:1 (தி. பு. ப.எண் 317)
திருவிருந்துச் சடங்கு : (தி. பு. ப.எண் 367)
நன்றி மன்றாட்டு : (தி. பு. ப.எண் 118)

இறைமக்ளுக்கு நற்கருணைவழங்கியபின் (இரு குணங்களில் வழங்குதல் நன்று) ஆராதணைக்கு வைக்கப்படவிருக்கும் நற்கருணைப பாத்திரத்தை தவிர மற்றவை துணியால் மூடப்பட்டு திருப்பண்ட அறையில் தயாரித்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் வைக்கப்படும். நன்றி மன்றாட்டுக்குப் பின் குரு திருப்பலி உடைகளை அகற்றிவிட்டு காப்பா அணிகிறார். நற்கருணைக்கு தூபமிடுகிறார். ( நற்கருணைப் பாத்திரம் துணியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.) குரு திருத்தோள் துகிலால் பொதிந்துக் கொள்வார். பவனியின் போது ‘‘பாடுவாய் என் நாவே…..’’ என்ற பாடல் பாடப்பெறும் பவனி ஆராதானைக்குரிய இடத்தை அடைந்தவுடன் ‘‘மாண்புயர்…’’என்ற சரணம் பாடப்பெறும். அப்போது குரு நற்கருணைக்கு தூபமிடுவார்.

**பவனியின் முறை…**

1. மெழுகுவர்த்தி பவனிதிருச்சிலுவை மெழுகுவர்த்தி
2. மரமணி (ஒலி எழுப்பவும்)
3. புகையும் தூபக்கலம் (குருவை நோக்கியவாறு)
4. மெழுகுவர்த்தி – குரு ~ மெழுகுவர்த்தி

**பவனிக்கான குறிப்புகள்:**

- பவனி நீண்டதாயிருந்தால் **‘‘மாண்புயர்….’’** தவிர மற்ற சரணங்கள் பவனி ஆராதனைக்குரிய இடத்தை அடையும் வரை திரும்ப திரும்ப பாடப்படும் இடத்தை அடைந்தவுடன் மாண்புயர் என்ற சரணத்தை பாடவும்.
- பவனி சிறியதாக இருந்தால் பவனி இடத்தை அடையும் வரை மற்ற சரணங்கள் பாடப்படும் அடைந்தவுடன் மாண்புயர் பாடப்படும் மற்ற சரணங்கள் பாடப்படுவதில்லை.
- இரவு 12மணி வரை பகிரங்க ஆராதனை நடைபெறும் பின்னர் அமைதியான முறையில் ஆராதனை நடைபெறும்.
- இரவு12 மணிக்கு குரு காப்பா அணிந்து நற்கருணைக்கு தூபமிடுவார். அப்போது மாண்புயர் கீதம் பாடப்படும் பாடலுக்குப் பின் குரு திருத்தோள் துகில் அணிந்து நற்கருணைப்பாத்திரத்தை எடுத்து திருத்தோள் துகிலால் பொதிந்து கொண்டு மரமணி ஒலிக்க மெழுகுவர்த்தி ஏந்திய பீடச்சிறார்கள் உடன் வர புகையும் தூபக்கலசத்துடன் எடுத்து சென்று திருப்பண்ட அறையில வைக்கப்பட்டுள்ள மற்ற பாத்திரங்களோடு சேர்த்து வைப்பார்.
- இறைமக்கள் எத்தகைய செபமும் சொல்லாமலும் சிலுவை அடையாளம் வரையாமலும் அமைதியாக கலைந்து செல்வர்.

**கவனிக்க வேண்டியவை**

1. தங்க நிற திருப்பலி உடைகள்
2. பீடம் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும், மலர்கள் பயன்படுத்தலாம்
3. திருப்பலி முடிந்தவுடன் பீடத்தின் அணிகள் அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாக்கப்படும். திருச்சிலுவைகள் அகற்றப்படும் அல்லது திரையிடப்படும்.
4. நற்கருணை பேழையின் அணிகள் அகற்றப்பட்டு திறந்து வைக்கப்படும்.

5. மக்களின் ஆராதனைக்கான பீடம் தயாரித்து வைக்கவும், நற்கருணை பாத்திரம் வைக்கப்படும் இடத்தில் திருமேனித் துகில் (கார்ப்போரல்) விரித்து வைக்கப்படும்.
6. திருப்பண்ட அறையிலும் தகுந்த இடத்தை தயார் செய்து திருமேனித் துகில்(கார்ப்போரல்) விரித்து வைக்கப்படும். நற்கருணை வைக்கப்பட்டவுடன் அந்த இடத்திற்கு அருகில் ''அணையா விளக்கு'' வைக்கப்படும்.
7. உன்னதங்களிலே….. பாடும்பொழுது ஆலயத்தின் அனைத்து மணிகளும் ஒலிக்குமாறு பார்த்துக் கொள்ளவும். அதன்பிறகு பாஸ்கா திருவிழிப்பு வரை மணிகள் ஒலிக்காது. மணிகள் அடிக்கப்படும் நேரங்களில் மரமணி பயன்படுத்துக.

1~ 251 2~ 113 3~ 291 4~ 317 5~ 367.

**வெள்ளி காலை**

வெள்ளிக்கிழமை காலை முதல் பிற்பகல் 3மணி வரை நற்கருணை ஆராதனை பீடத்தில் வைக்கப்பட்டு அமைதியான முறையில் ஆராதனை நடைபெறும்.
பிற்பகல் 3மணிக்கு சிறிய செபம் (இறையிரக்கம் அல்லது புனித வெள்ளியன்று 3மணிக்கு சொல்லப்படும் திருப்பாடுகளின் செபம் (புலம்பல்)) செபிக்கப்படும். குரு காப்பா அணிந்து நற்கருணைக்கு தூபமிடுவார். (அப்போது மாண்புயர் கீதம் **பாடப்படுவதில்லை)** திருத்தோள் துகில் அணிந்து நற்கருணைப்பாத்திரத்தை எடுத்து திருத்தோள் துகிலால் பொதிந்து கொண்டு மரமணி ஒலிக்க மெழுகுவர்த்தி ஏந்திய பீடச்சிறார்கள் உடன் வர புகையும் தூபக்கலசத்துடன் எடுத்து சென்று திருப்பண்ட அறையில வைக்கப்பட்டுள்ள மற்ற பாத்திரங்களோடு சேர்த்து வைப்பார்.
இறைமக்கள் எத்தகைய செபமும் சொல்லாமலும் சிலுவை அடையாளம் வரையாமலும் அமைதியாக கலைந்து செல்வர்.

# திருப்பாடுகளின் புனித வெள்ளி

(தயார் நிலையில் இ ருக்கவேண்டியவை)

1. சிவப்புநிற திருப்பலி உடைகள்,
2. திருப்பலி புத்தகம்,
3. வெள்ளைத்துணி (பீடத்துணி),
4. மெழுகுவர்த்திகள்,
5. மூடப்பட்ட திருச்சிலுவை,
6. படுக்கை விரிப்பு,
7. தலையணை,
8. திருமேனித்துகிள்கள் (கார்போரல்ஸ்),
9. திருதோள்துகில் (ஹியுமரல் வெயில்)

**திருச்சடங்கு அமைப்புமுறை**

1. பீடம் வெறுமையாக இருக்கும்
2. மன்றாட்டு (குரு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்குவார், மக்கள் முழந்தாளில் இருப்பர்)
3. மன்றாட்டு (தி.பு.ப.எண் 119)
4. முதல் வாசக முன்னுரை
5. முதல் வாசகம்( வாசக நூல்~1 பக். 409, எசா52: 13~ 53:12)
6. தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.... என்ற பதிலுரைப்பாடல் பாடப்படும்.

**தந்தையேஉம் கையில் – என்**
**ஆவியைஒப்படைக்கின்றேன் – உ**

**ஆண்டவரேஉம்மிடம் அடைக்கலம் புகுகிறேன்**
**நான் ஒருநாளும் ஏமாற்றம் அடையவிடாதேயும்**
**உம்முடையநீதியின்படிஎன்னைவிடுவித்தருளும்**
**உம் கையில் என் ஆவியைஒப்படைக்கின்றேன் – ஆண்டவரே**
**வார்த்தையில் தவறாத இறைவா**
**நீர்என்னைமீட்டருளும்**

**என் எதிரிகள் அனைவருடையவும் பழிச்சொல்லுக்குநான் ஆளானேன்**
**எனக்குஅறிமுகமானவர்களின் அச்சத்திற்குரியவனானேன்**
**வெளியேஎன்னைக் காண்கின்றவர்கள் என்னைவிட்டுஓடுகின்றனர்**
**இறந்துபோனவன்போல் பிறர்கண்ணுக்குமறைவானேன்**
**உடைந்துபோனமட்கலத்தைப் போலானேன்**

7. இரண்டாம் வாசக முன்னுரை

8. இரண்டாம் வாசகம் (வாசக நூல்-1 பக். 411, எபி4: 14-16, 5:7-9)
9. கிறிஸ்து தம்மை தாழ்த்தி.... என்ற நற்செய்திக்குமுன் வசனம்.

**கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி சாவை ஏற்கும் அளவுக்கு**
**அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிபவரானார்.**
**ஆதலால் தான் கடவுள் அவரை எல்லோருக்கும் மேலாய் உயர்த்தி**
**எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.**

10. நற்செய்தி வாசகம் (மூவரால் பிரித்து வாசிக்கப்படும்) (யோ18: 1- 19:42)
11. மறையுரை
12. சிறப்பு விசுவாசிகளின் மன்றாட்டு (தி.பு.ப.எண் 121)
13. திருச்சிலுவை ஆராதனை (தி.பு.ப.எண் 126)
14. பீடத்தின் மேல் பீடத்துணி விரிக்கப்பட்டு மெழுகுவர்த்திகள் வைக்கப்படும்.
15. திருவிருந்து (வழங்குதல்) (தி.பு.ப.எண் 132)
16. நன்றி மன்றாட்டு(தி.பு.ப.எண் 133)
17. மக்கள்மீது மன்றாட்டு (பிரியா விடை) (தி.பு.ப.எண் 134)
18. இறைமக்கள் அமைதியாக கலைந்து செல்வர்.

**கவனிக்கப்பட வேண்டியவை:**

1. பீடம் வெறுமையாக இருக்கும்,
2. திருச்சிலுவை மூடப்பட்டிருக்கும்.
3. திருச்சடங்கு துவங்கும்முன் பீடத்தின்முன் படுக்கை விரிப்பை (பெட்ஷீட்) விரித்து தலையணையை வைக்கவும்.
4. குரு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கியபின் அதனை அகற்றிவிடவும்.
5. நற்செய்தி மூவரால் (அ) அதற்கு மேற்பட்டவரால் வாசிக்கப்படுவதற்கு தயாரித்துக் கொள்ளவும்.
6. சிறப்பு விசுவாசிகளின் மன்றாட்டில் இரு முறைகளை பின்பற்றலாம்.
    - குரு மன்றாட்டின் கருத்தை கூற அனைவரும் ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும் என்று பதில் கூறுவர்.
    - குரு மன்றாட்டின் கருத்தை கூறுவார். பின் முழந்தாளிடுங்கள் என அழைப்பு விடுக்க அனைவரும் முழந்தாளிட்டு செபிப்பர், பின்னர் எழுந்திருங்கள் என அழைப்பு விடுக்க அனைவரும் எழுந்து நிற்பர், பின் குரு மன்றாடுவார். அனைவரும் ஆமென் என பதிலுரைப்பர்.

**திருச்சிலுவை ஆராதனை**

- திருச்சிலுவை எளிதில் திறப்பதற்கு ஏற்றவாறு மூடப்பட்டிருக்க வேண்டும்.
- திருச்சிலுவை முத்தி செய்யும் போது சுருபத்தில் முத்தி செய்யும் இடத்தை துடைப்பதற்கு பீடச்சிறார்களை நியமிக்கலாம்.

**திருச்சிலுவை பவனியில் 2 வகையுண்டு**

1. எரியும் திரிகள் அருகில் வர மூடப்பட்ட திருச்சிலுவை பீடத்திற்கு பவனியாக எடுத்துவரப்பட்டு குருவிடம் கொடுக்கப்பட குரு திருச்சிலுவையை வாங்கி முதலில் மேற்பகுதி (தலை), இரண்டாவது வலதுகை, மூன்றாவது முழுவதும் என பகுதி பகுதியாக திறந்து " திருச்சிலுவை மரமிதோ…" என பாட மக்கள் "வருவீர் ஆராதிப்போம்" என்று பதிலளிப்பர்.
2. குரு கோவிலின் முகப்பிற்கு செல்வார், எரியும் திரிகளுக்கிடையே மூடப்பட்ட திருச்சிலுவையின் மேற்பகுதி (தலை) ஐ திறந்து " திருச்சிலுவை மரமிதோ…" என பாட மக்கள் "வருவீர் ஆராதிப்போம்" என்று பதிலளிப்பர். பின்னர் கோவிலின் நடுப்பகுதியில் நின்று வலதுகை பகுதியை திறந்து " திருச்சிலுவை மரமிதோ…" என பாட மக்கள் "வருவீர் ஆராதிப்போம்" என்று பதிலளிப்பர். பின்னர் பீடத்தின் அருகில் நின்று மக்களை நோக்கிய வாறு முழுவதும் திறக்கப்பட்ட திருச்சிலுவையை உயர்த்தி பிடித்து "**திருச்சிலுவை மரமிதோ இதிலேதான் தொங்கியது** உலகத்தின் இரட்சணியம;" என பாட மக்கள் "**வருவீர் ஆராதிப்போம;**" என்று பதிலளிப்பர். பிறகு குரு முத்தி செய்துவிட்டு மக்கள் முத்தி செய்வதற்காக தகுந்த இடத்தில் வைப்பார்.
3. இரண்டாவது வகை பின்பற்றப்பட்டால் ஒலிவாங்கி (wireless mic) ஏற்பாடு செய்வது நன்று.

**திருச்சிலுவை முத்தி செய்தல்**

- திருச்சிலுவை முத்தி செய்யப்படும் நேரத்தில் "எனது சனமே… , நம்பிக்கை தரும் சிலுவையே.. , ஆணிக்கொண்ட… , போன்ற பாடல்கள் பாடப்படும்.

**எனது சனமே நான் உனக்கு**
**என்ன தீங்கு செய்தேன் சொல்**
**எதிலே உனக்கு துயர்தந்தேன்?**
**எனக்குப் பதில் நீ கூறிடுவாய்.**

**எகிப்து நாட்டில் நின்றுன்னை**
**மீட்டுக்கொண்டுவந்தேனே**
**அதனாலோ உன் மீட்பருக்கு**
**சிலுவை மரத்தை நீ தந்தாய்**

**நாற்பது ஆண்டுகள் நான் உன்னை**
**பாலை நிலத்தில் வழிநடத்தி**
**உனக்கு மன்னா உணவூட்டி**
**வளமிகு நாட்டினுள் வரச் செய்தேன்**

**அதனாலோ உன் மீட்பருக்கு**
**சிலுவை மரத்தை நீ தந்தாய்?**

**நான் உனக்காக எகிப்தியரை**
**அவர்தம் தலைச்சன் பிள்ளைகளை**
**வதைத்து ஒழித்தேன் நீ என்னை**
**கசையால் வதைத்துக் கையளித்தாய்**

**ஆணி கொண்ட உன் காயங்களை**
**அன்புடன் முத்திசெய்கின்றேன்**

பாவத்தால் உம்மைக் கொன்றேனே – 2
ஆயனே என்னை மன்னியும் – 2

வலது கரத்தின் காயமே– 2
அழகு நிறைந்த ரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

இடது கரத்தின் காயமே– 2
கடவுளின் திரு அன்புருவே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

வலது பாதக் காயமே– 2
பலன் மிகத் தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

இடது பாதக் காயமே– 2
திடன் மிகத் தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

திருவிலாவின் காயமே– 2
அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்திசெய்கின்றேன்

- திருச்சிலுவை ஆராதனைக்குப் பிறகு பீடத்தின் மேல் வெள்ளைத் (பீட) துணி விரிக்கப்பட்டு மெழுகுவாத்திகள் வைக்கப்படும்.
- குரு ஆடம்பரமின்றி நற்கருணையை எரியும் திரிகள் அருகில் வர பீடத்திற்கு எடுத்து வருவார்.
- கர்த்தர் கற்பித்த செபம் சொல்லப்படும், பின்னர் மக்களுக்கு நற்கருணை வழங்கப்படும். மக்களுக்கு நற்கருணை வழங்கப்பட்ட பின் மீண்டும் எரியும் திரிகள் அருகில் இருக்க திருப்பண்ட அறையிலேயே வைக்கப்படும்.
- நற்கருணை வழங்கப்பட்ட பின் நன்றி மன்றாட்டு அதனைத் தொடர்ந்து மக்கள்மீது மன்றாட்டு (பிரியா விடை) இடம் பெறும்.
- இதன் பிறகு எத்தகைய செபமும் சொல்லப்படுவதில்லை. அனைவரும் அமைதியாக கலைந்து செல்வர்.
- திருச்சடங்கு முடிந்தவுடன் திருச்சிலுவை மற்றும் சுருபங்களை மூடியுள்ள திரைகளை அகற்றிவிடவும்.

1~ 119 2~126 3~132

# பாஸ்கா திருவிழிப்பு

**நெருப்பை மந்திரிக்கும் இடத்தில்**

1. புதியநெருப்பு
2. பாஸ்காதிரி
3. மெழுகுவர்த்தி– 1
4. சாம்பிராணிக் குண்டுகள் ~ 5,
5. (எழுத்தாணி) பேனா
6. ஆணி
7. பஞ்சு (அ) காகிதம்
8. (நெருப்பிலிருந்து பாஸ்கா திரியைப் பற்றவைக்க) இடுக்கி ~1
9. தங்க நிற திருப்பலி உடைகள்
10. திருப்பலிப் புத்தகம்
11. ஒலிவாங்கி (wireless mic)
12. கைவிளக்கு(Torch)
13. ஆலயத்தின் அனைத்து விளக்குகளும் அனைக்கப்பட்டிருக்க வேண்டும்

**ஆலயத்தில்:**

1. பலிபீடம் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும்
2. நற்கருணைப் பேழை சுத்தம் செய்யப்பட்டு திருமேணித்து கிலை விரித்து வைக்கவும்
3. திருப்பலிப் பொருட்கள் பாஸ்காதிரி வைப்பதற்கான விளக்குத் தண்டு
4. உயிர்த்த இயேசுபீடம் (இடத்தின் வழக்கப்படி தயாரிக்கவும்)

**திருமுழுக்குக்கு தேவையான பொருட்கள்:**

1. திருஎண்ணெய்கள்
2. திருவாழ்வு
3. வெள்ளைத் துணி
4. மெழுகுவர்த்திகள்
5. புதியநீர் (மந்திரிப்பதற்கு)

### திருவழிபாடு அமைப்புமுறை

- முன்னுரை
- தொடக்கசடங்கு :~ நெருப்பை, திரியை மந்திரித்தல் பவனி (தி.பு. பக். 136)
- பாஸ்காபுகழுரை (தி.பு. பக். 139)
- **இறைவார்த்தை வழிபாடு:**

வாசகங்களுக்கானஅமைப்பு (தி.பு. பக். 145)

**(குறிப்பு: பொதுவாக 7 பழைய ஏற்பாட்டு வாசகங்கள் மற்றும் 2 புதிய ஏற்பாட்டு வாசகங்கள் வாசிக்கப்படும். விருப்பத்திற்கேற்க 5 வாசகங்களாக குறைத்துக் கொள்ளலாம். விரும்பத் தகுந்த குறைக்கப்பட்ட வாசகங்கள்:~)**

1. முதல் வாசக முன்னுரை

**முதல் வாசகம்: (வாசக நூல் 1,பக். 419, தொ.நூல் 1:1~2:2)**

**"உமது ஆவியை விடுத்தருளும்..."**என்றபதிலுரைப் பாடல்

உமது ஆவியை விடுத்தருளும்
ஆண்டவரே பூமியின் முகத்தைப் புதுப்பித்தருளும்

1. நெஞ்சே உன் ஆண்டவரை வாழ்த்துவாயாக!
ஆண்டவரே என் இறைவா நீர் எத்துணை உயர்ந்தவர்
மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கின்றீர்

2. பூமியை நீர் அடித்தளத்தின் மீது அமைத்தீர்
அது எந்நாளும் அசையவே அசையாது
கடல்களை உடையெனத் தந்திருக்கின்றீர்
வெள்ளப் பெருக்கு மலைகளை மூடியிருக்கும் படி செய்தீர்

3. நீரூற்றுகள் ஆறுகளாய்ப் பெருக்கெடுக்கக் கட்டளையிடுகிறீர்
அலைகடலிடையே அவைகளை ஓடச் செய்கிறீர்
அவற்றினருகேதான் வானத்துப் பறவைகள் குடியிருக்கின்றன�ளூ
மரக்கிளைகளிடையே இன்னிசை எழுப்புகின்றன

4. தம் உள்ளத்திலிருந்து மலைகள் மீது நீர் பாயச் செய்கிறீர்
உம் செயல்களின் பயனால் மாநிலம் நிறைவுறுகின்றது
கால்நடைகள் உண்ணப் புல் முளைக்கச் செய்கிறீர்ளூ
மனிதருக்குப் பயன்படப் பயிர்பச்சைகள் வளரச் செய்கிறீர்

5. ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை
அனைத்தையும் நீர் ஞானத்தோடு செய்து முடித்தீர்ளூ
உம் படைப்புகளால் நிறைந்துள்ளது வையகம்ளூ
நெஞ்சே நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக அல்லேலூயா

முதல் வாசகத்திற்குப் பின் செபம் (தி.பு. பக். 145)

2. மூன்றாம் வாசக முன்னுரை

**மூன்றாம் வாசகம்: (வாசக நூல் 1,பக். 427,வி.ப. 14:15~15:1)**

**"ஆண்டவர் மாண்புடன் புகழ்பெற்றார்..."** என்ற பதிலுரைப் பாடல்

ஆண்டவர்மாண்புடன் புகழ் பெற்றார்
எனவேஅவரைபாடிடுவோம் – ௨

1. குதிரை வீரனைக் குதிரையுடன்
அவரே கடலில் ஆழ்த்திவிட்டார் – ௨
எனக்கு மீட்பராய் அவரேஎன்
துணையும் காவலும் ஆயினரே

௨. இறைவன் எனக்கு இவர்தானே
இவரையே போற்றி புகழ்ந்திடுவேன் – ௨
என் முன்னோரின் இறைவன் இவர்
இவரை ஏற்றிப் புகழ்ந்திடுவேன்

போர்களில் அழிப்பவர் ஆண்டவராம்
ஆண்டவர் என்பது அவர் பெயராம்

மூன்றாம் வாசகத்திற்குப் பின் செபம் (தி.பு. பக். 146)

3. ஏழாம் வாசக முன்னுரை
**ஏழாம் வாசகம்: (வாசக நூல் 1,பக். 434,எசே 36:16-17அ, 18-28)**
**"கலைமான் நீரோடையை..."** என்ற பதிலுரைப் பாடல்

கலைமான்கள் நீரோடைத் தேடும்
எந்தன் இதயம் இறைவனை நாடும்
உள்ளத் தாகம் உந்தன் மீது
கொண்டபோது எனக்கு வேறென்னவேண்டும்?

காலம் தோன்றாப் பொழுதினிலே
கருணையில் என்னை நீ நினைத்தாய் (௨)
உயிரைத் தந்திடும் கருவினிலே
அருளினைப் பொழிந்து அரவணைத்தாய்
குயவன் கையாலே மண்பாண்டம் உடைந்திடும்
கதையின் நாயகன் நான் இன்று

**பாறை அரணாய் இருப்பவரே**
**நொறுங்கிய இதயம் நான் சுமந்தேன் (2)**
**காலை மாலை அறியாமல்**
**கண்ணீர் வடித்திடும் நிலையானேன்**
**சிதறிய மணிகளைக் கோர்த்து எடுத்தால்**
**அழகிய மணிமாலை நான் ஆவேன்**

ஏழாம் வாசகத்திற்குப் பின் செபம் (தி.பு. பக். 148)

**"உன்னதங்களிலே…"** கீதம் ~ ஆலயமணிகள் ஒலிக்கும். பீடத்தில் உள்ள மெழுகுவர்த்திகள் பாஸ்காதிரியிலிருந்து பற்றவைக்கப்படும்.

சபைமன்றாட்டு (தி.பு. பக். 149)

4. எட்டாம் வாசகமுன்னுரை
   **எட்டாம் வாசகம்: (வாசக நூல் 1,பக். 436,உரோ 6:3~11)**
   **அல்லேலூயா…** (குருவானவரால் ஆரம்பிக்கப்படும்)

5. ஒன்பதாம் வாசகம்
   (நற்செய்தி: A– 438, B & C– 439, வாசக நூல் 1)

## மறையுரை

- திருமுழுக்கு வழிபாடு (தி.பு. பக். 149)
- புனிதர்கள் மன்றாட்டு மாலை
- புதிய தண்ணீரை மந்திரித்தல் (தி.பு. பக். 152)
- திருமுழுக்கு வழங்குதல் (திருவாழ்வு புத்தகம் பக்.  )
  1. OC – Oleum Catechumenorum
  2. தண்ணீரால் கழுவுதல்
  3. SC – Sancta Chrisma
  4. வெண்ணிற ஆடை அளித்தல்
  5. எரியும் திரி வழங்குதல்
- வார்த்தைப் பாடுகளைப் புதிப்பித்தல் (தி.பு. பக். 154)
- தீர்த்தம் தெளித்தல் (தேவாலய வலப்புறமிருந்து…என்ற பாடல் பாடப்படும்)

**தேவாலயவலப்புறமிருந்து**
**தண்ணீர் புறப்படக் கண்டேன் – அல்லேலூயா**
**அந்தத் தண்ணீர் யாரிடம் வந்ததோ**

**அவர்கள் யாவருமே ஈடேற்றம் பெற்றுக் கூறுவர் அல்லேலூயா – 3**

**ஆண்டவரைப் போற்றுங்கள் ஏனெனில் அவர் நல்லவர்**
**அவரது இரக்கம் என்றென்றும் உள்ளது.**
**பிதாவும் சுதனும் தூய ஆவியும்**
**துதியும் புகழும் ஒன்றாய் பெறுக**
**ஆதியில் இருந்தது போல இன்றும் என்றும்**
**நித்தியமாகவும் ஆமென்.**

- **விசுவாச அறிக்கை** சொல்லப்படுவது **இல்லை**
- விசுவாசிகளின் மன்றாட்டு
- காணிக்கை மன்றாட்டு (தி.பு. பக். 157)
- தொடக்கவுரை (தி.பு. பக். 276)
- நற்கருணை மன்றாட்டு (நற்கருணை மன்றாட்டு 1 – 317 (அ) 3 – 330)
- திருவிருந்துச் சடங்கு (தி.பு. பக். 367)
- நன்றி மன்றாட்டு (தி.பு. பக். 157)
- சிறப்பு ஆசீர் (தி.பு. பக். 387 எண். 6)

**கவனிக்கப்படவேண்டியவை:**

- புதிய நெருப்பு தயாரித்து வைக்கவும்
  திருச்சடங்கு ஆரம்பிக்கும் போது அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- பாஸ்காதிரி நேர்த்தியாக அழகுப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- பாஸ்காதிரி மந்திரித்தபிறகு **"கிறிஸ்துவின் ஒளி இதோ"** என்று கூற மக்கள் **"இறைவனுக்கு நன்றி"** என்று பதிலுரைப்பர்.
- கோவிலின் நடுப்பகுதியில் நின்று **"கிறிஸ்துவின் ஒளி இதோ"** என்று கூறி மக்கள் பதிலளித்தபின் தங்கள் கையிலுள்ள மெழுகுவர்த்திகளை பாஸ்காதிரியிலிருந்து பற்ற வைத்துக்கொள்ளவும்.
- பாஸ்காதிரி பீடத்தை அடைந்து இறைவனை ஆர்ப்பரித்தபின் ஆலயத்தின் அனைத்து விளக்குகளும் ஏற்றப்படும்.
- இன்றைய இறைவார்த்தை வழிபாட்டில் 9 வாசகங்கள் வாசிக்கப்படுவது வழக்கம். ஆயினும் தேவைக்கேற்ப 5~ஆக குறைத்துக் கொள்ளலாம். குறைக்கப்பட்ட விரும்பத்தக்க வாசகங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. அதிலும் வாசகம் 3 (செங்கடலைக் கடத்தல்) மற்றும் அதன் பதிலுரைப் பாடல் (ஆண்டவர் மாண்புடன் புகழ்ப் பெற்றார்... என்ற பாடல்) கட்டாயம் இடம் பெறவேண்டும்.
- மூன்றாம் வாசகத்தின் தொடர்ச்சியாக அதன் பதிலுரைப்பாடல் அமைவதால் "இது ஆண்டவரின் அருள்வாக்கு" என்று சொல்லத் தேவையில்லை.

- எ.கா.:

  “…பாடியபாடல் பின்வருமாறு”– முதல் வாசகம்

  “ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார்…”–பதிலுரைப் பாடல்
- பழைய ஏற்ப்பாட்டிலிருந்து வாசகங்கள் வாசித்து முடித்தவுடன் “உன்னதங்களிலே” என்ற கீதம் குருவானவரால் ஆரம்பிக்கப்படும். அப்போது ஆலயமணிகள் ஒலிக்கும். அதுமுதல் ஆலயமணிகள் மீண்டும் ஒலிக்கத் துவங்கும்.
- அப்போதுதான் பாஸ்காதிரியிலிருந்து பீடத்தில் உள்ள மெழுகுவர்த்திகள் ஏற்றப்படவேண்டும்.
- உயிர்த்த இயேசுவின் சுருபத்தை திறந்துவிடவும்.
- திருமுகம் வாசித்து முடித்தவுடன் “அல்லேலூயா”குருவானவரால் கம்பீரமாகவும் ஆடம்பரமாகவும் ஆரம்பிக்கப்படும்.
- தீர்த்தம் மந்திரிக்க நீர் தயாராக இருக்கவேண்டும்.

  தீர்த்தம் மந்திரிக்கும் இடம் மற்றும் திருமுழுக்கு கொடுக்கும் இடத்திற்குஅருகில் ஒலிவாங்கி (wireless mic) இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

  பாஸ்காதிரி தீர்த்தம் மந்திரிக்கும் போது எடுத்து வரப்படும் (பாஸ்கா திரியை குரு நீரில் மும்முறை அமிழ்த்துவார்)

**திருமுழுக்குஅளித்தல்:**

1. OC
2. தண்ணீரால் கழுவுதல் (புதிதாக மந்திரிக்கப்பட்ட நீர்)
3. SC
4. வெண்ணிற ஆடை அளித்தல்.
5. மெழுகுவர்த்திஅளித்தல்

திருமுழுக்கு சடங்கு முடிந்த பிறகு குரு மக்கள்மீது தீர்த்தம் தெளிக்கிறார். அப்போது “தேவாலய வலப்புறமிருந்து…” என்ற பாடல் பாடப்படும் (இப்பாடல் பரிசுத்த ஆவியார் பெருவிழா வரையுள்ள அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் தீர்த்தம் தெளிக்கும்போது பாடப்படும்)

- திருமுழுக்கு வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்பட்டதால் **விசுவாச அறிக்கை** சொல்லப்படுவது **இல்லை.**
- இதன்பிறகு திருப்பலி வழக்கம்போல் நடைபெறும்.

**திருப்பலியின்போது மக்கள் மெழுகுவர்த்தி பிடித்திருக்க வேண்டிய பகுதிகள்:**

1. தொடக்க சடங்கு முதல் பாஸ்கா புகழுரை முடியும் வரை.
2. நற்செய்தி வாசிக்கப்படும் போது.
3. திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்துக்கொள்ளும் போது.
4. தூயவர் தூயவர் முதல் கர்த்தர் கற்ப்பித்த செபம் முடியும் வரை.

1~ 136, 2~ 145, 3~ 276, 4~ 317 (அ) 330, 5~ 367, 6~ 387 (அடையாளம்)

# ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா

## ஞாயிறு

**தயார் நிலையில் இருக்க வேண்டியவை**

1. திருப்பலி பொருட்கள், தங்கநிற திருப்பலி உடைகள்
2. திருவழிபாட்டு அமைப்பு
3. முன்னுரை
4. தொடக்கசடங்கு (தி.பு பக்: 251)
5. தீர்த்தம் தெளித்தல் (தீர்த்தம் புதிதாக மந்திரிக்கப்படுதில்லை மாறாக முதல் நாள் இரவில் மந்திரித்த தீர்த்தமே பயன்படுத்தப்படும் அப்போது “தேவாலய வலப்புறமிருந்து…” என்ற பாடல் பாடப்படும்).
6. சபைமன்றாட்டு (தி.பு பக்: 158)
7. முதல் வாசக முன்னுரை
8. முதல் வாசகம் (வாசக நூல்~ I பக்.440, தி.ப 10: 34அ, 37 ~ 43)
9. பதிலுரைப்பாடல்
10. இரண்டாம் வாசக முன்னுரை
11. இரண்டாம் வாசகம் (வாசக நூல்~ I பக்.442 கொலோ 3: 1~4)
12. தொடர்பாடல் (வாசக நூல்~ I பக்.443)
13. அல்லேலூயா (குருவானவரால் ஆரம்பிக்கப்படும்)
14. நற்செய்தி (வாசக நூல்~ I பக்.444 யோ 20:1~9)
15. மறையுரை
16. திருமுழுக்கு வார்த்தைபாடுகளை புதுப்பித்தல் (தி.பு பக்: 158) (அ) விசுவாச அறிக்கை
17. விசுவாசிகளின் மன்றாட்டு
18. காணிக்கை மன்றாட்டு (தி.பு பக்: 160)
19. தொடக்கவுரை (தி.பு பக்: 276)
20. நற்கருணை மன்றாட்டு (தி.பு பக்: 317 (அ) 330)
21. திருவிருந்துச் சடங்கு (தி.பு பக்: 367)
22. நன்றி மன்றாட்டு (தி.பு பக்: 360)
23. சிறப்பு ஆசீர் (தி.பு பக்: 387, எண் 6.)

**கவனிக்கப்பட வேண்டியவை:**

- இன்று, தீர்த்தம் புதிதாக மந்திரிக்கப்படுவதில்லை மாறாக திருவிழிப்புச் சடங்கில் மந்திரித்த தீர்த்தமே பயன்படுத்தப்படும் அப்போது “தேவாலய வலப்புறமிருந்து…” என்ற பாடல் பாடப்படும்.
- உன்னதங்களிலே குருவானவரால் ஆரம்பிக்கப்படும்.
- தொடர்பாடல் கட்டாயம் பாடப்படவோ (அ) வாசிக்கப்படவோ வேண்டும்.

- அல்லேலூயா குருவானவரால் ஆடம்பரமாக துவங்கப்படும் (அல்லே... லூ... யா, அல்லே... லூ... யா, அல்லே... லூ... யா எனத் தொடங்கும் பாரம்பரிய பாடல்.)
- பொதுவாக திருமுழுக்கு வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்படும் இல்லாவிடில் விசுவாச அறிக்கை இடம்பெறும்.
- "விசுவாசிகளின் மன்றாட்டுகளின் வரிசை பின்வருமாறு அமையும்,
    1. திருச்சபையின் தேவைகளுக்காக,
    2. நாட்டை ஆள்வோருக்காகவும் அனைத்துலகின் நலனுக்காகவும்,
    3. எவ்வகை நெருக்கடியாலும் வருந்துவோர்க்காக,
    4. அந்தந்த இடத்து மக்கள் சமுதாயத்திற்காக."

- உரோமை திருப்பலி புத்தகத்தின் பொதுப்போதனை, எண் : 46, பக். 30ழ

1 ~ 251, 2 ~ 158, 3 ~ 276, 4 ~ 317 (அ) 330, 5 ~ 367, 6 ~ 387 (அடையாளம்)

**குறிப்பு :**

திருப்பலி புத்தக பக்க எண்கள்: 1993 –ல் திருத்தப்பட்டு 2008~ல் வெளிவந்த பதிப்பின்படி குறிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் பொதுவாக பின்பற்றப்படுபவை. தெளிவுகளுக்கு பங்குத்தந்தையின் ஆலோசனையைப் பெறுக.

# புனித வாரத் திருப்பலி வழிபாட்டுக்கான முன்னுரைகள்

## குருத்து ஞாயிறு

### குருத்தோலைப் பவனி நற்செய்தி முன்னுரை: (மத் 21:1-11)

ஆரவாரத்தில், ஆர்ப்பரிப்பில், ஓசான்னாவில் ஆரம்பிக்கும் பவனி அழுகையில் முடியும் என்பது இயேசுவிற்குத் தெரியும். இருப்பினும் ஒருங்கிணைந்த மக்களின் உற்சாகத்தை ஏற்றுக்கொள்கிறார். பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்ற இஸ்ராயேல் மக்கள் மோயீசனின் தலைமையில் ஓர் இறைமக்கள் இயக்கமாக இணைந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி வழிநடந்ததுபோல் இயேசுவின் தலைமையில் புதிய சமூகம் படைக்கப் புறப்படுகிறது புதிய இஸ்ராயேல். பாலைவனத்தில் மோயீசனுக்கு எதிராக முணுமுணுத்த மக்கள் கூட்டத்தைப் போலவே இயேசுவைப் பின்தொடர்ந்தவர்களும் எதிர்க்கோ ம் எழுப்ப வெகு நேரம் எடுக்கவில்லை. எருசலேமிற்கும் கல்வாரிக்கும் அதிக தூரம் இல்லை. இலட்சியவாதிகள் - புதிய சமுதாயம் படைக்கப் புறப்படுபவர்கள் இதை நன்கு அறிந்திருத்தல் நல்லது. எதிர்ப்பு வரும் என்பதற்காகப் பயணத்தைப் பாதியிலேயே கைவிடுவதா? கூடாது! புகழ்ச்சியில் மயங்காதுஇ எதிர்ப்பில் கலங்காது இயேசு மக்களோடு புறப்படுவதை எடுத்துரைக்கும் நற்செய்தி வாசகத்தைக் கேட்போம்.

### குருத்தோலைப் பவனி முன்னுரை:

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே!

ஏழைகள் சார்பாக வாழ்ந்த இயேசு மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தார். திரண்டு வந்த மக்கள் கூட்டத்தைத் திசை திருப்பாது உண்மையான உரிமை வாழ்வை நோக்கி வழிநடத்துகிறார். ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கத்தை இயேசு வழி நடத்திய விதத்தை இன்று நாம் கொண்டாடக் கூடி நிற்கும் குருத்து ஞாயிறு விவரிக்கிறது.

இயேசுவை மெசியாவாக மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மகிழ்ச்சியால் "ஓசான்னா!" என்று ஆர்ப்பரிக்கின்றனர். வழிநெடுகிலும் வாழ்த்துக்கள் தெருக்கள் தோறும் கீதங்கள். பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை குதூகலிக்கின்றனர்.

இது ஒரு வித்தியாசமான பவனி! திட்டமிடப்பட்ட ஊர்வலமல்ல இது. முன்னேற்பாடு செய்யப்பட்டதன் பேரில் நடந்ததுமன்று. தானாக நிகழ்கிறது.

கோவேறு கழுதையில் அமர்வதன் மூலம் அடிமட்ட மக்களின் ஆற்றலை ஏற்கிறார் இயேசு. பெருவாரியான ஏழை மக்களோடு அன்றாடம் அவர் மேற்கொண்ட பயணத்தின் ஒரு பகுதிதான் இந்த பவனி. ஆடம்பரங்களை விரும்பித் தேடும் நம் ஒவ்வொருவருக்கும் இன்றைய பவனி ஒரு சவால்!

மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற பவனி வரவில்லை இயேசு. மாறாகஇ அதிகாரத்தைத் துறப்பதற்கும் இழப்பதற்கும் மக்களின் வரவேற்பை ஏற்கிறார். மக்களோடு தன்னை ஒன்றுபடுத்த மக்களோடு வழி நடக்கிறார் மனித நேயக் கடவுள். அதிகாரத்தையும் ஆடம்பரத்தையும் ஒதுக்கிவிட்டு சாதாரண மக்களோடு தோழமையை உருவாக்கிய இயேசுவே இன்றும் இந்த பவனியில் நம்மோடு வழிநடக்க உள்ளார். இந்த இயேசுவோடு எப்படி நாம் வழி நடப்பது? அதிகாரத்தை வெளிக் காட்டவா? ஆடம்பரத்தை எடுத்துக்காட்டவா? அரசத்தன்மையைப் பிரதிபலிக்கவா? "ஓசன்னா!" என்று ஆர்ப்பரிப்போமா? "சிலுவையில் அறையும்!" என்று கத்துவோமா? வாழ்க என்பதா? ஒழிக என்போமா? யார் சார்பாக இந்த பவனியில் நாம் பங்கெடுக்க உள்ளோம்? சற்று சிந்தித்து பார்போம்.

மக்களை அன்று ஒருங்கினைத்த இயேசுவோடு இன்று பயணம் செல்ல முன்வரும் நாமும் நமது ஆற்றலை உணர வேண்டும். இழந்த நம் உரிமைகளை மீண்டும் பெற ஓர் இயக்கமாக ஒருங்கிணைந்த இலட்சியப் பயணம் மேற்கொள்ளத் தயக்கம் இருத்தலாகாது. மாறாகஇ இயேசுவின் தலைமையின்கீழ் புதிய சமுதாயம் படைக்கத் தடைச் சுவர்களைத் தாண்டும் துணிவு நம்மில் எழத் தியான சிந்தனையுடன் பவனியில் பங்கெடுப்போம்! கைகளில் நாம் ஏந்தியிருக்கும் இளம் குருத்து ஓலைகளைப் போன்று நமது எண்ணங்களும் இலட்சியங்களும் இளமை குன்றாது இருக்கச் செப உணர்வுடன் பவனியில் கலந்துகொள்வோம்.

## குருத்தோலைப் பவனி முன் முகவுரை

குருத்தோலைப்பவனி இயேசுவின் வேதனை, துன்பம், பாடுகள், மரணம் இவற்றை நமக்கு சுட்டிக்காட்டும் கூறுகள். இன்று மனித சமுதாயத்தில் பல்வேறு தீய சக்திகள், மனமாறவிரும்பாத வெதுவெதுப்பான நிலை பிறரை மறக்கும் தன்னலப்போக்கு, துன்புறுத்தும் நோய் பதறவைக்கும் மரணம் அணையாது எரியும் துன்பங்கள் ஆகிய அடிமைத்தளையிலிருந்து நம்மை மீட்க இயேசு துவக்கிய வெற்றிப் பயணம், வீரப்பயணம், அன்புப்பயணம் தான் இந்த குருத்தோலைப் பவனி, இயேசுவுடன் இணைந்து இயேசுவின் வெற்றிக் கொடியான இந்த புனித குருத்தோலைகளைப் பெருமிதத்துடன் உயர்த்திப்பிடித்து இறைமகனின் இப்பவனியில் அவர் வழி நடப்போம். அவரோடு உயிர்த்தெழுவோம்.

## குருத்தோலைப் பவனி முன்னுரை

கடவுளின் சாயலில் படைக்கப் பட்டிருக்கின்ற நாம் அனைவரும் திருமுழுக்கால் கடவுளின் பிள்ளைகளாகி, நமது வாழ்வால் கடவுள் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற திட்டத்தை சுதந்திரமாக செயல்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவும் இதற்க்கு விதிவிலக்கு அல்ல. தனது தந்தையின் திட்டத்தை ஏற்று, அவரின் திட்டத்தை நிறைவேற்றவே இவ்வுலகுக்கு வந்தேன என உரைத்து அதை நிறைவேற்ற முனைந்தபோது அவர் எதிர்கொண்ட சாவல்கள் எண்ணிலடங்கா. இருப்பினும் நம்மை மீட்கும் தந்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதில் அவர் பின்வாங்கவில்லை. அவரின் அனைத்து முயற்சிக்கும் வெற்றி முழக்கமாக வருவதுதான் இந்தப் பவனி. இது வெற்றியின் பவனி. இந்த பவனியில் பாதைகள் மாறாலாம் ஆனால் பாதங்கள் மாறாது, இந்த பவனியில் இடங்கள் மாறலாம் ஆனால் இலட்சியமாகக் கொண்டது. இயேசுவை அரசராக நமது தலைவராக ஏற்றுக்கொண்ட நாம் அவரைப்போலவே இலட்சியப் பயணம் செய்ய வேண்டுமென்றால், இன்றைக்கு நாம் அடையும் மகிழ்ச்சி நிலைபெற வேண்டுமென்றால் களைவோம் நம்மில் உள்ள குழும, சாதி, மற்றும் பணக்கார ஏழை வித்தியாசங்களை, இந்த ஒரு சமத்துவப் பணியை ஆற்றிவரும் பங்கு குருவுக்கு நமது ஒத்துழைப்பை தருவோம் என உறுதியெடுப்போம். 2000 ஆண்டுகளுக்கு முன் முடிந்த இயேசுவின் இலட்சியப்பயணம் இன்றும் தொடர வேண்டுமென்றால், நமது வெற்றி முழக்கம் அர்த்தம் பெற வேண்டுமென்றால் குருத்து ஓலைகளை ஏந்தியுள்ள நாம் ஒவ்வொருவரும் பிரிவினையை ஒழிக்கும் மனதோடு வெற்றிமுழக்கமிடுவோம். ஆயரோடும், பங்கு குருவோடும், ஒவ்வொருவருடனும் இணைந்து ஒற்றுமையாக வாழ்வோம் என் முடிவெடுத்து இப்பயணத்தை தொடர்வோம்.

## (பவனியின் போது சொல்லலாம்)

1. தாவிதின் அரசே
2. பாவிகளின் பங்காளனே
3. அமைதியின் இருப்பிடமே
4. அன்பிற்கு இலக்கணமே

உங்கள் பதில்……… ஓசன்னா பாடியே இயேசுவின் பின்செல்வோம்.

5. சமத்துவத்தின் சரித்திரமே
6. ஏழைகளின் தேற்றருவே
7. நீதியின் நிறைவே
8. அநீதிக்கு அந்நியனே

உங்கள் பதில்………….. குருத்தோலை ஏந்தி ஓசன்னா பாடுவோம்.

9. துன்பத்தில் துணையாளனே
10. எங்களை மீட்க வந்தவரே
11. தாவிதுகுல சிங்கமே
12. இறைவிருப்பத்தை நிறைவு செய்பவரே

உங்கள் பதில்………. ஆண்டவரே வாழி

13. இறைத்தந்தையின் சாயலே
14. எங்களுக்காக இன்னுயிரை ஈந்தவரே
15. எளியோரின் ஆறுதலே
16. நோயாளிகளின் மருத்துவரே

உங்கள் பதில்……….. வாழ்க வாழ்கவே

17. பாவிகளின் பங்காளனே
18. அமைதியின் இருப்பிடமே
19. அன்பிற்கு இலக்கணமே
20. இறைவிருப்பத்தை நிறைவு செய்பவரே

உங்கள் பதில்……………. குருத்தோலை ஏந்தி ஓசன்னா பாடுவோம்.

21. இறைத்தந்தையின் சாயலே
22. எங்களுக்காக இன்னுயிரை ஈந்தவரே
23. எளியோரின் ஆறுதலே
24. நோயாளிகளின் மருத்துவரே

உங்கள் பதில்………. ஆண்டவரே வாழி

## குருத்து ஞாயிறு திருப்பலி

### குருத்து ஞாயிறு திருப்பலி திருப்பலி முன்னுரை – 1

இயேசுவின் திருப்பாடுகளின் வாரத்தில் இன்றைய நாள் முதலும் உச்சமுமாக உள்ளது. இதுநாள்வரை பல வல்ல செயல்களின் வழியாக மக்களை ஆர்ப்பரிப்பில் ஆழ்த்திய நம் ஆண்டவர் இயேசு இன்று தம் சாவை ஏற்க எருசலேம் நகருக்குள் செல்லவிருக்கிறார்.

இன்று அதே நிகழ்வு நம் உள்ளத்தில் நடைபெறவே இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது. அன்றைய எருசலேம் நகரம் இன்று நம் இதயமாக உள்ளது. ‘‘அவர் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரையும் கொடுப்பதற்கு வந்தார்’’ என்று மத் 20:28-ல் கூறுவது போல, நம் பாவங்களுக்கு கழுவாயாக, நம் தீய சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், பேச்சுகளுக்கும், பழக்கங்களுக்கும் ஈடாக அவர் தம் உயிரைக் கொடுக்க வருகிறார்.

‘மீட்பு’ என்ற சொல்லுக்கு அடிமைத்தலையிலிருந்தோ, சிறையிலிருந்தோ, சிக்குண்ட நிலையிலிருந்தோ மீட்டெடுப்பது என்பது பொருள். ஆம் நம்முடைய வாழ்கை இவ்வாறு பல முறைகளில் மாட்டிக்கொண்டு தவிக்கியது. யாரேனும் என்னை விடுவக்க மாட்டார்களா? என்ற உங்கள் ஆன்மாவின் கதரல் விண்முட்டுகிறது…கேட்கவில்லையா?

அதிகபட்ச குடிவெறி எதற்கு? முப்பது நாள் மோகத்துக்காக முக்காலமும் வேதனை வேண்டுமா? கீழ்படியாமையால் கீழ்த்தரப்பட வேண்டுமா? ஒருவொருக்கொருவர் செய்யும் துரோகத்தால் வருவது மீளா துன்பமல்லவா? எத்தனை முறை பலரின் துன்பத்தைக் கண்டும் காணாமலும், மனமிரங்கி உதவாமலும், மண்ணாகும் நாம், பண ஆசையால் மதிமயங்கி இருந்திருப்போம். இவ்வாறு பல இடர்பாடுகள் மத்தியில் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல தமிழகத்தில் நிலவும் அரசியல் பிரச்சனைகள், கலாச்சார முடக்குவாதங்கள், இந்திய அரசியல் மாற்றங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அனைத்தும் நம்மை ஒரு உலுக்கு உலுக்கி விடுகிறது.

இப்படிப்பட்ட பல அடிமைத்தலையிலிருந்து விடுவிக்க நம்மை தயாரிப்பதற்காகவே இன்றைய வழிபாடு அழைப்பு விடுக்கிறது.

தருமத்தின் வாழ்தனை சூது கவ்வும் தருமம் மருபடியும் வெல்லும் என்ற பாரதியின் வாய்ச்சொல் வாழ்வுப் பாடமாகிட இத்திருப்பலியில் தகுந்த முறையில் பங்கெடுப்போம்.

## குருத்து ஞாயிறு திருப்பலி திருப்பலி முன்னுரை – 2

இன்று நம் தாய் திருச்சபையானது புனித வாரத்திற்கு புனிதமாக நம்மை அழைத்துச் செல்ல குருத்தோலைத் திருநாளை சிறப்பிக்கின்றது. யூத மக்கள் தங்கள் வாழ்வில் உண்மையான விடுதலை, நிறைவான புதுவாழ்வு தருகின்ற அரசராக இயேசு இருப்பார், இவர் அனைவருக்கும் ஆண்டவர் அமைதியின் அரசர், அன்பின் ஊற்று எனக்கருதி தங்கள் கைகளில் ஒலிவ மரக்கிளைகளுடன் வழியில் ஆடைகளை விரித்து சிறுவர், பெரியோர், யாவரும் ஓசன்னா ஓசன்னா ஆண்டவரே வாழி என ஆடம்பரத்துடனும், ஆரவாரத்துடனும் இயேசுவை வரவேற்றனர்.

அத்தகைய நாளை நினைவு கூறும் நாம், நம் வாழ்வில் இழந்த அமைதியை, மன மகிழ்ச்சியை, முழு புனித விடுதலையை, மன்னிப்பை, மீட்பை தர நம் உள்ளத்தில் வருகின்றார் நம் இறை வன். இந்த மீட்பரை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்க இத்திருப்பலியில் ஈடுபாட்டுடன் பங்கேற்போம்.

## குருத்து ஞாயிறு இறைவாக்கு வழிபாடு

**முதல் வாசக முன்னுரை: (எசா 50: 4-7)**

இலட்சியப் பயணத்தை மேற்கொள்பவர்களுக்கு வருகின்ற துன்பங்கள் ஏராளம். நினைத்துப் பார்க்க இயலாத விதங்களில் நிந்தையும் அவமானமும் இதயத்தைத் தாக்குகின்றனஇ நெஞ்சை நொறுக்குகின்றன. சாதாரண மனிதர்கள் சோர்ந்துவிடும் பாதையில் தைரியமாகத் துணிந்து எதிர் நீச்சலடிக்கின்றவன் இலட்சியவாதி. இயேசுவின் வாழ்வு ஒரு விடுதலைப் பயணம். இதற்குப் பணயமாகத் தன் உயிரையேத் தியாகம் செய்கின்ற செம்மல் இயேசு. எதிர்ப்புகள்இ ஏமாற்றுக்கள்இ ஏளனங்கள் எதைக் கண்டும் இயேசு பயப்படவில்லை பின்வாங்கவில்லை. தைரியமாகச் செயல்படுகிறார். காரணம்: கடவுள்மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை. நாம் நமக்காக வாழாமல் பிறருக்காக வாழும்போது நமக்குத் துணை கடவுள் ஒருவரே. இதுதான் இயேசுவின் அனுபவம். இதை இயேசுவின் காலத்திற்கு முன்பே முன்னறிவித்தார் இறைவாக்கினர் இசையாஸ். எனவேஇ அத்தகைய நேஞ்சைத்தொடும் அவரின் வார்த்தைகளைக் கவனமுடன் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (பிலி 2: 6-11)**

மனிதனைத் தேடி வருவது கடவுளின் இயல்பு. மனிதக் கடவுள் இயேசுஇ பாவிகளாகிய மனிதர்களைத் தேடி வருகிறார். மனிதனின் இறுதி இயலாமையான சாவில் பங்கேற்கிறார். அடிமையைப்போல் தன்னைத் தாழ்த்துகிறார். காரணம்: தன் குறிக்கோள். மனித விடுதலை வழங்குவதுதானே இயேசுவின் இலட்சியம்! அதை நிறைவேற்ற இயேசு செய்ததென்ன? இதனை தூய சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து விளக்குவதை நாம் கேட்போம்.

**நற்செய்தி வாசக முன்னுரை: (மத் 26: 14-27, 66)**

சாதாரண மனிதர்கள் பார்வையில் இயேசுவின் பாடுகள் புதிராக அமைகிறது. ஆனால்இ சமுதாய நோக்குடைய ஆழ்ந்த சிந்தனையாளர்களுக்கு இயேசுவின் வாழ்வுஇ பாடுகள்இ மரணம் யாவும் நிறைந்த அர்த்தத்தையும்இ ஆறுதலையும் அளிக்கிறது. மாற்றத்தை உருவாக்க நினைக்கும் ஒவ்வொரு இலட்சியவாதியும் சந்திக்கின்ற துன்பங்கள் இயேசுவின் பாடுகளில் பங்கெடுப்பதேயாகும். குறுகிய நம் வாழ்வில் நமக்கென நாம் வகுத்துள்ள இலட்சியம் என்ன? அதை அடைய நமது முயற்சிகள் என்ன? பாடுகளின் வரலாற்றை வாசிக்கும் போது இதே கேள்விகளை நம்மில் எழுப்புவோம். அர்த்தமுள்ள வாழ்வு வாழ முற்படுவோம்! முயற்சி எடுப்போம்!

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள்:

- கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவான இதயத்தை நாங்கள் எங்களில் உருவாக்க விழையும் இறைவாஇ இயேசுவின் பாடுகளைப்பற்றி அதிகமாகச் சிந்தித்து செபிக்கின்ற இந்த வாரம் எங்களில் அடிப்படையான மாற்றத்தை உருவாக்கி புத்துணர்ச்சியை வளர்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- பலியை அல்ல இரக்கத்தையே விரும்பும் இறைவாஇ அர்த்தமுள்ள புனித வார வழிபாட்டு நிகழ்ச்சிகளில் வெறும் சடங்கிற்காகவும் கடமைக்காகவும் நாங்கள் பங்கேற்காதுஇ இயேசுவின் பாடுகள் உணர்த்தும் மதிப்பீடுகளை வாழ்வில் என்றும் கடைப்பிடித்து நடக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது என்றுரைத்த இயேசுவேஇ உம்மைப்போன்று உலக மக்களின் நல்வாழ்விற்காக நாங்களும் எங்களை முழுமையாக அர்ப்பணிக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.




## ஆண்டவரின் இராவுணவுப் பெருவிழா



1. விரிவுரையாளர் :
2. முன்னுரை :

**பிரிவு – ஒன்று : இறைவாக்கு வழிபாடு**

1. முதல் வாசக முன்னுரை :
2. முதல் வாசகம் **(விப.12:1-8,11-14)** :
3. இரண்டாம் வாசக முன்னுரை :
4. இரண்டாம் வாசகம் **(1கொரி 11:23-26)** :
5. நற்செய்தி வாசகம் **(யோவா 13:1-15):**

**பிரிவு – இரண்டு : பாதம் கழுவும் சடங்கு**

1. முன்னுரை :
2. விசுவாசிகளின் மன்றாட்டு :

**பிரிவு – மூன்று : நற்கருணை வழிபாடு**

**பிரிவு – நான்கு : நற்கருணை பவனி**

1. விரிவுரையாள் :
2. நற்கருணை இடமாற்றம் முன்னுரை :

## பெரிய வியாழன் திருப்பலி

**விரிவுரையாளர்:**

ஆண்டவரின் இராவுணவு விழா. இன்று புனித வாரத்தின் முக்கியமான நாள். இயேசுவோடு இணைந்து பாஸ்கா விழாவை கொண்டாட திருச்சபை நமக்கு அழைப்பு விடுகிறது. இந்த அழைப்பை ஏற்று நாமும் 12 சீடர்களோடு இணைந்து இத்திரு விருந்திலே பங்குகொள்வோம். இந்த விழா இறைவாக்கு வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு மற்றும் நற்கருணை இடமாற்று பவனி என பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் நாம் பக்தியோடு பங்கேற்போம். இப்பொழுது முன்னுரை வாசிக்கப்படுகிறது.

## பெரிய வியாழன் திருப்பலி முன்னுரை – 1

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே இன்றைய புனித வியாழன் கொண்டாட்டமானது மூன்று முக்கிய அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவை –

- இறைவாக்கு வழிபாடு
- பாதம் கழுவும் சடங்கு மற்றும்
- நற்கருணை இடமாற்று பவனி

மேலும் இன்றைய நாளில் நாம் மூன்று, ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிகழ்ச்சிகளை நினைவு கூறுகின்றோம். அவை

- ஆண்டவர் தம் மக்கள்மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் பாஸ்கா விழா.
- அந்த அன்பை அடையாள முறையில் நிரந்தராமக வெளிக்கண்களுக்குப் புலப்படும் வகையில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கொண்டாடிய நற்கருணை விழா.
- இந்த நற்கருணை பிரசன்னத்தை உலகத்திலேயே தொடர்ந்து நிலைத்து நிற்பதற்காக இறைப்பணியாளர்களை ஏற்படுத்திய குருத்துவ விழா.

இம்மூன்று விழாக்களையும் இன்று ஒரே திருவழிபாட்டில் நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம். பணி வாழ்க்கை பரிசேய வாழ்க்கை இல்லை என்பதனை இயேசு உலகிற்கு எண்பித்த நாள் இந்நாள். தலைவன் பணியாளன் என்பதனைச் சீடர்களின் பாதங்களைக் கழுவி மாதிரி காட்டுகிறார். பணி குருத்துவம், மக்களுக்குப் பணியாற்றும் கருவி என்பதனைச் சொல்லிக் காட்டுகிறார். திருமுழுக்கின் வழியாக பொது குருத்துவத்தில் பங்கேற்கும் நாம் அனைவரும் பணியாளர்களே. இதில் வேறுபாடு ஏதுமில்லை என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

இயேசு நற்கருணையாக மாறி தன்னையே நமக்கு உணவாக தருகின்றார். அவரை உட்கொள்ளும் நாம், நம் நடைமுறை வாழ்க்கையில் நற்கருணையாக மாற வேண்டும். ஆலயத்தில் இயேசுவை உட்கொள்ளும் நாம், வீதிகளுக்குச் சென்று நமது உழைப்பையும் திறமைகளையும் பிறருக்காக கொடுக்க வேண்டும். இயேசுவைப் போன்று நாமும் உடைபட வேண்டும். இயேசுவை உணவாக உட்கொள்ளும் நாம், புதிய வேகம் பெற்ற மறு கிறிஸ்துவாக மக்கள் மத்தியில் உருவெடுக்க வேண்டும். இத்தகைய சிந்தனைகளை நம்மில் வளர்த்தெடுக்க இத்திருப்பலியில் வரம் கேட்டு மன்றாடுவோம்.

## பெரிய வியாழன் திருப்பலி முன்னுரை ~ 2

ஓர் இறைமக்கள் திருக்கூட்டமாக இங்கு குழுமியிருக்கும் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்இ அரச குருத்துவத் திருக்கூட்டம் இறைவனுக்குச் சொந்தமான மக்கள். உன்னதமான இந்த மகிமையை நமக்குப் பெற்றுத் தந்தவர் இயேசு. அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த நம்மை ஓர் இனமாகக் கூட்டி சேர்த்த வல்லமை இயேசுவினுடையது. மக்களினமாகவே இல்லாமல் வாழ்விழந்துஇ வழியிழந்து தவித்த நம்மை ஓர் இயக்கமாக இணைந்துள்ளது அவர் பெருமையே!

இது நிகழ்ந்தது எவ்வாறு?

நாம் இன்று கொண்டாடும் இயேசுவின் இறுதி இரவுணவு விழா இந்த வரலாற்று நிகழ்வை விளக்குகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள்இ கடவுள் தங்களுக்குத் தந்த விடுதலை நாளை மகிழ்ச்சியோடு நினைவுகூர்ந்தார். ஆண்டுதோறும் நினைவுபடுத்திப் பார்த்தாலும் விடுதலை விடியவே இல்லை. வாழ்வில் மாற்றத்தைக் காணாமலே மக்கள் வாழ்ந்தனர்.

காரணம் : மோயீசனைப் போன்ற தலைவர்கள் மக்களிடையே தோன்றவில்லை. யூத மதத் தலைவர்கள் மக்களைச் சுரண்டுவதில் கவனம் செலுத்தினர். உரோமையர்கள் மக்களை அடிமைப்படுத்தி அச்சுறுத்துவதையே ஆட்சியாகக் கருதினர். இருண்ட இச்சூழலில் இயேசுவின் வாழ்வு வித்தியாசமாக அமைகிறது. விடுதலை எங்கிருந்து வரும் என்று ஏக்கத்தோடு நின்ற மக்களுக்கு இயேசுவில் புதிய நம்பிக்கைப் பிறந்தது.

இஸ்ராயேலரின் விடுதலை நாளை இயேசுவும் நினைவுகூர்கிறார். ஆனால்இ கொண்டாட்டம் வித்தியாசமாக ஏற்பாடாகிறது. பழையதை பெருமையோடு நினைப்பதால் மட்டும்இ புதுவாழ்வு புலர்ந்து விடுவதில்லை. மாறாகஇ வரலாறு புதிய உணர்வுகளைத் தரவேண்டும். பழையதைக் கடந்து புத்துலக வாசலைத் திறந்து காட்டாத வரலாறு செத்துவிடுகிறது. செல்லரித்த வரலாற்றை நினைத்துப்பார்ப்பதில் என்ன லாபம்? இயேசுவின் பாஸ்கா கொண்டாட்டம் புதிய வானகமும் வையகமும் உருவாவதற்கான புரட்சியைத் தோற்றுவிக்கிறது.

தன்னுயிரை உலக மாந்தருக்காகக் கையளிக்காதவன் தலைவன் அல்லன். மக்கள் மடியும்போது மனமிளகாதவன் தலைவனா?

சீடர்கள் காலம் காலமாக நினைத்துப் பார்க்கிற விதத்தில் அவர்களே நினைத்துப் பார்க்காத காரியங்களை இயேசு செய்கிறார்.

சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார். தன் உடலையும் உதிரத்தையும் உணவாகவும் பானமாகவும் தருகிறார். வெறும் சடங்காக அல்ல. தொடர்ந்து நிகழ – சீடர்கள் இயேசுவின் நினைவாகச் செய்யவேண்டும் என்று பணிக்கிறார்.

தன்னையே உடைத்து உலகினருக்காக அர்ப்பணிப்பதே இயேசுவின் குருத்துவம். இந்த குருத்துவத்தில் நாம் பங்கேற்க இன்று அழைக்கப் படுகிறோம்.

இயேசுவின் இலட்சியம் நமக்கும் தேவைப்படுகிறது. நாமும் நம்மைப் பிறருக்காக அர்ப்பணிக்கவேண்டும். அர்ப்பணம் நமது குடும்பத்தில் ஆரம்பிக்கவேண்டும் குடும்பத்தைத் தாண்டி பங்குஇ சமூகம் இவற்றை உள்ளடக்கவேண்டும். இதற்காக இன்று நாம் செபிப்போம். அர்த்தமுள்ள இன்றைய வழிபாட்டு நிகழ்வுகளின் உள்ளர்த்தத்தை உணர்ந்து பங்கெடுப்போம். இயேசுவின் அர்ப்பண உணர்வில் கொஞ்சமேனும் நமக்கும் ஏற்பட வழிபாட்டில் நம்மை ஈடுபடுத்துவோம்!

## பெரிய வியாழன் திருப்பலி முன்னுரை – 3

பெரிய வியாழன் அல்லது புனித வியாழன் என்பது கடன் திருநாள். ஆங்கிலத்தில் ஆயரனெல வூரசளனயல என அழைக்கப்படுகிறது. இலத்தினில் ஆயனெயவரஅ என்பதற்கு கட்டளை என்பது பொருள். இயேசு தம் சீடர்களுக்கு அளித்த புதிய கட்டளையை நினைவு கூறும் வகையில் இந்நாள் இப்பெயர் பெற்றது.

இயேசு தந்த புதிய கட்டளை 'நான் உங்களை அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள் என்பது.'

இந்த விழா நமக்கு பகிர்தலை வெளிப்படுத்துகிறது. மன்னிக்கும் குணத்தை நம்மிடம் எதிர்பார்க்கிறது. சமூக விடுதலை பொருளாதார விடுதலை, ஆன்மீக விடுதலை இவற்றை மையப்படுத்துகிறது.

இயேசுவின் இறுதி இராவுணவு விழாவை நாம் இன்று கொண்டாடுகிறோம். இவ்விழாவில் இயேசு நமக்கு தரும் பாடம் இது தான். தலைவனாக இருக்க விரும்புகிறவன் முதலில் பணியாளனாக மாற வேண்டும் எனக் கூறி பாதங்களை கழுவினார். எல்லோரும் சமமாக வாழ வேண்டும் என கூறி அனைத்து தரப்பிலிருந்தும் 12 சீடர்களை அழைத்து சமபந்தி கொண்டாடி ஒற்றுமைக்கு வழிவகுத்தார். தன்னையே பிறருக்காக கையளிப்பதன் முன் அடையாளமாக இரசத்தையும் அவ்வாறே பகிர்ந்து கொடுத்தார்.

மனுக்குலம் மாண்புற, தனிமனித அன்பும், சமூக பகிர்தலும் அடிப்படையாகும். ஒருவரிடம் உள்ளதை மற்றவர்க்கு பகிர்ந்து கொடுக்கும் போது, பகைமை மறந்து ஒற்றுமை மலர்கிறது. மகிழ்ச்சி ஓங்குகிறது. இதையே இவ்விழா உணர்த்துகிறது.

இன்றைய விழா, அன்பின் விழாவாக அர்ச்சிப்பு விழாவாக அமைந்துள்ளது.

**அன்பின் விழா:**

இயேசு தம் சீடர்களிடம் நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருந்தால் தான் நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்துக் கொள்வார்கள். (லூக் 22:17–18)

**பகிர்தலின் விழா:**

(நற்கருணை ஏற்படுத்தியது) இயேசு அப்ப, இரச வடிவில் தன்னை முற்றிலும் நமக்காக பகிர்ந்தளித்த பகிர்தலின் விழா.

**அர்ச்சிப்பு விழா:**

இயேசு "தன் சீடர்கள் நோய்களை குணமாக்கவும் இறையரசைப் பற்றிய செய்தியை அறிவிக்கவும், அவர்களை அர்ச்சித்து அனுப்பினார்" (லூக் 9:1–3).

குருக்கள் இறையன்பில் நிரப்பப்பட்டு புனிதத்தால் அர்ச்சிக்கப்பட்டு, பிறர் அன்பில் வளர்ச்சியடைந்து. இறை சமுகத்தை உருவாக்கும் இறைபணியாளர்களாக அனுப்பப்படுகிறார்கள். இந்நாளில் இயேசு நமக்கு வாழ்ந்து காட்டிய நெறி முறைகளை கண்டுபிடித்து பகிரும் மனப்பான்மை, சேவை செய்யும் உள்ளம், விட்டுக் கொடுக்கம் மனப்பாங்கு பெற செபிப்போம். குறிப்பாக, குருக்களுக்காக விசேஷமாக இந்திருவழிபாட்டு கொண்டாட்டத்தில் செபிப்போம்.

## பெரிய வியாழன் இறைவாக்கு வழிபாடு ~ 1

### முதல் வாசக முன்னுரை: (விப 12:1~8, 11~14)

மனித வாழ்வில், வரலாற்றில் ஈடுபடுகின்றவர் விவிலியக் கடவுள். மனித துன்பத்தில் ஆனந்தமடைபவர் அல்ல அவர். மாறாகஇமனித துன்பத்தைத் துடைக்க முன்வருகிறார். மக்களை அநியாயமாகத் துன்புறுத்துபவர்களைத் தண்டிக்கிறார். துன்பப்படுகிறவர் சார்பாக நிற்கிறார்.அதனால் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றாக இணைகின்றனர் வெற்றி காண்கின்றனர். மனித முழுவிடுதலையில் மகிழ்ச்சியடைகின்ற கடவுள் வரலாறு படைக்கிறார். இந்த வரலாற்றை நினைவுகூரவேண்டும் என்று பணிக்கிறார். தனது பெருமைக்காக அல்லாமல் மக்கள் வாழ்வில் தான் கொண்டுள்ள அக்கரையை மனிதர்கள் உணர்ந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்று விழைகிறார். கடவுள் அருளும் விடுதலையை வாழ நாம் தயாரா? வாசக வார்த்தைகளை வாழ்வாக மாற்றுவோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை: (1கொரி 11:23~26)

கடைசி இராவுணவில் இயேசு தன்னையே உடலாகவும், இரத்தமாகவும் உலகிற்கு கையளித்தது கட்டுக் கதையல்ல கற்பனையுமல்ல, மாறாக உண்மையான வரலாற்று நிகழ்ச்சி. இது வேடிக்கையான வி யமல்ல. நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய செயல். அடையாளமாகக் கொண்டாடினாலும்இதகுதியோடு பங்கெடுக்காதிருந்தால் பயன்வருவதில்லை. இயேசுவைப்போன்று நம்மை நாம் பிறருக்குக் கையளிப்பதுதான் தகுதி. நம்மிடம் தகுதியிருக்கிறதா?அழைப்பு விடுவிக்கும் தூய சின்னப்பரின் வார்த்தைகள் நம் வாழ்வைத் தொடட்டும்.

### நற்செய்தி வாசக முன்னுரை: (யோவா 13:1~15)

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பலன் தரும்.

வாழ்வை இழந்தால்தான் நிறை வாழ்வு விடியும்!

நண்பனுக்காக உயிரையும் தியாகம் செய்வது நட்பு.

இயேசு வரலாற்றில் நிலைபெறுவது இதனால்தான். தியாகத்திற்குஇயேசுவைத் தவிர்த்தால் உதாரணம் வேறு ஏது? நெஞ்சைத் தொடும் செயல்கள் நம்மையெல்லாம் வியப்பிலாழ்த்துகிறது. ஆண்டவரும் போதகருமான அவர் இவ்வாறு செய்தாரானால் அவர் மக்கள் நாம் என்ன செய்ய வேண்டும்? யோவான் நற்செய்தி விவரிக்கும் உருக்கமான காட்சி நம் உள்ளத்தைத் தொடட்டும் எண்ணத்தை மாற்றட்டும்.

# பெரிய வியாழன் இறைவார்த்தை வழிபாடு ~ 2

## முதல் வாசக முன்னுரை: (விப 12:1~8, 11~14)

நம் இறைவன் அடிமை வாழ்வை வெறுக்கின்ற இறைவன். அடிமைப்பட்ட இஸ்ராயேல் மக்களை விடுதலை வாழ்வுக்கு அழைத்து வருமுன் செம்மறியைத் தயாரித்து உண்ணும் முறையை வெளிப்படுத்தினார். இந்த செம்மறியின் இரத்தமே அவர்களை அடிமைத்தளையிலிருந்து காக்கும் அடையாளமாக அமைகிறது. நம்மையும் பாவ அடிமைத்தளையிலிருந்து நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் முன் அடையாளமாக கிறிஸ்து விளங்குவதை இவ்வாசகம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

## இரண்டாம் வாசக முன்னுரை: (1கொரி 11:23~26)

நற்கருணை பலி இயேசுவின் கல்வாரி பலியின் பிரதிபலிப்பு என்பதை இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் வலியுறுத்துகிறார். எனவே நற்கருணை விருந்தில் பங்கு கொள்ளும் நாம் அவரது மரணத்தை நம் வாழ்வில் அறிக்கையிட கடமைப்பட்டு இருக்கின்றோம் என்பதை இவ்வாசகம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

# பாதம் கழுவும் நிகழ்வு



## பாதம் கழுவும் சடங்கு முன்னுரை ~ 1

இஸ்ராயேல் நாட்டில் பயணத்திற்குபின் தலைவனின் பாதங்களை வேலையாட்கள் கழுவுவது வழக்கத்தில் இருந்த செயல். ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் தண்ணீர் நிரம்பிய தொட்டியும், வருபவர்களின் கால்களைக் கழுவ ஒரு அடிமையையும் நியமித்திருப்பார்கள். அவ்வாறே விருந்தினர்கள் வரும்போதுகூட அவர்களின் பாதங்களைக் கழுவி விருந்திற்கு அழைத்து வருவது அடிமையின் வேலையாகவும் இருந்தது. ஆனால் அதே சமுதாயத்தில் பிறந்த இயேசு தனது செயல்பாடுகளில் வித்தியாசமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்கிறார்.

இயேசுவின் பணி பாதத்திலிருந்து ஆரம்பிக்கிறது. புழுதியில்இ சகதியில்இ சேற்றில் நடந்த பாதங்களைக் கழுவுகிறார் வரலாற்று நாயகன் இயேசு. மனித பலம்இ சக்தி பாதத்தில்தான் தேங்கிக் கிடக்கிறது. மனித பலவீனங்களுக்கும் இந்த பாதங்களே காரணம். கால்போன போக்கில் நடக்க ஆரம்பித்தால் கரை சேருவது கடினம்! பாதங்கள் பக்குவப்படுத்தப்பட்டு விட்டால் வாழ்வே மாறிவிடும். பாவியான பெண் இயேசுவின் பாதத்தைக் கண்ணீரால் கழுவி கூந்தலால் துடைப்பதும்இமரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்வதும் பாதங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை எண்பிக்கின்றன.ஆதனால்தான்இ இயேசு இறுதி இராவுணவில் தானே முன்வந்து சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார்.

இச்சடங்கு நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? இறைவனும் மனிதனுமாகிய இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலம் தாழ்ச்சி என்ற பாடத்தைக் கற்பிக்கிறார். இலட்சங்களுக்காக இலட்சிய வாழ்வை விலை பேசும் குறுகிய மனம் படைத்த நம் தலைவர்கள் மத்தியில், இயேசு தன்னை வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். அடிமைகள் மட்டுமல்ல அருட்பணியாளர்களும், கிறிஸ்தவர்களும் அடுத்தவரின் பிணியாளர்களாய் அல்லாமல் பணியாளர்களாய் வாழ அழைப்பு விடுக்கிறார் இயேசு. நாமும் தலைவன் என்ற அதிகாரப் போக்கிலிருந்து மாறி, பணியாளனாய் பிறருக்கு பணிவிடைப் புரிய எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்ற சிந்தனைகளோடு இந்த பாதம் கழுவும் நிகழ்வில் பங்கெடுப்போம்.

## பாதம் கழுவும் சடங்கு முன்னுரை – 2

இஸ்ராயேல் நாட்டில் பயணத்திற்குபின் தலைவனின் பாதங்களை வேலையாட்கள் கழுவுவது வழக்கத்தில் இருந்த செயல். அத்தகைய செயல் இன்று தலைமை வழிபாட்டு முறைக்கு வந்து சீர்கெட்டு கிடக்கிறது. தலைவனின் பாதங்களை கழுவுவது மட்டுமல்ல, தலைவனின் காலில் விழுந்து வணங்குவது, தலைவனுக்காய் தீக்குளித்தல் இன்றைய கலாச்சாரமாய் இருக்கின்றன. இத்தகைய அடிமைக் கலாச்சாரங்களை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டு புதிய கலாச்சாரத்தை, மனித நேயத்தை மதிக்கும் கலாச்சாரத்தை, உருவாக்கவே வந்திருக்கின்றேன் என்று தன் சீடர்களின் பாதங்களை இயேசு கழுவினார்.

## பாதம் கழுவும் சடங்கு முன்னுரை – 3

மானம்கெட்டு, சுயமரியாதை இழந்து, அரசியல் ஆதாயத்திற்காக பிறர் காலில் விழும் இந்த சந்தர்ப்பவாத உலகில் பிறர்க்காக தன்னையே இழந்து சுயத்தை மறந்து நான் என்ற வட்டத்தை உடைத்து நம்மையே வலைத்து பிறருக்காய் பணி புரிய இன்று ஒரு சிறப்பான அழைப்பு விடுக்கப்படுகிறது. திருமுழுக்கு யோவான் போல நான் குறைய வேண்டும், 'அவர்' வளரவேண்டும் அவருடைய மிதியடைகளை கூட அவிழ்க்க நான் தகுதியற்றவன். இதுதான் பணிவிடைபுரிபவரின் மனநிலையாக இருக்கவேண்டும். இதனால்தான் இயேசு மறைமுகமாக திருமுழுக்கு யோவானை பெண்களில் பிறந்தவரில் பெரியவர் என்று புகழ்கிறார். இயேசுவின் வாழ்கை முழுக்க முழுக்க பணி புரிவதிலும் தன் தந்தையோடு ஒன்றித்து இருத்தலிலும் தான் அமைந்திருந்தது. இதுவே இயேசுவின் மனித மையம் கொண்ட ஆன்மீகமாக நற்செய்தியாளர்கள் நமக்கு வர்ணிக்கிறார்கள் – (மத்25:34–46, மாற்10:17–22)ளு மனித மையம் கொண்ட ஆன்மீகம் நம்மை செயல்பாட்டிற்கு அழைக்கும் விசுவசமாக இருக்கிறது. (யாக் 1:22) இந்த ஆன்மீகம் சவால் நிறைந்ததாகவும், வாழ்க்கையின் பிரச்சனைகளை எதிர்நோக்க அழைப்பு விடுக்கிறது.

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள்

**பணியாளர்:**

அன்பார்ந்தவர்களே!

இயேசுவின் இறுதி இரவு உணவு விழா வரலாற்றில் ஈடுபடும் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இன்றைய விழாத் திருப்பலியில் பங்கெடுக்கும் நாமும் இறைவனின் இரக்கத்தை இறைஞ்சிமன்றாடுவோம். சீடர்களின் பாதங்களைக் கழுவி பந்தியமர்ந்த இயேசுவின் மனநிலை இம்மண்ணக மக்களில் உருவாகச் செபிப்போம்.

- உணவாக உம்மையே எங்களுக்கு உடைத்துத் தரும் இயேசுவேஇ எங்கள் நாட்டில் பசிஇ பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை ஏராளம். இவர்கள் வாழ்வு வளம்பெறஇ தேவைக்கு அதிகமாகச் செல்வத்தைச் சேகரித்து சொகுசான வாழ்க்கை வாழ்பவர்கள் இல்லாதவர்களோடு பகிர்ந்துகொள்ள அரசியல் தலைவர்கள் உகந்த சட்டங்கள் உருவாக்க உள்ளத்தில் உறுதியைத் தந்தருளஇ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- பாதத்திலிருந்து பணியை ஆரம்பித்த கிறிஸ்துவேஇஎங்கள் நாட்டின் சமயத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் ஆடம்பரங்களையும் விளம்பரங்களையும் விரும்பித் தேடாதுஇமக்களுக்குத் தொண்டாற்றுவதையே தம் இலட்சியமாகக் கொள்ளவேண்டுமென்றுஇ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- மக்கள் வரலாற்றில் ஈடுபடும் இயேசுவேஇ கடந்த கால வரலாற்று நிகழ்வுகளைப் பெருமையுடன் எண்ணிப் பார்க்கின்ற நாங்கள்இ அநீதிஇ அக்கிரமத்தால் அலைக்கழிக்கப்பட்டுள்ள இந்த பூமியின் முகத்தைப் புதுப்பிக்க எங்களையே பணியாளர்களாகக் கையளிக்கஇ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- உமது உடலை உடைத்துத் தந்த ஆண்டவரேஇ ஒரே குடும்பமாக வாழுகின்ற நாங்கள்இ எங்களோடு வாழ்பவர் நலனுக்காக அன்றாடம் நிபந்தனையின்றி எங்களை அர்ப்பணிக்கச் செய்தருளும். உண்மையான நட்புஇ உயிரையும் கொடுப்பதற்குத் தயங்குவதில்லை என்பதை மனத்தில் கொண்டு வேற்றுமைகளை வேரறுத்து நட்புடன் யாவரையும் அணுகிப் பழகிடஇ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- இறுதி இரவு உணவை நினைவாகச் செய்யுங்கள் என்று எங்களுக்குப் பணிக்கின்ற தேவனேஇ வெறும் சடங்குகள் சம்பிரதாயங்கள்இ மரபுகள்இ மாமூல்களில் எங்கள் வாழ்வை வீணடிக்காதுஇ வழிபாட்டுச் சடங்குகளின் உண்மை அர்த்தத்தை உணர்ந்து வாழ அருள் தரஇ ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**பணியாளர்:**

நம் தனிப்பட்ட தேவைகளுக்காகச் சிறிது நேரம் மௌனமாக வேண்டுவோம்......

தந்தையாகிய இறைவாஇ உமது மகன் இயேசு தனது நினைவாக நாங்கள் செய்ய வேண்டும் என்று பணித்துள்ள புரட்சிச் செயல்களை அன்றாட வாழ்வில் வாழ்ந்து காட்டும் இறைச் சமூகமாக நாங்கள் மலர

உதவியருளும். கடமைக்காக வாழும் கிறிஸ்தவர்களாக அல்லாமல் பொறுப்புள்ள சீடர்களாக நாங்கள் ஒவ்வொரு வரும் வாழ வரமருள எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

## காணிக்கை வழிபாடு

தன்னை உணவாகவும் பானமாகவும் உலக மக்களுக்குக் கையளிக்கும் இயேசுவின் இறுதி இரவு உணவு விழாக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்கும் நாமும் நம்மைவிட ஏழைகள்பால் அக்கறை காட்ட வேண்டும். இதை வெளிக்காட்டும் விதத்தில் நம்மிடம் இருப்பவற்றைப் பகிர்ந்துகொள்ள எப்போதும் முன்வருவோம். இன்றைய திருப்பலியில் ஏழைகளுக்காக நாம் கொண்டுவந்துள்ள காணிக்கை இதன் முன்னடையாளமாக அமையட்டும். தியாக மனம் நம்மில் உருவாகக் காணிக்கைப் பவனியில் கலந்துகொள்வோம்.

**பொருட்கள்:**

1. விவிலியம்
2. குடை
3. கத்தி
4. செய்தித்தாள்
5. இனிப்பு
6. காய்கறி
7. பழங்கள்
8. உப்பு
9. தண்ணீர்
10. கல்
11. விளக்கு
12. வானொலி
13. பணம்
14. வெள்ளைத் துணி
15. மலர்
16. உணவு (ரொட்டி)
17. தானிய வகைகள்
18. நோட்டுப் புத்தகங்கள்
19. எழுதுகோல்
20. பூமி உருண்டை

இவற்றை இறைவன் ஏற்று எல்லா அருள்வரங்களையும் பொழிந்து ஆசீர்வதிக்க
இவற்றை அர்ப்பணிக்கிறோம் ஏற்றருள்வாய் எம் இறைவா.

1. இறைவனுக்கு காணிக்கை படைப்பது அவர் மனம் குளிர் அல்ல. மாறாக, நம்முடைய உழைப்பின் பலனை படைத்தவனுக்கே நன்றியாக படைக்கின்றோம். படைப்புக்களின் தலைசிறந்த படைப்பான மனிதன் தன்னுடைய சக மனிதனை அன்பு செய்யவும் ஏற்று கொள்ளவும் இறைவன் ஆசிக்கின்றார். இந்த காணிக்கை வழிபாட்டில் பொருள் உள்ள வகையில் மாற்றுவதற்கு நாம் நம்மிடம் உள்ளவற்றை பிறரோடு பகிர்ந்து வழிபாட்டை அர்த்தம் உள்ளதாக்குவோம்.

- பங்கு மக்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து உணவு பொருட்களை கொண்டு வந்து காணிக்கையாக அர்ப்பணித்தல். திருப்பலி முடிந்தவுடன் அந்த உணவு பொருட்களை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளுதல்.

(அல்லது)

- காணிக்கையாக கொடுத்த பொருட்களை பங்கின் வின்சென்ட் டி பால் சபையினர் தேர்ந்தெடுக்கப்பட்ட எளியவர்களுக்கு பகிர்ந்தளித்தல்.
- இந்த காணிக்கை பவனியில், உணவு பொருட்களை கொண்டுவந்தது போலவே, படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு உதவுகின்ற வகையில் நோட்டுப்புத்தகம், எழுதுகோள், பள்ளி சீருடை இவற்றையும்

காணிக்கையாக கொடுக்கலாம். (காணிக்கை வழிபாட்டில் ஏதேனும் ஒரே விதமான பொருட்களை மட்டும் கொடுத்தால் பலருக்கு உதவியாக இருக்கும்.)

# நற்கருணை வழிபாடு

உணவு மனிதவாழ்வில் உறவை வளர்க்கிறது. எனவேதான் விருந்தோம்பல் நம் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. மனிதரிடையே காணப்படும் பிளவுகளையும் பிரிவினைகளையும் வெருத்து, உறவுடன் வாழவைப்பது உணவு. இயேசு ஏற்படுத்தும் இந்த நற்கருணை, உறவை வளர்க்கும் உணவாக மட்டுமல்ல உயிரைதரும் உணவாக இருக்கின்றது. நற்கருணைப் பந்தியில் ஒரே அப்பத்திலும் ஒரே கிண்ணத்திலும் பங்கு பெறுகின்றோம். கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒருபால் ஆகின்றோம், ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு பெறுகின்றோம். (கொரி 10:17) இறை இயேசுவின் பந்தியில் பங்கு கொள்ள நம்மிடையே, இருக்கின்ற சாதி, சமயம், இனம், மொழி வேற்றுமைகளை களைவோம், இறைவனில் ஒன்றினைவோம்.

## நற்கருணை பவனி

**விரிவுரையாளர்:**

அருள்பணியாளர் பீடத்திற்குமுன் நின்று தூபக் கலசத்தில் சாமிபிராணியிட்டு முழந்தாள்படியிட்டு, புனிதமிகு நற்கருணைக்கு மும்முறைத் தூபம் காட்டுவார். அதன்பின்பு திருப்பலி நிறைவேறிய தலைமைப் பீடத்திலிருந்து தனியாக அலங்கரிக்கப்பட்ட பீடத்திற்குப் பவனியாக நற்கருணை எடுத்துச் செல்லப்படுகின்றது. முதலில் சிலுவைத் தாங்குபவர், பின் தூபப் பணியாளர், நற்கருணைக்கு இருபுறமும் எரியும் திரிபிடிப்போர் என்ற வரிசையின் அடிப்படையில் அனைவரும் பக்தியோடு செல்வர். பவனியின்போது பாடல் பாடப்படும். பவனி புதிய பீடத்தை அடைந்ததும் அனைவரும் முழந்தாள் படியிடுவர். பின்பு அருள்பணியாளர் தூபம் காட்டுவார். அப்போது மாண்புயர் கீதம் இசைக்கப்படும்.

**நற்கருணை இடமாற்றம் :**

ஆண்டவர் இயேசு நமக்கு தமது இறை பிரசன்னத்தை நிரந்தரமாக உணர்த்தும் வகையில் ஏற்படுத்திய நினைவுச் சின்னம்தான் இந்த நற்கருணை. இது இயேசுவின் அன்புச் சின்னம்.

எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையிலே இயேசு தனிமையில் இருக்கிறார். துன்பத்தைக் கண்டு கலங்கிய மந்தை சிதறி ஓடுகிறது. என் ஆடுகளுக்காக உயிரைக் கொடுப்பேன் என்று சொன்னவர் இப்போது துணிவுடன் துன்பக் கலசத்தை ஏற்கிறார். இலட்சிய நாயகன் தனது பயணத்தில் தனித்து விடப்பட்டதை நினைவுபடுத்த, திருப்பலி நிறைவேற்றிய பீடம் வெறுமையாக்கப்படுகிறது. ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் பயணம் இதோ ஆரம்பிக்கிறது. "ஓசான்னா!" என்ற ஆரவாரம் ஓய்ந்துவிட்டது. இந்த பவனி, இயேசு எருசலேம் நகரை விட்டு கெத்சமணி தோட்டத்திற்கு வந்ததை நினைவுபடுத்துகிறது. பாடுகளை இயேசு மனமுவந்து ஏற்றுக்கொள்வதை இந்த பவனி நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது. இயேசுவின் வேதனை நம் உள்ளத்தைத் தொடட்டும்! உலகினருக்காக வாழ்வை அர்ப்பணிப்பது எவ்வளவு கடினம் என்பதை உணர்வோம்!

பாடுகளை மனமுவந்து ஏற்கிறார் இயேசு. இருப்பினும் மனதில் கலக்கம்.
இவ்வளவு துன்பங்களையும் தாங்கியே ஆகவேண்டுமா என்ற தயக்கம்.

தன் பாடுகளின் பலன் எங்கே வீணாகிவிடுமோ என்ற சந்தேகம்.
தனது பாடுகள், அனைவருக்கும் புதிய விடியலை பெற்றுத்தருமா? என்ற தடுமாற்றம்.
மனிதக் கடவுள் இயேசுவின் இறுதி சோதனை.
ஆனால் சோர்ந்துவிடவில்லை! ஆறுதல் தேடுகிறார் ஆண்டவர்.
துன்பத்தில் துணை நிற்கும் நட்பைத் தேடுகிறார்.
கிடைத்ததெல்லாம் துணிவில்லாத சீடர்களின் தூக்க மயக்கம்.
துணிந்தவனுக்குத் தூக்கம் வருமா?
இயேசுவிற்கு இன்று தேவைப்படுவது நமது ஆறுதல் அல்ல!
நமது வாழ்வு வீரம் மிக்கதாகஇ துணிச்சல் மிகுந்ததாக இருக்க விரும்புகிறார்.
கோழைகளாக அல்ல் கொள்கைப்பிடிப்புள்ளவர்களாக –
இயேசுவோடு கெத்சேமனிக்குப் புறப்படுவோம்!
இயேசுவின் பாதத்தில் அமர்ந்து நமது வாழ்வை உற்று நோக்குவோம்!
புதிய உலகம் உருவாக நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்!
கலக்கமடைந்த இயேசு உறுதியும் தெளிவும் பெறுவதைப்போன்று
நாமும் உள்ளத்தில் உறுதியும் இலட்சியத்தில் தெளிவும் பெறுவோம்!

## முழு பங்கேற்புக்கும் அர்த்தமுள்ள வழிபாட்டை கொண்டாடவும் சில பரிந்துரைகள்.

பங்கு பணியாளர், முதல் நபரின் பாதங்களை கழுவார். இந்த முதல் நபர், இரண்டாவது நபரின் காலை கழுவார். அதேபோல் ஒருவர் மற்றொருவருடைய பாதங்களை கழுவார்கள்.

- **குடும்பம்**
  பன்னிரண்டு குடும்பங்களை அதன் உறுப்பினர்களோடு தேர்ந்தெடுத்து கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும், பாதங்களை கழுவலாம்.

- **பிரச்சனை உள்ள சமூக உறவுகள்**
  மாமியார் மருமகள், கணவன் மனைவி, தொழிலாளர் முதலாளி போன்ற பிரச்சனை உள்ள உறவுகளை தேர்ந்தெடுத்தல் பாதங்களை கழுவுதல் (ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி பாதங்களை கழுவிக்கொள்ளுதல்)

- **பங்கின் அனைத்து வாழ்க்கை நிலைகளின் உறுப்பினர்கள்**
  விவரம் தெரிந்த சிறுவர் சிறுமியர், இளைஞர், இளம் பெண்கள், ஆண், பெண், முதியவர்கள், ஊனமுற்றோர், துறவியர், விதவை, அனாதை போன்றார் அருட்பணியாளர் பாதங்களை கழுவுதல். இந்த பன்னிரெண்டும் பேரும் மேலும் ஒவ்வொருவரும் தனியாக இன்னும் பன்னிரெண்டு நபர்களின் பாதங்களை கழுவுதல். இவ்வாறு தொடர்ச்சியாக சென்று அடையாள முறையாக வழிபாட்டிற்கு வந்திருக்கின்ற அனைத்து விசுவாசிகளின் பாதங்களையும் கழுவுதல் வேண்டும்.

*(பங்கின் சமூக சூழலையும், விசுவாசிகளின் மனநிலையும் அறிந்து கொண்டு அதற்கேற்றார் போல் செயல்பாட்டை அமைத்து கொள்ளலாம்.)*

## பெரியவியாழன் ~ ஆராதனை

### ஆராதனை மாதிரி – I

### நற்கருணை – வாழ்வில் மையம்

- ஆராதனை
- மன்னிப்பு வழிபாடு
- ஒவ்வொரு அன்பியத்தையும் ஒப்புக் கொடுக்கும் செபம் ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் ஒருவர்.
- திருப்பாடல்கள்
- பொது மன்றாட்டுகள்
- இடையிடையே பொருத்தமான பாடல்கள் மற்றும் பஜனை பாடல்கள் பாடலாம்.

**நற்கருணை – வாழ்வில் மையம்**

- நற்கருணை ~ இயேசுவின் பிரசன்னம் தன்னுடைய பாடுகளின் முன்னடையாளம். தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் நிலை, தன்னுடைய விடுதலையை தொடர்ந்து செல்ல சீடர்களுக்கு அளித்த ஒரு சக்தி.

- ஆராதனை – பஜன் ~ **என்னுயிரே இறைவா**.........
- **இயேசுவின் பாதத்தில்**.......
- **தந்தையே உம்மை போற்றுகிறோம்**........
- மன்னிப்பு வழிபாடு
- **திருப். 51** பாடலாக பாடலாம். (திருப் 6, 88, 106, 123)
- மக்களை அவர்களது தவறுகளுக்காக மன்னிப்பு கேட்க சொல்லலாம்.
- **தொடும் என் கண்களையே** என்ற பாடல் மூலம்கூட மன்னிப்பு கேட்கலாம்.
- சமுதாய தீமைகளைக் குறிப்பிடலாம்.
- ஒவ்வொரு அன்பியத்தையும் ஒப்புக் கொடுக்கும் செபம்.
- ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் ஒருவர், செபிக்கலாம்.
- சிராமமாக இருந்தால் குடும்பங்களை அர்ப்பணித்தல் நன்று
- பல்வேறு வயதுகுட்பட்டவர்களுக்காக ஜெபிக்கலாம்.
- மன்றாட்டுத் திருப்பாடல்கள் செபிக்கலாம்.
- பொது மன்றாட்டுக்கள்.
- அமைதியில் இறைவனை உற்று நோக்குதல

- முடிவு, செபம்.

இடையிடையெ பொருத்தமான பாடல்கள் பாடவும். அனைத்தும் நற்கருணையின் தன்மையை வலியுறுத்துவது அமையும்.

## ஆராதனை மாதிரி – 2
## குணமளிக்கும் இறைவன்.

- ஆராதனை
- முன்னுரை
- ஆன்மா நலமடைய
- உடல் நோய்கள் நலமடைய
- முறிந்த உறவுகள் நலமடைய
- முடிவு
- பஜன் மற்றும் பாடல்கள்

## குணமளிக்கும் இறைவன்

- ஆராதனை ~ நித்திய ஸ்துதிக்குரிய
- முன்னுரை ~ அவரை உற்று நோக்குங்கள் நீங்கள் நலம் அடைவீர்கள். மோயீசன் வெண்கலப்பாம்பு ~ இயேசுவின் சிலுவை~ இயேசுவின் வாழ்வு நமக்கு முழுவதும் நலமளிக்கும். ஆன்மா நலமடைய~ மன்னிப்பு வேண்டல் கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூர்தல்~ ஏற்பட்ட காயங்களை இறைவன் முன் கொணர்தல்~ நம்மை புண்படுத்தியவர்களை மன்னித்தல்.
- உடல் நோய் குணமடைய ~ மன்றாட்டு
- முறிந்த உறவுகள் குணமாக~ சமாதானத்திற்காக அசிசியாரின் செபம் செபித்தல்.
- இறுதி செபம் ~ பாடல்.

## ஆராதனை மாதிரி – 3 ~ வார்த்தையின் இறைவன்

- ஆராதனை
- முன்னுரை (முழுவதும் விவிலியத்தின் பகுதிகளை வைத்தே ஆராதனை நடத்த வேண்டும்).
- ஒவ்வொரு பகுதிக்கேற்ப விவிலியப் பகுதிகளை தேர்ந்துக் கொண்டு செபிக்க உதவிசெய்தல். குறிப்பாக திருப்பாடல்கள் இறைவாக்கினர்களின் பாடல்கள் இவைகளை அதிகமாக பயன்படுத்தலாம்.

**ஆராதனையின் போது ~ கவனிக்க வேண்டியவை**

- இந்த ஆராதனை முழுக்க முழுக்க ஒரு செபப் பகுதியாக இருக்க வேண்டும். இதில் அதிகமாக தனது கருத்துக்களை திணிக்க முயற்சிக்கக் கூடாது.
- மக்களின் அதிகமான பங்கேற்பினை வலியுறுத்த வேண்டும்.
- ஒரு துக்கமான, சோகமான சூழ்நிலையை உருவாக்குவதை தவிர்த்துவிட்டு, ஒரு நம்பிக்கையையும், உறுதியையும் உருவாக்கும் ஆராதனையாக அமைக்க வேண்டும்.
- இந்த ஆராதனையில் உசநயவனைவைல என்பது செப சூழ்நிலையை உருவாக்கித் தருவதாக இருக்க வேண்டும்.
- பொதுவாக பங்குமக்களின் அனைவருடைய கருத்துக்களையும் நினைவுக்கு கொண்டுவந்து செபிப்பது சிறப்பானது.

## திருப்பாடுகளின் புனித வெள்ளி



### சிலுவைப் பாதை

- **திருச்சிலுவை வழிபாடு**
  1. முன்னுரை :
- **இறைவாக்கு வழிபாடு**
  1. முதல் வாசக முன்னுரை :
  2. முதல் வாசகம் (எசா 52:13-53:12) :
  3. இரண்டாம் வாசக முன்னுரை :
  4. இரண்டாம் வாசகம் (எபி 4:14-16 5:7-9) :
  5. நற்செய்தி :
- **விசுவாசிகள் - சிறப்பு மன்றாட்டுக்கள்**
  1. முன்னுரை :
  2. சிறப்பு மன்றாட்டுக்கள் :
- **திருச்சிலுவை ஆராதனை**
  1. விரிவுரையாளர் :
  2. முன்னுரை :
- **திருவிருந்து**
  1. விரிவுரையாளர் :
- **மரித்த ஆண்டவர் திருவலம்**

## திருப்பாடுகளின் வெள்ளி

### திருப்பாடுகளின் வெள்ளி வழிபாட்டு முன்னுரை ~ 1

இன்றைய வழிபாடு மூன்று பகுதிகளைக் கொண்டது. ஒன்று இறைவாக்கு வழிபாடு, இரண்டு திருச்சிலுவை வழிபாடு, மூன்றாவதாக திருவிருந்து வழிபாடு. உலகம் வெளிச்சம் பெற இறைமகன் இயேசு தன்னைத் தீபமாக்கிக் கொண்ட திருநாள். இன்று உண்மைக்கு உயிர் கொடுக்க ஒரு செம்மறியின் இரத்தத்தில் பூமி தன்னை சுத்தம் செய்து கொண்ட நாள் இது. உலகமே ஒரு கல்வாரி. இங்கே சிலுவைச் சாவுகள் தினம் தினம் அரங்கேறுகின்றன. அப்பாவிகள் அன்றாடம் சிலுவையில் அறையப்படுகிறார்கள்.

உண்மையோடும் நீதியோடும் வாழ்பவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இச்சமுதாயம் கொடுக்கின்ற பரிசு பிழைக்கத் தெரியாதவன். இவனாலா இச்சமுதாயம் மாறிவிடப் போகிறது. பேசாம இவன் வேலையை பார்க்க வேண்டியதுதானே என்ற வசைமொழிகள் மட்டுமே. இம்மாதிரியான தடைகளையும் தாண்டி தனது இலட்சியப் பயணத்தை தொடர விழைபவர்களுக்கு ஆதிக்கச் சக்திகளின் அடிதடிகளும் உயிர்பறிப்புச் சம்பவங்களும்தான் அதிகரிக்கின்றது. இயேசுவுக்கும் இப்படித்தான்.

புனித வெள்ளியன்று இயேசுவுக்காக துக்கம் அனுசரிப்பது ஒருபுறம் இருக்கட்டும். அதற்குப் பதிலாக, உடன் வாழ்பவர்களை கொல்லாமல் இருப்பதே சாலச்சிறந்தது. ஒருசந்தி இருப்பது புண்ணியம்தான். ஆனால் வாடுபவர்களுக்கு ஒருவேளை உணவு கொடுத்தால் புண்ணியத்திலும் புண்ணியம். வார்த்தை அணிகளால் பிறரை அறைவதை நிறுத்துவோம். பிறருக்கு சிலுவையாய் இருப்பதைத் தவிர்ப்போம்.

இயேசுவுக்காக அழவேண்டாம். நமக்காகவும் நமது குடும்பங்களுக்காகவும் அழுவோம். நம்மால் தினம் தினம் அறையப்படுகின்ற இயேசுக்களை விடுவிப்போம். இந்த தூய சிந்தனைகளோடு இயேசுவின் பாடுகளில் பங்கேற்போம். இன்று நாம் கலந்துகொள்கிற திருச்சடங்குகள் நம்மில் மாற்றத்தைக் கொணரட்டும். நமது வாழ்வும் மிளிரட்டும்.

## திருப்பாடுகளின் வெள்ளி வழிபாட்டு முன்னுரை – 2

இரத்தத்தின் நிறம் சிவப்பு. சிவப்பு குறிப்பது புரட்சி. உரோமைப் படைவீரர்களுக்கு இது தெரிந்திருக்க நியாயமில்லை. இருப்பினும் ஏனோ அவர்கள் இயேசுவிற்கு இரத்தச் சிவப்பு ஆடை அணிவித்தனர். இயேசுவின் புரட்சிப் பணிக்குச் சான்றுபகர அழைக்கப்பட்டுள்ள நம் அனைவரின் சார்பாகவும் நமது பங்குப் பணியாளர் சிவப்பு உடை அணிந்து வழிபாட்டு நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கிறார்.

விடுதலை நமக்கு விடியுமா என்று எதிர்காலத்தை ஈரவிழிகளோடு எதிர் நோக்கிய எளிய யூத மக்களுக்கு நம்பிக்கை நல்கிய நாசரேத்தூர் நாயகன் சந்தித்ததெல்லாம் எதிர்ப்புஇ ஏளனம்இ நம்பிக்கைத் துரோகம். இதனால் இயேசுவின் இதயத்தில் அவமானம்இ வேதனைஇ தனிமையுணர்வு.

மனிதர்களால் மறுதலிக்கப்பட்டவராகஇ கடவுளால் கைவிடப்பட்டவராகக் கண்ணீர் விடுகிறார் கடவுளின் மகன். இரத்த ஆறாகப் பெருக்கெடுக்கிறது வியர்வை! கேத்சேமனித் தோட்டம் இன்றும் தொடர்கிறது…

இங்கேயும் முத்தமிட்டு நண்பர்களைக் காட்டிக் கொடுக்கும் யூதாஸ்கள்!

உண்மை தெரிந்தாலும் வற்புறுத்துலுக்காக வளைந்து கொடுக்கும் பிலாத்துக்கள் எத்தனை?

உயிரையும் தருவதாக வாக்குக் கொடுத்த இராயப்பர்கள் நெருக்கடி நேரத்தில் ஒரு முறைக்கு மும்முறை மறுதலித்து தனித்து விடுவதில்லையா? தப்பி ஓடுவதில்லையா?

வாழ்க முழக்கம் ஓயுமுன்னே ஒழிக என ஓலமிடுவது கேட்கவில்லை?

கல்வாரிப் பாதை இன்னும் நீள்கிறது…. இன்றும் தொடர்கிறது.

நண்பர்களால் மறுதலிக்கப்படுதல்

உறவினர்களால் புறக்கணிக்கப்படுதல்

எதிரிகளின் ஏளனம்

இயேசுவின் அனுபவம் மட்டுமன்று நமது அன்றாட அனுபவங்கள்.

கெத்சேமனியில் இயேசு முகங்குப்புற விழுந்து

சீடர்களால் தனித்து விடப்பட்டது

பிலாத்தின் அரண்மனை அவலங்கள்

படைவீரர்களின் பரிகாசங்கள்

ஆடைகள் அப்புறப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட அவமானம்

கல்வாரிப் பாதையில் கால்கள் இடறி வீழ்ந்த

நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் விதத்தில் நமது பங்குப் பணியாரும் பீடத்தின் முன் முகங்குப்புற விழுந்து கிடப்பார்.

கிறிஸ்து தன்னை கடவுளின் கரங்களில் ஒப்படைத்ததுபோல் நாமும் நமது வாழ்வை இறைவனின் பாதுகாப்பில் ஒப்படைப்போம்! உமது கைகளில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன் என்ற இயேசுவோடு நாமும் தந்தையாகிய இறைவனிடம் சரணடைவோம்! இயேசு ஆரம்பித்த புரட்சிப்பணி முழுமை அடைய நம்மை அர்ப்பணிப்போம்!

## திருப்பாடுகளின் வெள்ளி வழிபாட்டு முன்னுரை – 3

இந்நாள் புனிதம் மிகுந்த நாள். இறைமகன் இயேசு தன்னுயிரை இத்தரணிக்குத் தாரை வார்த்த நாள். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் மீட்பைக் கொணர்ந்த நாள். இயேசு, தமது சாவின் மூலம் நமக்கெல்லாம் வாழ்வைக் கொண்டு வந்த நாள். பாடுகளும், துன்பங்களும் நிறைந்த கல்வாரிப் பயணத்தைத் துணிவோடு ஏற்றுக்கொண்ட யேசு, நம்மையும் துணிவோடு இருக்க அழைப்பு விடுக்கும் நாள். தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று கூறிய இயேசுவின் அர்ப்பணத்தில் நம்மையும் இணைத்துக்கொள்ள இன்றைய திருவழிபாட்டில் பக்தியோடு பங்கெடுப்போம்.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது

1. வார்த்தை வழிபாடு
2. இறைமக்கள் மன்றாட்டு
3. திருச்சிலுவை ஆராதனை
4. திருவிருந்து

இப்போது, நமதாண்டவர் இயேசு பாடுகள் பல பட்டு, துன்பங்களை அனுபவித்து, இரத்தம் சிந்தியதை நினைவு படுத்தும் வகையில் அருட்தந்தை அவர்கள் பீடத்தின் முன்பு குப்புற விழுந்து செபிக்கிறார். நாமும் உருக்கத்தோடு மன்றாடுவோம்.

## இறைவாக்கு வழிபாடு ~ 1

### முதல் வாசக முன்னுரை: (எசா 52:13~53:12)

இன்றைய முதல் வாசகம் ஏசாயா இறைவாக்கினர் துன்புறும் ஊழியனைப் பற்றி எழுதிய நான்கு கவிதைகளில் கடைசிக் கவிதையாகும். இக்கவிதை, இயேசு எந்த அளவுக்கு கொடுமையாக துன்புறுத்தப்பட்டு மக்களின் பாவங்களைப் போக்க தம் உயிரையே கையளிப்பார் என்பதை ஏசாயா இயேசு பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்னரே இறைவாக்குரைத்தார். தம்மிடம் நன்மை பெற்றவர்களே சிலுவையில் அறையச் சொன்னதும், இராயப்பரால் மறுதலிக்கப்பட்டதும் இயேசுவுக்கு நேர்ந்த உடல் துயரம் மட்டுமல்ல, உள்ளத்துயரமுடைந்தவராகத் தான் பார்த்தோம். அவரிடம் அழகோ, கவர்ச்சியான தோற்றமோ இல்லை என்ற ஏசாயாவின் வார்த்தைகளுக்குச் செவிமடுத்து வார்த்தைகளை செயல்படுத்துவோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை: (எபி 4:14~16 5:7~9)

இயேசுவின் வாழ்வு நம் வாழ்வைப் போன்றுதான் இருந்தது. பாவம் தவிர மற்ற அனைத்திலும் அவர் நம்மைப் போன்றே, நமக்காகவே வாழ்ந்தார் என்ற தூய பவுலின் வார்த்தைகளை நினைவுகூறுவோம். இயேசு மனிதனை, அவன் துன்பத்தை, தோல்வியை, சோகத்தை, சோதனையை அறிந்தவர் என்றும், அதே வேளையில் இறைதிருவுளத்தை நிறைவேற்றுவதில் கருத்தாய் இருந்ததிலும், பாவமற்ற பரிசுத்தமாக வாழ்வதிலும் நமக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தார் என்பதையும் விளக்குவதாக உள்ளது. துன்பம் வந்தாலும் இறை திருவுளப்படி வாழவும் துன்பப்படுகிறவர்களை இயேசுவை போல் அன்பு செய்யவும் அழைப்பு விடுக்கும் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### நற்செய்தி வாசக முன்னுரை:

இயேசுவின் பாடுகள் நமக்கு நல்ல படிப்பினை. அவரது மரணம் நமக்கு ஓர் உதாரணம். பாடுகளின் வரலாற்றை அருளப்பர் நற்செய்தியிலிருந்து வாசிக்கக் கேட்கும்போது நமது வாழ்வையும் இயேசுவின் வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். நமது தவறுகளை நினைத்து மனம் வருந்தி அழுவோம். முற்றிலும் நமது வாழ்வை மாற்றி அமைப்பதற்காக முயற்சி எடுப்போம்.

## இறைவாக்கு வழிபாடு ~ 2

### முதல் வாசக முன்னுரை: (எசா 52:13~53:12)

மனிதர்களாகிய நாம் தவறுகின்றவர்கள். பலவீனமானவர்கள். கால்போன போக்கிலே நமது வாழ்வு பல நேரங்களில் திசை மாறி திண்டாடுகிறது. பாதை மாறி பரிதவிக்கிறது. இந்த அவலநிலை இனியும் நமக்கு ஏற்படலாகாது. கடவுள் அருளும் அருள்வாழ்வை மீண்டும் நாம் பெறுவதற்காக மெசியாவாகிய இயேசு துன்புறுத்தப்படுகிறார் நொறுக்கப்படுகிறார். நிந்தைக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கப்படுகிறார். இறுதி அவமானமாக சாவு அவருக்கு வருகிறது. இதை இயேசுவின் காலத்திற்கு முன்பே இறைவாக்காக முன்னறிவித்தார் இசையாஸ் இறைவாக்கினர். அவர் கூறும் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்!

### இரண்டாம் வாசக முன்னுரை:(எபி 4:14~16 5:7~9)

மனிதர்களைப்போல இயேசு துன்பப்படுகிறார் துயரமடைகிறார் கவலைப் படுகிறார். கண்ணீர் சிந்தி அழுகிறார். இவை யாவுமே நமக்காகஇ நமது பாவங்களுக்காக! இதனால்தான் கடவுள் அவர் வழியாக நமக்கு மீட்பை வழங்குகிறார். எபிரேயர் திருமுகம் விளக்கிக் கூறுகின்ற நம்பிக்கைத் தரும் வார்த்தைகளை நெஞ்சில் நிறுத்துவோம். ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை வளர்போம்!

## இறைவாக்கு வழிபாடு – 2

### முதல் வாசக முன்னுரை: (எசா 52:13–53:12)

இன்றைய வழிபாட்டின் முதல் கட்டமான வார்த்தை வழிபாட்டைத் தொடங்குகிறோம்.

மெசியா இம்மண்ணகத்தில் மாபெரும் அரசராக, மக்கள் தலைவராக அரசாள்வார் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் இகழ்ச்சியும், வேதனையும், நலிவும், துன்பமும் நிறைந்த ஊழியர்தான் மெசியா என்பதை எசாயா இறைவாக்கினர் விளக்குவதை இவ்வாசகத்தில் கேட்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை:(எபி 4:14–16 5:7–9)

நமதாண்டவர் வலுமின்மையில் வலிமையைக் கொண்டிருந்தவர். பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நம்மோடு ஐக்கியமானவர். நமது பாவங்களுக்காக காயமுற்றவர். சிலுவைச் சாவை நமக்காகத் துணிவோடு ஏற்க முன்வந்தவர் எனக்கூறும் வாசகத்திற்கு கவனமுடன் செவிமடும்போம்.

### நற்செய்தி வாசக முன்னுரை:

இலட்சிய நாயகன் இயேசு தமது அர்ப்பணத்தில் உறுதியாக இருந்ததால், அவருக்கு எதிராக எழுந்த சக்திகள் அவரது லட்சியத்தை அசைக்க முடியவில்லை. இயேசுவைப்போல பிறருக்காக நம்மைத்தர, இயேசுவின் பாடுகளோடு நமது சகோதர சகோதரிகளின் துன்பங்களையும் நினைத்துப் பார்ப்போம். இந்நினைவுகளோடு நற்செய்திக்கு செவிமடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள்

### இறைமக்கள் மன்றாட்டு முன்னுரை ~ 1

ஏசுவின் சிலுவை மரணம், நமது வாழ்வுக்கு வழிகாட்டியிருக்கிறது. இறைவனின் இரக்கத்தை, மன்னிப்பை, நம்மிடையே கொண்டு வந்திருக்கிறது. தொடர்ந்து நாம் அருள் வாழ்வில் நிலை பெறவும், நமது திருச்சபையிலே, நாட்டிலே, ஊரிலே, வீட்டிலே இறைவனுக்கு ஏற்ற நிலை உருவாகவும் நாமனைவரும் இணைந்து மன்றாடுவோம். (அனைவரும் எழுந்து நிற்போம்)

### இறைமக்கள் மன்றாட்டு முன்னுரை ~ 2

இதோ நான் சிலுவையில் உயர்த்தப்பட்டபின் அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன் என்ற நம் ஆண்டவர் இயேசுவின் மரணம் அனைவருக்கும் நிறை வாழ்வளிக்கிறது. எல்லாம் நிறைவேறிற்று என்று தலைசாய்த்து தன் ஆவியை தந்தையிடம் கையளித்த இயேசு தன் இறப்பின் வழியாக இவ்வுலகை தன்பால் ஈர்க்கிறார். நமக்காக சிலுவை மரத்தில் தந்தையிடம் குரலெழுப்பி பேசுகிறார். இறைவாழ்வை நிறைவாகப் பெறத்துடிக்கும் நாம் இன்று சிறப்பாக நமது உலக ஆன்மீகத் தேவைகளுக்காக செபிப்போம். நம் குறைகளை அறிந்த இயேசு கண்ணீர் சிந்தி செபிக்கிறார். இயேசுவின் செபத்தோடு நமது உருக்கமான மன்றாட்டுகளையும் இணைத்து, சிலுவையில் தொங்கும் இயேசு நமக்குத் தேவையான அனைத்தையும் தந்தையிடமிருந்து பெற்றுதருவார் என்ற நம்பிக்கையில் ஒரே உள்ளமும் மனமும் கொண்டவர்களாய் செபிப்போம்.

### இறைமக்கள் மன்றாட்டுக்கள்:

- திருச்சபைக்காக
- தலைமை ஆயருக்காக
- திருச்பையில் பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்காக
- திருமுழுக்கு பெற ஆயத்தம் செய்வோருக்காக
- கிறிஸ்தவர்களுக்காக
- கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவர்களுக்காக
- கடவுளை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காக
- நாடுகளை ஆள்வோருக்காக
- துன்புறுவோருக்காக

## திருச்சிலுவை ஆராதனை

## (பவனியாகக் கொண்டுவருவதற்கு முன்)

### திருச்சிலுவை பவனி முன்னுரை – 1

இந்த திருச்சிலுவை வழிபாட்டில் இரு பணியாளர்கள் எரியும் திரிகளுடன் இருபக்கமும் வர, நடுவில் குருவானவர் துணியால் மூடப்பட்ட திருச்சிலுவையை கையிலேந்தி வருவார். அப்போது ஆலயத்தின் முற்றத்திலும், நடுவிலும் இறுதியாக பீடத்தின் முன்பும் வந்தடைந்தவுடன் குருவானவர் சிலுவையினை மூடியிருக்கின்ற துகிளை சற்று அகற்றி, சிலுவையை தூக்கிப் பிடித்து திருச்சிலுவை மரமிதோ என்று பாட மக்கள் வருவீர் ஆராதிப்போம் என்று பதிலளிப்பர். இப்போது திருச்சிலுவை வழிபாட்டிற்கான முன்னுரை வாசிக்கப்படுகிறது.

### திருச்சிலுவை பவனி முன்னுரை – 2

அவமானத்தின் சின்னமாகிய சிலுவை இயேசுவின் மரணத்தினால் மகிமை பெறுகிறது. இடறலாக கருதப்பட்ட இந்த மரம் மனிதர்களுக்கு பாதை காட்டுகின்ற பலகையாகிறது. மடமையாக எண்ணப்பட்ட சிலுவைச் சின்னம் இயேசுவின் சாவினால் வாழ்வின் ஊற்றாக உருவாகிறது. இனி சிலுவையைக் கண்டு அவமானம் கொள்ளத் தேவையில்லை. மாறாக மகிழ்ச்சி நம் உள்ளத்தில் எழவேண்டும். சிலுவை இனி எப்போதுமே ஆராதிக்கப்பட வேண்டும். சிலுவையின் வழியாக இயேசு அருளிய நிறை வாழ்வை பெறுகின்ற விதத்தில் திருச்சிலுவைக்கு ஆராதனை செலுத்துவோம்!

இப்பொழுது ஆலயத்தின் தலைவாயிலிலிருந்து சிலுவை பீடத்திற்கு கொண்டு வரப்படுகிறது. "திருச்சிலுவை மரம் இதோ!" என்று பங்குப் பணியாளர் அழைப்பு விடுக்கும்போது, "வருவீர் ஆராதிப்போம்!" என்று பதில்கொடுப்போம்.

# (திருச்சிலுவை முத்தி செய்யும் முன்)

## திருச்சிலுவையை முத்தி செய்யும் சடங்கு முன்னுரை – 1

கல்வாரிப் பயணத்தில் சிலுவைக்கும் ஏசுவுக்குமிடையே ஓர் அன்புப்பரிமாற்றம், கல்வாரி வரை சிலுவையை ஏசு தாங்கிச் சென்றார். கல்வாரியிலே இயேசுவை சிலுவை தாங்கியது. அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவை ஏசவைத் தாங்கியதால் புனிதமடைகிறது. இப்பொழுது நாம் சிலுவையை வணங்கி, ஆராதித்து, முத்தி செய்ய இருக்கிறோம். நம்மிடம் இருக்க வேண்டிய மனநிலை என்ன? பிறரை இழிவு செய்யும் செயலையும், பிறரின் நல்ல பெயருக்குக் களங்கம் விளைவிப்பதையும் நாம் நிறுத்த வேண்டும் புரிந்துகொள்ளுதலும், ஏற்றுக்கொள்ளுதலும் நம்மிடையே இருக்க வேண்டும். அப்போது நாம் சிலுவையை முத்தி செய்வது அர்த்தம் உள்ளதாக மாறும்.

## திருச்சிலுவையை முத்தி செய்யும் சடங்கு முன்னுரை – 2

சிலுவை அவமானத்தின் சின்னம். கொலைப் பாதகர்களையும், நாட்டுத் துரோகிகளையும் தண்டிக்கப் பயன்படுத்திய தூக்குமேடை. சிலுவை மரணம் ஒரு மனிதனுக்கு வாய்க்கின்ற அவலத் தீர்ப்பு. இன்று அவமானத்தின் சின்னமாகிய சிலுவை இயேசுவின் மரணத்தினால் மகிமை பெறுகிறது. இயேசுவின் சிலுவை வெற்றியின் சின்னம். எனவே சிலுவை மீட்பின் கருவி. இடறலாகக் கருதப்பட்ட இந்த மரம் மனிதர்களுக்குப் பாதை காட்டுகிறது. மடமையாக எண்ணப்பட்ட சிலுவைச் சின்னம் இயேசுவின் இறப்பினால் வாழ்வின் ஊற்றாக உருவெடுக்கிறது.

பாலைவனத்தில் கொல்லிவாய் பாம்புகளால் கடியுண்டவர்கள் நலமடைய மோயீசன் வெண்கலப் பாம்பை கம்பத்தில் ஏற்றினார். அதை உற்று நோக்கிய அனைவரும் உயிர் பெற்றார்கள். அதுபோன்று நாம் அனைவரும் மீட்படைய, விடுதலையடைய இயேசு சிலுவை மரணத்தின் மூலமாக இயேசு அளித்த விடுதலையையும், நிறைவாழ்வையும் பெறுகிறவிதத்தில் திருச்சிலுவையையை முத்தமிட்டு ஆராதனை செய்து வணங்குவோம். நம் வாழ்விலே இயேசு தனது கல்வாரிப் பலியின் வழியாக கொடுக்கின்ற சிந்தனைகளை உள்ளத்தில் இருத்தி, இயேசுவோடு இணைந்து வாழ்வோம்.

## திருச்சிலுவையை முத்தி செய்யும் சடங்கு முன்னுரை – 3

முத்தம் நமது அன்பின் நெருக்கத்தைக் காட்டுகின்ற வெளி அடையாளம். அன்னை மரியாள் தான் பெற்றெடுத்த இயேசு பாலனுக்கு கொடுத்த முத்தங்கள் இன்று துரோகியான தனது சீடன் யூதாஸினால் துரோகச் சின்னமாக மாறுகிறது. பாவியாகிய மரிய மதலேனாள் இயேசுவின் பாதங்களுக்கு அருளிய முத்தம் யூதாஸின் பயங்கர முத்தத்தால் அர்த்தம் இழக்கிறது. சிலுவையை முத்தும்போது பிறருக்கு எதிராக நாம் விளைவித்த நம்பிக்கைத் துரோகங்களை நினைத்துப் பார்போம். மனம் திருந்தியவர்களாக இந்த நிகழ்விலே நாம் பங்கெடுப்போம்! பாடகர் குழு பாடுகின்ற பாடல்களைக் கவனமாக கேட்டுப் பராக்கில்லாமல் இத்திருச்சடங்கிலே கலந்துகொள்வோம்.

# திருவிருந்து வழிபாடு

## திருவிருந்து முன்னுரை – 1

அனைவரும் எழுந்து நிற்போம். இன்றைய வழிபாட்டின் இறுதி பகுதியை அடைந்திருக்கிறோம். திருச்சபையின் திருவழிபாட்டில் திருப்பலியும், திருவருட்சாதனங்களும் நடைபெறாத ஒரே நாள் பெரிய வெள்ளிதான். ஏனென்றால் திருப்பலியில் நாம் நினைவு கூர்ந்து புதுபிக்கும் கல்வாரி நிகழ்ச்சிகளை இன்றைய சிலுவைப்பாடுகள் மூலம் இயேசு நிகழ்த்திவிட்டார். எனவே நேற்றைய திருப்பலியில் வசீகரம் செய்யப்பட்ட பரிசுத்த நற்கருணை இப்போது பீடத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. ஆண்டவரின் பாடுகளைத் தியானித்து அதில் பங்கேற்று அதன் பலனை முழுமையாய் பெறும் ஏக்கத்தோடு திருவிருந்தில் பங்கு பெறுவோம்.

## திருவிருந்து முன்னுரை – 2

இயேசுவின் கல்வாரிப்பலி ஈடு இணையற்றதுஇ திரும்பவும் நிகழாதது. இதை வெளிக்காட்டுகின்ற விதத்திலே இன்று எங்கும் திருப்பலி நிறைவேற்றப்படுவதில்லை. திருவிருந்து மட்டும் நடைபெறும். கல்வாரியில் இயேசு பலியான காட்சியை மனக்கண்முன் நிறுத்தி திருவிருந்திலே பங்கெடுக்க நம்மைத் தயாரிப்போம்.

நேற்று இரவு இடமாற்றம் செய்து வைத்திருந்த நற்கருணை ஆடம்பரமின்றி எடுத்துவரப்படுகிறது. அதன் பின் இயேசு கற்றுத் தந்த செபத்தை சொல்ல பங்குப்பணியாளர் அழைப்புவிடுக்கும்போது இயேசுவின் பலி உலக மக்கள் எல்லாருக்கும் விடுதலை வழங்கவேண்டும் என்று வேண்டுவோம்.

## திருவிருந்து முன்னுரை – 3

அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார். அன்பும், ஒற்றுமையும், சமாதானமும், நல்லுறவும், பாசமும் நம்மிடையே உருவாகி, வேற்றுமை வேறுபாடுகள் நீங்கி உயிரோட்டம் கொண்ட நல்லவர்களாய் இருக்க வேண்டுமென விரும்பி இவ்விருந்தில் கலந்துகொள்வோம்.

## பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி நிகழ்வுகளில் அட்டவனை

**(1) தீயையும், திரியையும் மந்திரித்தல்**

1. முன்னுரை
2. தீ மந்திரித்தல்
3. மெழுகுதிரி மந்திரித்தல்
4. பவனி
5. பாஸ்கா புகழுரை

**(2) வார்த்தை வழிபாடு**

1. முதல் வாசகம்
2. தியானப்பாடல்
3. மன்றாட்டு
4. 2~வது வாசகம்
5. தியானப்பாடல்
6. மன்றாட்டு
7. 3~வது பாடல்
9. மன்றாட்டு
10. வானவர் கீதம்
11. மன்றாட்டு
12. வாசகம்
13. அல்லேலூயா
14. நற்.வாச (லூக்4:1~12)
15. மறையுரை


**(3) திருமுழுக்கு வழிபாடு**

1. பவனி
2. மன்றாட்டு
3. புனிதர்களின் பிராத்தனை
4. தண்ணீர் மந்திரித்தல்
5. அருட்சாதனங்கள் நிறைவேற்றுதல் ~ பெரியவர், குழந்தைகள், உறுதிபூசுதல், திருமணம் மந்திரித்தல்.
6. திருமுழுக்கு வாக்குறுதி புதுபித்தல்
7. குரு புது தண்ணீரால் மக்களை மந்திரித்தல்

**(4) நற்கருணை வழிபாடு**

திருப்பலி தொடரும்.

## உயிர்ப்புப் பெருவிழா திருப்பலி



**வழிபாட்டு முன்னுரை**

**பிரிவு – ஒன்று : திருஒளி வழிபாடு**

1. புதிய தீயைப் புனிதப்படுத்துதல் :
2. பாஸ்கா திரியைப் புனிதப்படுத்துதல் :
3. பாஸ்கா திரி பவனி :
4. பாஸ்கா அறிக்கை :

**பிரிவு – இரண்டு : இறைவார்த்தை வழிபாடு**

1. விரிவுரையாளர் :
2. முதல் வாசக முன்னுரை :
3. முதல் வாசகம் **(தொ.நூ. 1:1-2:2)** :
4. இரண்டாம் வாசக முன்னுரை :
5. இரண்டாம் வாசகம் **(வி.ப. 14:15-15:1)** :
6. மூன்றாம் வாசக முன்னுரை :
7. மூன்றாம் வாசகம் **(எசே 36:16-28)** :
8. நான்காம் வாசக முன்னுரை :
9. நான்காம் வாசகம் **(உரோ 6:3:11)** :
10. ஐந்தாம் வாசக முன்னுரை :
11. ஐந்தாம் வாசகம் :
12. ஆறாம் வாசக முன்னுரை :
13. ஆறாம் வாசகம் :
14. ஏழாம் வாசக முன்னுரை :
15. ஏழாம் வாசகம் :
16. எட்டாம் வாசக முன்னுரை :
17. எட்டாம் வாசகம் :
18. ஒன்பதாம் வாசக முன்னுரை :
19. ஒன்பதாம் வாசகம் :
20. நற்செய்தி **(லூக் 24:1-12)** :
21. மறையுரை :

**பிரிவு – மூன்று :திருமுழுக்கு வழிபாடு**

1. விரிவுரையாளர் :
2. திருமுழுக்கு வழிபாடு :
3. புனிதர்களின் மன்றாட்டு மாலை :
4. திருமுழுக்கு தண்ணீருக்கு ஆசியளித்தல் :
5. திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்தல் :
6. தீர்த்தம் தெளித்தல் :
7. விசுவாசிகளின் மன்றாட்டு :

**பிரிவு – நான்கு : நற்கருணை வழிபாடு**

## உயிர்ப்பு பெருவிழா திருப்பலி

### உயிர்ப்பு பெருவிழா திருப்பலி முன்னுரை – 1

இயேசு உண்மையாகவே உயிர்த்துவிட்டார். அதற்கு நாங்கள் சாட்சிகள். உயிர்த்த இயேசுவின் உண்மை சாட்சிகளே இறைமக்களே இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை–

1. ஒளி வழிபாடு
2. இறைவாக்கு வழிபாடு
3. திருமுழுக்கு வழிபாடு மற்றும்
4. நற்கருணை வழிபாடு.

உண்மை உறங்காது என்பதனை உலகிற்குச் சொல்ல உத்தமர் இயேசு சாவை வென்று முகில் விடுத்து வெளிக்களம்பும் முழுமதியென வெற்றி வீரராய் உயிருடன் எழுந்த வெற்றித் திருநாள் உயிர்ப்புப் பெருநாள். சோகம் இனிமேல் நமக்கு சொந்தமில்லை என்று சொல்ல வந்த ஆனந்தப் பெருநாள். இந்த நாளிலே அகிலமே அக்களிப்புக் கொள்கிறது. உயிர்த்த இயேசு கொண்டுவந்தது சமாதானம். இந்த சமாதானத்தின் தூதுவர்களாய் வாழ நம்மை அழைக்கிறது. இனி போர்க்களங்கள் வேண்டாம். அமைதி மாநாடுகள் நடத்துவோம். உள்ளத்தில் பகை வேண்டாம் நெஞ்சத்தை உறவுகளின் உறைவிடமாக்குவோம். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடக்கப்போகிறவை நல்லவையாக விடியட்டும். இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்டு இனியொரு புதிய விதி செய்வோம். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவோம். மனித கொலைகளுக்கு எதிராக அமைதிப் புறாக்களை பறக்க விடுவோம். உடைந்த உறவுகளின் பாலங்கள் அமைப்போம். இன்று இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார். ஆனாலும் அவரில் அவரோடு நாமும் உயிர்த்தெழ வேண்டும். இன்று சாதி, மத பேதங்களாலும் பணம், பதவி மோகங்களாலும் தேவையற்ற பொழுதுபோக்குச் சாதனங்களாலும் செத்துப்போய்கிடக்கின்ற நாம் ஒவ்வொருவரும் உயிர்த்தெழ வேண்டும். அப்போதுதான் நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா அர்த்தம் பெறும். இல்லையெனில் இதுவும் நமது அன்றாட கடமைகளில் ஒன்றாக அர்த்தமற்றுப் போய்விடும். இருள் விலகினாலும் விலகாமல் போனாலும் நமது விரல்கள் விளக்கேற்றுவதை மட்டும் விட்டுவிடாமல் இருக்கட்டும். இயேசுவின் உயிர்ப்புப் பெருநாளில் நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும் விளக்கேற்றுவோம். உயிர்த்த கிறிஸ்துவின் இறையனுபவத்தை நமதாக்கிக் கொண்டு உயிர்த்த மக்களாக வாழ்வோம்.

## உயிர்ப்பு பெருவிழா திருப்பலி முன்னுரை – 2

தருமம் "கரு" கொள்ளும். நீதி "உரு" கொள்ளும். சத்தியத்தை நித்தம் எடுத்துரைத்தவனுக்கு சமாதி ஒரு தற்காலிக இடைவேளைதான். அநீதி இழைக்கப்பட்டவனுக்கு மூன்று நாட்களில் கடவுள் நீதி வழங்குவார் என்பது யூதச் சமூகத்தின் முதுபெரும் நம்பிக்கை. அந்த நம்பிக்கை இயேசுவின் வாழ்க்கையில் எதிர்த்த உண்மையாகிறது.

இறையாட்சியை இம்மண்ணில் கட்டி எழுப்ப வேண்டும் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் இலட்சியவாதி இயேசு இறக்கிறார் இந்த சமூகத்தை உயிர்ப்பிப்பதற்காக.

ஒரு யூதனுக்கு, மற்றொரு யூதன் தான் 'அயலான்,' என்று கருதப்பட்ட அன்றைய யூதச் சமுதாயத்தில் சமாரியனும் சமுதாயத்தின் விளிம்பில் மனிதத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சாமானியனும், தனது அயலான் என்று வாழ்ந்து காட்டினர் இயேசு. ஆனால் இன்று "இவன் என்னைச் சார்ந்தவன்", "இவன் என் இரத்தம்," என்று சொல்வதும், அதன்படி செயல்படுவதும் இயேசுவின் உயிர்ப்பை கேலி செய்வதற்கும், அவருடையக் கொள்கைகளைக் காற்றிலே கரைப்பதற்கும் ஒப்பாகும்.

யூத மத சட்டக் கோட்பாடுகளில் மட்டுமே மூழ்கிக் கொண்டிருந்த பரிசேயர்களையும் யூத குருக்களையும் இயேசு உயிர்ப்பிக்க வழி செய்கிறார் மனிதத்தை முதன்மைப்படுத்துவதன் மூலமாக. இன்று, மதங்கள் மதவாதிகள் கையிலே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. "இன்னொரு மதத்தை சார்ந்தவன் எனக்கு எதிரி" என்ற மாயை மக்களின் மனதில் திட்டமிட்டபடி புகுத்தபடுகிறது. ஒரு புதுக் கவிஞன் பாடினான்.

"கிறிஸ்துவர்களே, நீங்கள் இதுவரை கிறிஸ்துவர்களை உருவாக்கியதுபோதும்

இஸ்லாமியர்களே, நீங்கள் இதுவரை இஸ்லாமியர்களை உருவாக்கியதுபோதும் இந்துக்களே, நீங்கள் இதுவரை இந்துக்களை உருவாக்கியதுபோதும் மாறாக,

அனைவரும் சேர்ந்து மனிதர்களை உருவாக்குங்கள்."

எனவே இறப்பும் உயிர்ப்பும் ஏதோ இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு காலக்கட்டத்தில் நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சி அல்ல. மாறாக, ஒவ்வொரு கிறிஸ்துவனது வாழ்விலும் தொடர்ந்து அனுபவமாக்கப்பட வேண்டிய வாழ்வு நெறிமுறை.

சமணற்ற, மதப்பித்து கொண்ட சமூகத்தை இறக்கச் செய்வோம். சமத்துவ, நீதியுள்ள பன்முக கடவுள் சமுதாயத்தை உயிர்ப்பிக்க உழைப்போம்.

## உயிர்ப்பு பெருவிழா திருப்பலி முன்னுரை ~ 3

ஆதியிலே உலகம் உண்டாவதற்கு முன் இருள் சூழ்ந்திருந்தது. கடவுளுடைய வார்த்தை ஒளியைத் தோற்றுவிக்கிறது. ஒளி தொடர்ந்து உலகை நிறைவித்தது. இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் வழிநடக்க ஒளியைப் படைத்த இறைவனே தூணாக – ஒளித்தூணாக மக்கள் முன் நடக்கிறார். ஒளி காட்டுகிறார்ளூ வழி நடத்திச் செல்கிறார். இந்த ஒளி பாலஸ்தீன அடிமைத்தனத்தில் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்தபோதும் இறைவாக்கினர்களால் நம்பிக்கையின் தீபமாக அருளப்படுகிறது. காரணம்: கடவுள் விரும்பிய உலகு ஒளியை மறைத்து இருளை ஏற்றுக்கொண்டது.

இயேசுவின் காலத்திலும் ஒளியாகத் தோன்றிய இயேசுவை ஏற்க மறுத்தவர்கள் இருளில் வாழ்வதையே விரும்பினார்கள். ஆனால் இருளால் ஒளியை மேற்கொள்ள முடியவில்லை. ஒளி ஊடுருவியது.

பாரவோனின் அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களுக்கு விடுதலை கொடுக்க மோயீசனை எரியும் முட்புதரில் ஒளியாகத் தோன்றி அழைக்கிறார் கடவுள். இரவிலே விடிவு பிறக்கிறது. மோயீசன் துணை நிற்க இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடப்பதும் இரவில்தான். கிறிஸ்துவின் பிறப்பும் நள்ளிரவிலேயே, நற்செய்தியாக, விடிவெள்ளியாக – சாதாரண இடையர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அக்கிரமங்களுக்குக் காரணமாக இருக்கின்ற இரவு நேரத்தில் ~ அநீதியை அப்புறப்படுத்துகின்ற ஒளியைப் பிரகாசிக்க வைப்பது வியப்பாகத்தானிருக்கிறது. எனவே இந்த இரவு புனிதமான ஓர் இரவு. அநீதிகளை விட்டு நன்மையைத் தேட அழைப்பு விடுக்கும் இரவு. பழமைகளை உதறித்தள்ளிவிட்டு புதிய எண்ணங்களை நம்மில் வளர்க்க சங்கநாதம் முழங்கும் இரவு. அவநம்பிக்கையை அகற்றிவிட்டு நம்பிக்கை தீபங்களாகச் செயல்பட நம்மைத் தூண்டுகின்ற இரவு. இந்த இரவிலே ~ இந்த இரவு நிகழ்ச்சியிலே பங்கெடுக்க வந்திருக்கின்ற உங்களை வரவேற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம், விடுதலைக்காக விழித்திருந்த மக்களைப்போன்று நமது விடுதலைக்காக விழிப்புடன் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுப்போம்.

(பணியாளர் மக்களை வாழ்த்தி வரவேற்றாம்.)

# உயிர்ப்பு பெருவிழா திருப்பலி முன்னுரை ~ 4

## உயிர்த்தார் இயேசு உயிர்த்தார்

**முன்னுரை:**

மரணம் மனித வாழ்வின் முடிவு. மரணம் அது மனித வாழ்வை ஒட்டு மொத்தமாய் உலுக்கி போட்டு விடும் நிகழ்வு. மரணத்தை மட்டும் மனிதன் வென்றதாக சரித்திரம் கிடையாது. ஆனால் வரலாற்றில் ஒரே ஒரு நபர் மட்டுமே மரணத்தை வென்றிருக்கிறார். ஒரே ஒரு முறை மட்டும்தான் மரணம் தோல்வியை சந்தித்தது. ஆம் மாபரன் இயேசுவினால் மட்டுமே மரணம் வெல்லப்பட்டது. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்து தான் இறைமகன் என்பதை நிருபிக்கவோ மற்றவரிடத்தில் தான் ஒரு மிகப்பெரிய சக்தி படைத்தவர் என்பதை காட்டவோ அல்ல மாறாக இயேசு வாழ்வு கொடுக்கும் பொருட்டு அதுவும் மனிதருக்கு நிறைவாழ்வு கொடுக்கும் பொருட்டும் மனிதர்கள் தங்கள் பாவ சங்கிலியில் இருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள் என்ற மிக உன்னதமான மகிழ்ச்சியான செய்தியை கொண்டு வரவும் உயிர்த்தார். நம் அனைவரின் விடுதலை வாழ்வை உறுதி செய்யும் பொருட்டும் இயேசு உயிர்த்தார். இந்த உயிர்ப்பின் நாளில் நாம் அனைவரும் உள்ள மகிழ்வோடு நம் கடந்த வாழ்வில் இருந்து புதிய வாழ்விற்கு உயிர்ப்பிக்கப் பெற்றுள்ளோம் என்ற சிந்தனையில் இறைவனுக்கு நன்றி கூறுவோம். நமக்காக தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் கல்வாரியில் ஈந்தளித்த அந்த மாபெரும் செயலை நினைவு கூர்ந்தவர்களாக இனி நம் அயலானுக்காக நாம் சிறிதளவேனும் தியாக வாழ்வை வாழ வேண்டிய அருங்கொடையை இந்த உயிர்ப்பின் பலியில் இறைவனிடம் வேண்டுவோம்.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளை கொண்டுள்ளது: 1.திரு ஒளி வழிபாடு 2.இறைவார்த்தை வழிபாடு 3.திருமுழுக்கு வழிபாடு 4.நற்கருணை வழிபாடு.

# முதல் பகுதி ~ திருவிழிப்புச் சடங்கின் ஒளி வழிபாடு ~1

### புதிய தீயைப் புனிதப்படுத்துதல்

***விரிவுரையாளர்:*** இருளை பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல். இருளை அகற்றி வழிகாட்டுவதே ஒளியின் பண்பு. இருளின் ஆட்சி அடிமைத்தனங்களையும் அநீதிகளையும் குறித்துக் காட்டுகிறது. ஒளி இறைபிரசன்னத்தையும், இறை ஆசீர்வாதத்தையும் எடுத்துக் காட்டுகிறது. திரியில் தீ ஏற்றப்படும் போதுதான் அது விளக்காக வெளிச்சம் தருகிறது. நமது உள்ளங்களில் மனிதநேயம், அன்பு, அக்கறை, அர்ப்பணம் என்ற தீ ஏற்றப்படும் போதுதான் நல்ல மனிதர்களாக உயர்வடைகிறோம். நம் கரங்களில் ஏந்தப்போகும் ஒளி, அகக்கண்களிலும் நிறைந்து நிறைவான மனிதர்களாக வாழ மனம் ஒன்றி பங்கேற்போம்.

***(குருவானவர் தீயை மந்திரித்து புனிதப்படுத்துகிறார்)***

### பாஸ்கா திரியை புனிதப்படுத்துதல்

***விரிவுரையாளர்:*** குருவானவர் இப்போது பாஸ்காத் திரியைப் புனிதம் செய்ய இருக்கிறார். நமது வாழ்வில் காரிருள் நீக்கிப் பேரொளி பாய்ச்சும் கிறிஸ்துவின் சிறப்புப் பிரசன்னத்தை, இந்தப் பாஸ்காத் திரி குறித்துக் காட்டுகிறது. நமது முன்னோராகிய இஸ்ராயேல் மக்களது பாலைவனப் பயணத்திலும் செங்கடல் கடப்பு நிகழ்விலும் நெருப்பும் மேகமுமான தூணிலுருந்து இறைவன் அவர்களைச் சிறப்பாக வழி நடத்தியது இப்போது நினவு கூறப்படுகிறது. இறைவன் தனது வல்லர செயல்கள் வழியாக நம் வாழ்வில் துணைநிற்க வேண்டுமெனற எதிர்பார்ப்போடு குருவோடு இணைந்து செப்போம். பாஸ்காத் திரி, உயிர்த்த இயேசுவைக் குறித்துக் காட்டுகிறது. அதன்மீது எழுத்தாணியில் குரு சிலுவை அடையாளம் வரைந்து, இதன் மூலம் இயேசுவின் சிலுவைக்கும் உயிர்ப்புக்கும் உள்ள றெவை உணர்த்துகிறார். அதன்பின், அகரம், னகரம் என்ற முதல் எழுத்தையும், இறுதி எழுத்தையும் எழுதி, கிறிஸ்துவே அனைத்திருக்கும் தொடக்கமும், முடிவுமாக இருப்பவர் என்பதையும், நாம் துவங்குகின்ற அனைத்திற்கும் அவரே நிறைவு கொடுக்க கூடியவர் என்பதையும் அறிவிக்கின்றார். பின்னர் நான்கு கோணங்களிலும் நிகழும் 2012 ஆம் ஆண்டின் எண்களை எழுதுகிறார். இந்த ஆண்டு முழுவதும் உயிர்த்த ஆண்டவரின் வெளிச்சத்தில் நாம் வளமாக வழி நடத்தப்படுவோம் என்பதை இதனால் உணரச் செய்கின்றர். நேற்றும் இன்றும் மாறாத கிறிஸ்துவுக்கு இவ்வாண்டை இவ்வாறு அர்ப்பணம் செய்து மகிழ்கிறோம். பாஸ்கா திரியில் வரையப்பட்டுள்ள சிலுவையில் ஐந்து மணிகளைப் பதிப்பதன் மூலம் இயேசுவின் ஐந்து காயங்களையும் திருச்சபை மகிமைப்படுத்துகிறது.

***(இப்போது புதிதாக மந்திரிக்கப்பட்ட நெருப்பிலிருந்து குரு பாஸ்காத் திரியை ஏற்றுகிறார்)***

### பாஸ்காத் திரி பவனி

***விரிவுரையாளர்:*** இதோ பாஸ்காத் திரி பீடத்தை நோக்கிக் கொண்டு செல்லும் பவனி தொடங்குகிறது. நமது வாழ்க்கைப் பயணம் கிறிஸ்துவோடு தொடருமாயின், நமக்கு தொல்லையில்லை, துன்பமில்லை, அறியாமையிருள் அகற்றப்படும். நமக்கு நாமே படைத்துக் கொண்டிருக்கும் எல்லாவிதமான கட்டுக்களும் அவிழ்க்கப்படும். எனவே கிறிஸ்து நம்மோடு என்ற உணர்வுடன் இப்பவனியில் பங்கெடுப்போம். குருவானவர் தலைமை பீடத்தை நோக்கி வரும்போது கிறிஸ்துவின் ஒளி இதோ என்று மூன்று முறை பாடுவார். நாம் அனைவரும் இணைந்து இறைவா உமக்கே நன்றி என்று காடுவோம். இரண்டாம் முறை பாடும்போது நதது கரங்களில் இருக்கும் திரிகளைப் பற்ற வைப்போம். மூன்றாம் முறை பாடியதும். ஆலயத்தின் விளக்குகள் எரியத் தொடங்குகின்றன.

### (பாஸ்கா அறிக்கை)

***விரிவுரையாளர்:*** இருள் ஆட்சி செய்யும் நேரம் இரவு என்றாலும் பாஸ்கா இரவினையே கடவுள் விடுதலையின் இரவாக மாற்றினார். இஸ்ராயேலர் விடுதலை பெற்றதும் இரவில்தான். தம் சிலுவை மரணத்தால் பாவத்தை அழித்த கிறிஸ்து, நம்மை மீட்க உயிர்த்தெழுந்ததும் இந்த இரவிலேதான். பாவ இருளின் ஆட்சியை, தீமையின் இருளை நன்மையின் ஒளி வென்றதும் இரவு நேரத்திலேதான். எனவே மனிதகுலம் மீட்கப்பட்ட இரவு காலத்தைப் புகழ்வதன் மூலம் இறைவனின் அற்புதச் செயல்களை, மீட்புத் திட்டத்தை நமக்கு உணர்த்தும் பாஸ்கா புகழுரைக்குச் செவிசாய்ப்போம்.

## முதல் பகுதி – திருவிழிப்புச் சடங்கின் ஒளி வழிபாடு –2

இருள் எங்குள்ளதோ அங்கே அருள் கொடுக்கக்கூடிய ஒளி தேவை. பகைமை எங்குள்ளதோ அங்கே பாசம் என்ற மனம் தேவை. தன்னலம் எங்குள்ளதோ அங்கே தன்னம்பிக்கை என்ற உணர்வு தேவை. பிரிவு எங்குள்ளதோ அங்கே ஒற்றுமை என்ற கயிறு தேவை.

மனிதனின் வாழ்க்கையில் தேவைகள் பலவகை இருக்கிறது. எது இருந்த போதிலும் அருள் என்ற ஒளியை நாம் பெற்றுவிட்டாலே இருள் என்று சொல்லக்கூடிய கெட்ட நடத்தைகள் நம்மைவிட்டு அகன்று விடும். எனவே தான் கடவுள் உலகை படைக்கும் போதே இருளையும், ஒளியையும் பிரித்தே படைத்தார். கடவுளால் அனுப்பப்பட்ட இறைமகன் இயேசு ஒளியாக இம்மண்ணில் தோன்றினார். இருளில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்க்கை பாதைக்கு வழிக்காட்டினார். எனவேதான் உலகின் ஒளி நானே என்னை பின் செல்பவன் இருளிலே நடக்கமாட்டான் என்றார். அவர் வாழ்க்கையில் வாழ்ந்தும் காட்டினார். செயலிலே செய்தும் காட்டினார்.

ஒரு மனிதன் மற்றொரு வாழ்வையே கொடுத்தான் என்பது பொருள். ஒளிக்கொடுப்பது என்பது மிகவும் சுலபமான காரியம் அல்ல. மாறாக, ஒளிக்கொடுக்க வேண்டுமென்றால் தன்னையே அழித்துக் கொண்டு கொடுக்க வேண்டும். தன்னையே வறுத்திக் கொடுக்க வேண்டும். இதனைதான் வள்ளலார் சுருக்கமாகச் சொல்லுவார். ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’.

ஒளிப்படைத்தவர்கள் மக்களுக்கு நேரிய பாதையை காட்டமுடியும், உறுதியான நம்பிக்கை ஊட்டமுடியும். தியாகமனப்பான்மை கொண்டிருக்க முடியும். இரக்கக் குணம், அன்பு உள்ளம் கொண்டவர்களாக வாழ முடியும். இத்தகைய நல்ல குணங்களைக் கொண்டவர்தான் நம் இறைமகன் இயேசு. இவரே இருளில் தடுமாறி தடவிக்கொண்டு அலைந்த மக்களுக்கு வழிகாட்ட ஒளியானார்.

நலிந்து, ஒடிந்து, ஒதுங்கி வாழ்ந்த எளியமக்களின்
இதயங்களுக்கு ஒளியை உதயமாக்கினார்
அவரின் பாதைக்கு அனைவரையும் அழைத்துச் செல்ல
வெட்ட வெளிச்சமாக இருந்தார்
நம்மை முழுமையாக்க அவர்
தம்மை வெறுமையாக்கினார்
நமக்கு வாழ்வளிக்க அவர் மரணத்தை
நோக்கி நடந்தார்.
நமக்கு ஒளித்தர தன்னையே
எரித்து சுடர் தந்தார்.
இன்றைய சமூகத்தில் வளர்ந்துவரும் தீய எண்ணத்தை
சுயநலத்தை சுட்டெரிப்போம்
சுற்றியுள்ள சகோதரர்களுக்கு
சுடர் தரும் ஒளியாக வாழ்வோம்
மற்றவரை வாழவைப்போம்.

## முதல் பகுதி ~ திருவிழிப்புச் சடங்கின் ஒளி வழிபாடு ~ 3

**(சடங்குகள் ஆரம்பிக்கும் முன்)**

***அறிப்பாளர்:***

இன்றைய வழிபாட்டு நிகழ்ச்சியின் முதற் பகுதியாக ஒளி வழிபாடு அமைகிறது. புதிய நெருப்பிலிருந்து ஒளி ஏற்றப்பட்டு பாஸ்கா திரி ஏற்றி வைக்கப்படுகிறது. பாதாளங்களில் இறங்கிய கிறிஸ்து வெற்றி வீரராக உயிர்த்தெழுந்ததை நினைவுபடுத்தும் பாஸ்கா திரி ஏற்றப்படும் போது நாமும் நமது பழைய வாழ்வை ஆழ்ந்த பாதளத்திலேயே புதைத்து விட்டு இயேசுவோடு உயிர்த்தெழுவோம். ஒளி பிரசன்னமாக நம்மை சூழ்ந்து நிறைவிக்கும் ஆண்டவர் இயேசுவின் அன்புச்சுடர் நம்மிடையே புதிய உள்ளங்களையும் புதிய உறவுகளையும் மலரச்செய்யட்டும். அன்பு சமூகமாக நாம் மலர வழி காட்டட்டும்.

**(புதுத் தீயை மந்திரித்து பாஸ்கா திரி பற்றவைத்ததும்)**

***அறிவிப்பாளர்:***

புதுத் தீயை மந்திரித்த பங்குப் பணியாளர், கிறிஸ்து அகரமும் னகரமுமாக இருக்கின்றார், தொடக்கமும் முடிவுமாக இருக்கின்றார், எல்லாமுமாக நம்மை நிறைவிக்கின்றார், திசைகள் காலங்கள் யாவற்றையும் கடந்து நிற்கிறார் என்பதைக் காட்டுகின்ற வகையிலே பாஸ்காத் திரியில், ஆல்பா ஒமேகா என்ற கிரேக்க எழுத்துக்களையும் சிலுவையின் நான்கு கோணங்களில் நிகழும் ஆண்டின் எண்களையும் எழுதுகின்றார். இன்றும் என்றும் வாழும் இறைவன் இந்த ஆண்டு முழுவதும் நம்மை நிறைவிக்க வேண்டி நிகழ்ச்சியில் பங்கெடுப்போம்.

**(பவனி)**

***அறிவிப்பாளர்:***

எரிகின்ற பாஸ்கா திரி ஏந்தி வருகின்ற பங்குப்பணியாளர் ~ ஏந்தி வருகின்ற ஒளி நம் ஒவ்வருவருடைய இல்லத்திலும் ~ பங்கிலுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் ஏற்றப்பட்டு இந்த சமூகத்தையே நிறைவிக்கின்ற விதத்தில் “கிறிஸ்துவின் ஒளி இதோ!” என்று பாடும்போது “இறைவா உமக்கே நன்றி!” என்று நாம் பதில் கொடுப்போம். ஒளியாக நாம் வாழ்வோம், வழிகாட்டுவோம் என்று வாக்குக்கொடுப்போம்.

***அறிவிப்பாளர்:***

கடவுள் ஒளியாக இருக்கிறார். கடவுளின் மெசியாவாக வருகின்ற இயேசு ஒளி. இந்த ஒளி திருச்சபையில் இன்று செயலாற்றுவதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணியே இருக்கிறது. இந்த வரலாறு இப்போது புகழுரையாக பாடப்படும். பக்தி ஆர்வத்தோடு பழைய வரலாற்று உணர்வுகைள நமது உள்ளத்தில் பெற கவனமுடன் பங்கேற்போம்.

## முதல் பகுதி ~ திருவிழிப்புச் சடங்கின் ஒளி வழிபாடு ~ 3

இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு நெருப்புத் தூணாக இருந்து ஒளிவீசி அவர்களை பாலைவனத்தில் வழிநடத்துகிறார். அதே இறைவன் இயேசுவாக வந்து உலகிற்கு ஒளியை கொண்டு வந்தார். இந்த இரண்டு வரலாற்று நிகழ்வுகளையும் குறிப்பதுதான் இந்த ஒளி வழிபாடு. இப்பொழுது விளக்குகள் அணைக்கப்பட்டிருக்க குரு புதுத் தீயை உண்டாக்குகிறார். புதுத் தீயில் இருந்து பாஸ்கா திரி ஒளி ஏற்றப்படும். எவ்வாறு எரிகின்ற தீ இருளை விரட்டி ஒளிப்பரப்புகின்றதோ அதுபோல நாமும் கிறிஸ்துவின் ஒளியை பெற்று நமக்கு எதிராக எழுப்புகின்ற தீய சக்திகளை சுட்டெரித்து சமுதாயத்தில் ஒளியாய் பரவுவோம் என்று உறுதியெடுப்போம்.

**புதுத் தீயை புனிதம் செய்தல்:** (அனைவரும் எழுந்து நிற்கவும்) குரு, இப்போது தீயை மந்திரிக்க இருக்கிறார். ஒளியை உருவாக்கும் கருவிகளில் ஒன்றாக தீ விளங்குகிறது. ஒளி இறைவனது சிறப்பு பிரசன்னத்தை குறித்துக் காட்டுகிறது. மனித வாழ்வின் அன்றாடத் தேவைகிளல் ஒன்றாக தீ பயன்படுகிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பை எதிர்நோக்கி இருக்கும் நாம் அகக்கண்களுக்கு ஒளி பெற உருக்கமாக செபிப்போம்.

**பாஸ்காத் திரி புனிதம் செய்தல்:** குருவானவர் இப்போது பாஸ்காத் திரியைப் புனிதம் செய்ய இருக்கிறார். நமது வாழ்வில் காரிருள் நீக்கிப் பேரொளி பாய்ச்சும் கிறிஸ்துவின் சிறப்புப் பிரசன்னத்தை, இந்தப் பாஸ்காத் திரி குறித்துக் காட்டுகிறது. நமது முன்னோராகிய இஸ்ராயேல் மக்களது பாலைவனப் பயணத்திலும் செங்கடல் கடப்பு நிகழ்விலும் நெருப்பும் மேகமுமான தூணிலிருந்து இறைவன் அவர்களைச் சிறப்பாக வழிநடத்தியது இப்போது நினைவு கூறப்படுகிறது. இறைவன் தனது வல்ல செயல்கள் வழியாக நம் வாழ்வில் துணைநிற்க வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு குருவோடு இணைந்து செபிப்போம்.

**பாஸ்காத் திரி பவனி:** இதோ பாஸ்காத் திரி பீடத்தை நோக்கிக் கொண்டு செல்லும் பவனி தொடங்குகிறது. நமது வாழ்க்கைப் பயணம் கிறிஸ்துவோடு தொடருமாயின், நமக்கு தொல்லையில்லை, துன்பமில்லை, அறியாமையிருள் அகற்றப்படும். நமக்கு நாமே படைத்துக் கொண்டிருக்கும் எல்லாவிதமான கட்டுக்களும் அவிழ்க்கப்படும். எனவே 'கிறிஸ்து நம்மோடு' என்ற உணர்வுடன் இப்பவனியில் பங்கெடுப்போம்.

குரு 'கிறிஸ்துவின் ஒளி இதோ' என்று மூன்று முறை பாடுவார். நாம் 'இறைவா உமக்கே நன்றி' என்று பாடகற் குழுவினரோடு இணைந்து முழங்குவோம். இரண்டாம் முறை பாடியபின் நம் திரிகளைப் பற்ற வைத்துக்கொள்வோம்.

**பாஸ்காப் புகழுரை:** விடுதலை அடைந்து இஸ்ராயேல் மக்கள் இறைவன் தங்களுக்குச் செய்த அனைத்து வல்ல செயல்களையும் நினைத்து நன்றிப்பண் இசைத்தனர். நம் அன்றாட வாழ்க்கை பயணத்தில் நாமும் சோதனைகளை வென்று சாதனை படைக்க இறையருள் இறைஞ்சியவாறே இப்புகழுரையைக் கேட்போம்.

## இரண்டாம் பகுதி – இறைவார்த்தை வழிபாடு

### உயிர்ப்பு பெருவிழா இறைவார்த்தை வழிபாடு ~ 1

***விரிவுரையாளர்:*** அன்புமிக்கவர்களே இன்றைய திருவழிபாட்டின் இரண்டாம் பகுதியான இறைவாக்கு வழிபாட்டிற்கு கடந்து செல்கிறோம். வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டார் என்ற இறைவார்த்தை நமக்கு இறைவார்த்தையை உள்ளத்தில் ஏந்த உறுதியளிக்கிறது. இன்றைய இறைவார்த்தை வழிபாடு, மீட்பின் வரலாற்றுச் சிறப்பை சித்தரிப்பதாகவும், சிந்திக்க வைத்து நம்மை அதன்படி வாழ அழைப்பு விடுப்பதாகவும் அமைகின்றன. இன்று பழைய ஏற்பாட்டு நூல்களிலிருந்து மூன்று வாசகங்களும் புதிய ஏற்பாட்டு நூல்களுள் திருமடல்களிலிருந்து ஒரு வாசகமுமாக நான்கு வாசகங்கள் வாசிக்கப்படும். இறுதியில் நற்செய்தி வாசிக்கப்படும். அனைவரும் எரியும் திரிகளை அணைத்துவிட்டு அமர்ந்து இறைவார்த்தையை கவனமோடு கேட்டு வாழ்வாக்குவோம்.

**முதல் வாசக முன்னுரை: (தொ.நூ 1:1~2:2):**

இயற்கை இறைவன் மனிதனுக்குச் கொடுத்த மாபெரும் கொடை. இறைவனின் ஆசர்வாதங்களை அள்ளித்தரும் அமுதசுரபிதான் இயற்கை என்பதை அமுதமொழியில் இன்று இறைவார்த்தை நமக்கு கற்றுத்துருகிறது. துள்ளி விளையாடும் மீன்கள், வியப்பில் ஆழ்த்தும் விண்மீன் கூட்டங்கள், விடுப்பு எடுக்காமல் விருட்சமாய் எழுந்து கனிதரும் செடி, கொடிகள், வித்தியாசமான ஊர்வன, பறப்பன, தவழ்வன எல்லாம் இந்த தரணிக்கு இறைவன் தந்த அதிசய படைப்புக்ள. ஆனால் எல்லாவற்றையும் ஆண்டு நடத்த, உயர்ந்த படைப்பாக மனிதனை படைத்தார் கடவுள். ஆண்டுகள் போகப் போக அத்தனையும் அழித்துவிட்டான் மனிதன். முகவரி இழந்து நிற்கும் இயற்கை அன்னைக்கு முகவரி கொடுக்க முன்வருவோம் என்ற எண்ணத்தோடு முதல் வாசகத்தை கவனமுடனன் கேட்போம்.

**மூன்றாம் வாசக முன்னுரை (விப. 14:15, 15:1):**

மனிதர்கள் துன்பப்படுகின்றபோது தூரமாக விலகி நிற்பவர் அல்ல இறைவன். அவன் அழுகின்ற போது அந்தரத்தை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டு பதுங்கிப் போனவர் இல்ல இறைவன். வருத்தப்பட்டு வாயெடுத்து கூவி அழைக்கின்ற போது வானத்தில் அமர்ந்து சுகம் அனுபவிப்பவர் அல்ல இறைவன். அழுகுரல் கேட்டு எழுந்து ஏழைகள் பக்கம் நின்று பாதுகாப்பு தருபவர். அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் உடனிருந்து உதவி செய்பவர். இஸ்ராயேல் மக்கள் பார்வோன் மன்னனின் ஆட்சியில் மடிந்தபோது விடுவிக்கச் சென்ற விடுதலை வீரர்தான் இறைவன். கசந்த காடியை, கசப்பு கீரையை உண்ட மக்கள் கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்று பாலும், தேனும் கொடுத்து பராமரித்ததை கூறும் வாசகத்தை கேட்போம்.

**ஏழாம் வாசகம் (எசே 36:16~28):**

இதயத்தில் ஈரமில்லாத,ஈன மனிதர்களாக வாழ்வது இறைவனுக்கு பிடிக்காத ஒன்று. பிடிவாதத்திற்கு கடிவாளம் போடும் கடின இதயத்தை கடவுள் வெறுக்கிறார். நாம் கனிவான இதயத்தோடும் இனிமையான இரக்கத்தோடும் வாழ அழைப்பு விடுக்கும் இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**திருமுக வாசக முன்னுரை (உரோ 8:3~11) :**

இறப்பு வாழ்வின் முடிவல்ல, அது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியது அல்ல. மாறாக முடிவற்ற வாழ்வின் துவக்கமே இறப்பு என்பதை இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு உயிரோட்டமான சான்றளிக்கிறது. அதற்கு நாம் ஒவ்வொருவரும் சாட்சியாக வாழ வேண்டும். சான்று பகர வேண்டுமென்று அழைப்பு விடுக்கும் வாசகத்தை கேட்டு முடிவில் துணிவுடன் வாழ்வோம்.

**நற்செய்தி வாசகம் (லூக் 24:1~12)**

# உயிர்ப்பு பெருவிழா இறைவார்த்தை வழிபாடு ~ 2

உயிர்ப்பு விழா கொண்டாட்டத்தின் முக்கிய வழிபாடுகளில் ஒன்று வார்த்தை வழிபாடு. இவ்வார்த்தை வழிபாடு ஒரு அங்கமாக அல்லது ஒரு தனி வழிபாடாகவே அமைக்கப்பட்டுள்ளது. வார்த்தை வல்லமை மிக்கது. எனவே, இறைவல்லமையை உணரச் செய்வதாய் இந்த வழிபாடு அமைக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலிருந்து (ஏழு) வாசகங்களும் புதிய ஏற்பாட்டிலிருந்து (இரண்டு) வாசகங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. படைப்பு தொடங்கி மீட்பின் வரலாற்றை இஸ்ராயேலின் வாழ்விலிருந்தும் இறைப் பராமரிப்பு மற்றும் கிறிஸ்து வழி மீட்டைபும் இவ்வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. இவற்றை வாசிக்க கேட்கும் போது நமக்குள் ஒரு மீட்பின் வரலாற்றை நாம் வாழ்ந்து கடப்போமாக. இறைமீட்பை வார்த்தை வழியாக சுவைப்போமாக.

**முதல் வாசக முன்னுரை : (தொ. நூல் 1:1~2:2)**

மனிதனுக்காக இறைவன் இந்த மண்ணுலகைப் படைத்ததை இவ்வாசகம் உணர்த்துகிறது. இறைவன் மனிதன் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்த படைப்பிற்கெல்லாம் உரிமையாளனாக அவனை தன் சாயலாகப் படைத்தார். அந்த சாயலின் வழி வந்த நாம் இறையன்பில் எவ்வளவு நிலையாய் இருக்கிறோம் என்பதை இந்த வாசகத்தின் வழியாக தியானிப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை : (தொ. நூல் 22:1~18)**

இறைவனின் முழு அன்பும் பராமரிப்பும் இருந்தாலும் மனிதன் தன் பாவத்தால் இறையன்பிலிருந்து இடறிவிழுந்தான். மனிதன் பாவத்தினால் விலகியபோதும், இறைவன் தன் உடன்படிக்கையால் மனிதனோடு உறவை தொடர்ந்தார். அபிரகாம், ஈசாக்கு வழியாக இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கை இறைமகன் இயேசு இன்று நிறைவு செய்துள்ளார் என்பதை இவ்வாசகத்தின் வழியாக கேட்கும் தருவாயில் நமது விசுவாசத்தை நாம் ஒருமுறை பரிசோதித்து அறிவோம்.

**மூன்றாம் வாசக முன்னுரை : (வி.ப 14:15~15:1)**

நானே ஆண்டவர் என்று நம்பிக்கையூட்டி, அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, மேகத் தூணாகவும், நெருப்புத் தூணாகவும் இருந்து வழிநடத்தி வருகிறார் இறைவன், என்பதை இவ்வாசகம் விளக்குகிறது. இறைநம்பிக்கையின் மூலம் செங்கடலை கடக்க செய்ததுடன், பகைவர்களை எதிரிகளை அழித்துக் காக்கிறார். இன்று இறைவன் மேல் நம்பிக்கைக் கொண்டவர்களாக வாழ, வளர அழைப்பு விடுகின்றது இவ்வாசகம், செவிசாய்த்து வாழ்வோம்.

**நான்காம் வாசக முன்னுரை : (எசாயா 54:5~14)**

எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் இரக்கமும் அன்பும் கொண்டவர். குறைகளையும் குற்றங்களையும் மன்னித்து வாழ்வு வழங்கும் வள்ளல் என்பதை வெளிப்படையாக வெளிப்படுத்துகிறார். 54:10~ல் மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் நான் உன் மீது கொண்ட பேரன்பு நிலை சாயாது, என்று இறைவார்த்தை மூலம் கலங்கி தவித்துக் கொண்டிருந்த இஸ்ராயேலுக்கு நம்பிக்கை அளித்த இறைவன்,

இன்று அஞ்சாதே நான் உன்னை விட்டு அகன்று போகமாட்டேன் என உறுதியளிக்கிறார். இவ்வார்த்தைகளுக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**ஐந்தாம் வாசக முன்னுரை : (எசாயா 55:1-11)**

இறைவனுக்குள் இணைந்திருந்தால் பாலும் தேனும் பொழியும் வளமை நமக்கு. விலகினால் உள்ளம் வறட்சி என்பதே உண்மை. எனவே அத்தகைய பாவமே ஆன மனிதனை மன்னித்து காக்கும் இறைவனின் இரக்கத்தை வாசிக்க கேட்போம். இறையன்பை தாங்கும் பாத்திரமாக நாம் வாழ முயற்சிப்போம்.

**ஆறாம் வாசக முன்னுரை : (பாருக் 3:9-15, 32-4:4)**

இஸ்ராயேல் மக்கள் தங்களின் அடிமை வாழ்வுதனை நினைத்துப் பார்க்க பாரூக் அழைக்கிறார். வானத்து விண்மீனும், ஞாயிறும் நிலமும் இறைவனில் இருப்பதால் தம் முறைமையில் வழுவாமல் உள்ளன. காரணம் இறைவனோடு அவை உறவில் உள்ளன. எனவே நாமும் நம் வாழ்வில் வழுவாமல் இருக்க நிறைமகிழ்ச்சி அடைய இறைவனை அண்டி வர வேண்டும் என்று இவ்வாசகம் கூறுகிறது. இனிதே செவிமடுப்போம்.

**ஏழாம் வாசக முன்னுரை : (எசே 36:16-28)**

இஸ்ராயேல் மக்கள் இறை உடன்படிக்கையை மறந்து வாழ்ந்த நேரத்தில் நான் உங்கள் கடவுள், நீங்கள் என் மக்கள் என்பதை தெளிவுப்படுத்தி, பழைய வாழ்வை கலைந்து வாழ சதையிலான உள்ளத்தை தருவதாகவும் தொடர்ந்து இறைவழியில் வாழ ஆவியை பொழிந்து ஆசீர்வதிப்பதாகவும் உறுதியளிக்கிறார். நாமும் நம்முடைய பாவ வாழ்வை விட்டு இறையருளில் வாழ ஆர்வமுடன் இவ்வார்த்தைகளுக்கு செவிசாய்ப்போம்.

**திருமுக வாசக முன்னுரை : (உரோ 6:3-11)**

இறை இயேசுவுக்குள் புதுவாழ்வு... இயேசுவின் திருமுழுக்கில் நாம் நிறைவாழ்வு அடைய புனித சின்னப்பர் அழைக்கிறார். இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**நற்செய்தி வாசக முன்னுரை :**

உயிர்த்த இயேசுவின் முதல் சாட்சிகளாம் பெண்கள் இங்கே பேசுகிறார்கள் இயேசுவின் உயிர்ப்பின் செய்தியை நற்செய்தியாளர்கள் பேசுகிறார்கள். இறைஇயேசு உயிர்த்துவிட்டார். அஞ்ச வேண்டாம், நம்மோடு அவர் உயிருடன் பிரசன்னமாகி இருப்பதை நற்செய்தியிலிருந்து வாசிக்கக் கேட்போம்.

# உயிர்ப்பு பெருவிழா இறைவார்த்தை வழிபாடு - 3

***அறிவிப்பாளர்:***

பாஸ்காப் புகழுரை வழியாக ஒளியாகிய இறைவனின் செயல்பாடுகளை அறிவிக்கக் கேட்ட நாம் இந்த ஒளி எவ்வாறு இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் செயல்பட்டது என்பதை இறை வார்த்தை வழியாகக் கேட்போம். ஏழு அழகிய வாசகங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தியான சிந்தனையோடு நாம் கேட்போம். நமது கைகளில் இருக்கின்ற ஒளி விளக்குகளை அனைத்துவிட்டு அமர்வோம். ஒவ்வொரு வாசகத்தின் முடிவிலும் பாடப்படும் சங்கீதங்களைப் பக்தி ஆர்வகத்துடன் கேட்போம். சங்கீதத்தின் இறுதியிலே பங்குப் பணியாளர் எழுப்புகின்ற மன்றாட்டின் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்பதனையும் மனதில் வைத்துக்கொள்வோம். ஏழு வாசகங்கள் தொடர்கின்றன. இப்போது முதல் வாசகம்.

**வாசகம் 1 : தொ.நூ. 1:1-2:2**

கடவுள் ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைக்கின்றார். இருளை ஒதுக்கி ஒளியை உருவாக்குகின்றார். உலகின் அனைத்து வளங்களையும் உருவாக்கி மனிதனுடைய பொறுப்பில் விடுகின்றார். எல்லாமே நல்லதாக கடவுளுக்குத் தெரிகிறது. ஆனால் கடவுள் நல்லதெனக் கண்ட உலகு மனித ஆசையால் எப்படி சிறுகச் சிறுக உருக்குலைந்து இன்றைய இழி நிலையை அடைந்திருக்கிறது என்பதை சிந்தித்தவாறு முதல் வாசகத்தை தொடக்க நூலிலிருந்து வாசிக்கக் கேட்போம்.

**வாசகம் 2 : தொ.நூ. 22:1-18**

ஆபிரகாம் என்ற தனி ஒரு மனிதரிடமிருந்து இஸ்ராயேல் மக்களின் வரலாறு ஆரம்பமாகின்றது. இந்த ஆபிரகாம் கடவுள்மீது விசுவாசம் கொண்டவராக தன் சொந்த நாட்டை விட்டுவிட்டு பெயர் தெரியாத நாட்டிற்குப் பயணம் செல்கிறார். காலம் கடந்து பிறக்கின்ற தன் ஒரே மகனைக் கடவுள் பலியிடக் கேட்டபோதும் தயங்கவில்லை. இந்த விசுவாசம் இன்று நமக்கும் தேவைப்படுகிறது. இறைவன் நமக்கும் விசுவாசத்தை அருள் ஆதியாகமத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள வாசகத்தை பக்தியோடு கேட்போம்.

**வாசகம் 3 : வி.ப 14:15-15:1**

கடவுளுடைய அன்பு துன்புறுத்தப்படுவோர் சார்பாக நிற்பது. அநியாயமாக துன்புறுத்துபவர்களை அடக்கி ஒடுக்குவது அவருடைய இயல்பு, இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கால் நனையாமல் கடக்க உதவுகின்ற கடவுள் எதிரிகளை மூழ்கடிக்கிறார். செங்கடல் மீட்பின் அடையாளம்ஞ விடுதலையின் வழி. ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் இந்த மீட்பைப் பெறுகிறோம். பெற்ற மீட்பை பாதுகாக்கிறோமா? என்ற கேள்வியோடு விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகத்தைக் கேட்போம்.

**வாசகம் 4 : ஏசா 54:5-14**

பாபிலோனிய அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கின்றார் இறைவாக்கினர் எசாயர், பழையதைக் கடவுள் மறந்து புதிய எருசலேமை உருவாக்குவார். இதனால் இனி பாவம் ஒழியும். நீதி நிலைநாட்டப்படும். சமாதானம் நின்று நிலவும், நம்பிக்கை தருகின்ற இந்த வார்த்தைகள் பல கவலைகளினால் சோர்ந்திருக்கின்ற நம் உள்ளங்களிலும் நம்பிக்கையைப் படரவிடட்டும்.

**வாசகம் 5 : ஏசா 55:1-11**

கடவுள் தருகின்ற மீட்பு நிலையானது — நிரந்தரமானது. இனாமாக எல்லோருக்கும் வழங்கப்படுவது. இந்த மீட்பைக் கண்டடைய நாம் கடவுளைத் தேடவேண்டும். அண்மையிலேயே அவர் இருக்கிறார். நமது வாழ்வைச் சீர்ப்படுத்தி கடவுளுடைய வழியிலே நடக்கும்போது மீட்பு நம்மை நிச்சயம் தொடும். கடவுளுடைய வார்த்தை பயன்தராமல் போகாது. இறைவாக்கினர் விடுக்கின்ற அழைப்புக்கு நம் அகக்காதுகளை திறந்துவைப்போம்.

**வாசகம் 6 : பாரூக் 3:9-15, 32-4:4**

கடவுளுடைய ஞானம் உலகைப் படைக்கிறது. அவரது அறிவு ஈடு இணையற்றது. இந்த ஞானம் இஸ்ராயேல் மக்களை வழி நடத்தியது. திருச்சட்டத்தில் கடவுளுடைய ஞானத்தை நாம் காணமுடியும். இதைக்காண நாம் மனந்திரும்ப வேண்டும். ஒளிச் சுடராக, வீசும் வெளிச்சமாக அவர் அருளி இருக்கிற சட்டங்களை நோக்கி நாம் நடக்க வேண்டும். இதற்கு நாம் தயாரா? பதில் கொடுக்க வாசகத்தைக் கேட்போம்.

**வாசகம் 7 : எசேக் 36:16-28**

புதிய வானகம் - புதிய வையகம் இதை உருவாக்குவதே கடவுளின் திருவுளம். கனவு காண்கிறார் இறைவாக்கினர் எசேக்கியேல். கனவு நனவாக கல்லான இதயங்களைக் களைந்து இரக்கமுள்ள இதயத்தை நாம் பெற வேண்டும். அநீதியைக் கண்டு ஆத்திரப்படுகின்ற இதயம், அழுகையைக் கண்டு அரவணைக்கத் துடிக்கும் இதயம் நமக்குத் தேவை. இதைப் பெற இறை அருள் வேண்டி வாசகத்தைக் கேட்போம்.

## உயிர்ப்பின் முழக்கம்

***அறிவிப்பாளர்:***

பாஸ்கா அறிக்கை வழியாகவும், இறை வார்த்தை வழியாகவும் நம் வரலாற்றைக் கேட்டோம். இது ஒளியின் வரலாறு. இருளை அகற்றி ஒளியை ஏற்ற வரலாற்றில் செயல்பட்ட கடவுளின் சரித்திரம். இந்த சரித்திரம் இயேசுவில் முழுமை பெறுகிறது. இறுதி இறைவாக்கினராக வருகின்ற இயேசு கடவுளின் திருமகன் - இவர் மெசியா, புதிய பாஸ்கா — சாவை வென்றவர். வாழ்விற்கு வழி காட்டியவர். இரவைக் கிழித்து ஒளியை நிலை நாட்டியவர். அநீதியை அகற்றி நீதியைத் தருகின்றவர். இந்த இறைவன் உயிர்த்தார் என்ற மகிழ்ச்சி நம்மிலே எழ உன்னதங்களிலே என்னும் கீதத்தை ஆரவாரத்தோடு பாடுவோம். மணிகள் ஒலிக்கின்றன. நமது மனங்களும் மகிழட்டும்.

**திருமுக வாசகம் : உரோ 6:3-11**

கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்தெழுந்தவர்களில் முதற்கனி, சாவின் வழியாக வாழ்வைப் பெற்றுத் தந்த வள்ளல். இனி மனித இனத்திற்கு சாவு என்பதே இல்லை. அழிவுப் பாதையை விட்டு விட்டு மனித இனம் வாழ வேண்டும். வாழ்வைத் தெரிந்து கொள்ள நான் சின்னப்பர் கூறும் கருத்துக்களைக் கேட்போம்.

**நற்செய்தி**

கிறிஸ்து சாவை வென்று என்றும் வாழுகின்றவராக வரலாற்றை மாற்றி அமைக்கிறார். இந்த உலகு சாவை தேடுவதை விட்டு விட்டு இயேசு அருளும் வாழ்வைப் பெற வேண்டும். சாவின் சத்தத்தை அடக்கிவிட்டு வாழ்வின் கீதத்தை இசைக்க வேண்டும். இதற்கு இயேசுவைப்போன்று சாவை ஏற்கின்ற துணிவு நமக்கு வேண்டும். உயிர்த்த ஆண்டவர் இந்தத் துணிவைத் தர நற்செய்தி வாசகத்தை — மகிழ்ச்சி தரும் நற்செய்தி வார்த்தைகளைக் கேட்போம். நமது கைகளில் இருக்கின்ற திரிகளை ஏற்றி உலகெங்கும் உயிர்ப்புக்கு சாட்சிகளாக விளங்குவோம்.

**அல்லேலூயா!**

# உயிர்ப்பு பெருவிழா இறைவார்த்தை வழிபாடு ~ 4

**முதல் வாசகம்: தொடக்க நூல் 1:1~2:2**

இறைவன் மனிதரைத் தம் சாயலாகவும், படைப்பின் சிகரமாகவும் படைத்தார். அனைத்தையும் தனக்குக் கீழ்ப்படுத்தும் ஆற்றலை அவர்களுக்கு அளித்தார். மனிதரோடு நல்லுறவு கொண்டு அவர்களது வாழ்வில் இறைவன் என்றும் அக்கறை காட்டினார் என்பதை விளக்கிக் கூறும் இவ்வாசகத்திற்கு செவிசாய்ப்போம்.

**மூன்றாம் வாசகம்: விடு.பய: 14:15~15:1**

பார்வோன் மன்னனது ஆட்சியில் இஸ்ராயேல் மக்கள் தங்கள் வாழ்க்கையே கசந்து போகுமளவுக்கு அல்லலுற்றனர். இறைவன் அம்மக்களின் அழுகுரைக் கேட்டு மோசே வழியாக அவர்களை வியத்தகு முறையில் மீட்டு வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்து வந்ததை வாசிக்கக் கேட்போம்.

**ஐந்தாம் வாசகம்~ எசா:55:1~11**

இறைவனுடைய வார்த்தையானது செயல் வன்மை உடையது. அதை இறைவன் எந்த நோக்கத்திற்காக அனுப்பினாரோ அதைச் செம்மையாக செய்து முடிக்காமல் அவ்வார்த்தை இறைவனிடம் திரும்பாது என்று உறுதியாகக் கூறி, நாமும் இறைவார்த்தையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**ஏழாம் வாசகம்~ எசேக்கியேல்:36:16~28**

இஸ்ராயேல் மக்கள் பலவீனத்தாலும், தங்கள் பிடிவாதத்தாலும் 'யாவே' கடவுளை மறந்து, பிற தெய்வங்களை நாடிச்சென்று துன்புற்றனர். அவர்களுக்குத் தமது ஆவியை அனுப்பி, புதிய இதயத்தைப் பெற்றுக் கொள்ளச் சொல்கிறார் இறைவன். இவ்வாசகத்தை கேட்பதன் மூலம் நாமும் புதிய இதயத்தை பெற்று வாழ்வோம்.

**சிறப்பு அழைப்பு**

உலகின் ஒளியாம் கிறிஸ்து இயேசுவின் உயிர்புக்காக காத்திருக்கும் இறை மக்களே. எல்லாரும் எழுந்து நிற்போம். இப்போது பீடத்துத் திரிகள் ஏற்றப்படுகின்றன. நமது உள்ளங்கள் மகிழ்ச்சியால் நிறையட்டும் நாம் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருக்கும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு இதோ நெருங்கி வந்துவிட்டது. இப்போது குருவானவர் "உன்னதங்களிலே" என்ற வானவர் பாடலைக் குரலெழுப்பிப் பாடுவார். ஆலய மணிகள் முழங்கும். அப்போது இயேசு தாம் கூறிய படியே உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை உணர்ந்தவர்களாய் பாடகற் குழுவினரோடு சேர்ந்து நாமும் உன்னதங்களிலே கீதத்தை முழங்குவோம்.

**திருமுக வாசகம்: உரோயைர்:6:3~11**

பாவத்திற்கு இறந்து, கிறிஸ்துவோடு புதிய வாழ்வு பெற அழைப்பு விடுக்கும் திருமுக வாசகத்தை கேட்போம். வாசக முடிவில் குரு நம்மை ஆடம்பரமாக 'அல்லேலூயா' என்று பாட அழைப்பார். நாம் அனைவரும் இணைந்து ஒருமித்த குரலெழுப்பி 'அல்லேலூயா' என்று முழங்குவோம்.

**நற்செய்தி வாசகம்: லூக்:24:1~12**

'மரணம் இயேசுவைத் தம் பிடியில் வைத்திருக்க முடியாது' என்பதை உலக மக்கள் அறியும் வண்ணம், தாம் முன்னுரைத்த படியே கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். வெற்றுக் கல்லறையை உற்று நோக்கிய பலரும் அவரது உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தனர். நாமும் அதே மனநிலையுடன் நற்செய்தி வாசகத்தை கேட்போம்.

# மூன்றாம் பகுதி – திருமுழுக்கு வழிபாடு

## திருமுழுக்கு வழிபாடு முன்னுரை – 1

**விரிவுரையாளர்:** பாசமிகு சகோதரர்களே சகோதரிகளே, இன்றைய வழிபாட்டின் மூன்றாம் பகுதியான திருமுழுக்கு திருநிகழ்வானது இப்போது ஆரம்பிக்கப்பட உள்ளது. திருமுழுக்கு திருச்சபையின் உறுப்பினராக மாற அழைப்பு விடுப்பதுடன் இறை, மனித உறவில் வாழவும் அழைப்பு விடுக்கின்றது. அர்ப்பண வாழ்வு வாழ இலட்சியம் தெளிவு பெற ஆணிவேராக, அடித்தளமாக இருப்பது இந்த திருமுழுக்கு அருட்சாதமே. இறைவனுக்குகந்த உயிருள்ள பலியாக நம்மை படைக்க, தூய வாழ்க்கை வாழ வரம் வேண்டுவோம். திருமுழுக்கு பெற்றவருக்காகவும், பெற இருப்போருக்காகவும் செபிப்போம்.

## திருமுழுக்கு வழிபாடு – 2

திருமுழுக்கு கிறிஸ்துவ வாழ்வுக்கு ஒரு தொடக்க நிலை. திருமுழுக்கு அங்கிகாரத்தின் அடையாளம். எனவே, தான் அன்று கிறிஸ்துவை தந்தையாம் இறைவன் மக்கள் முன்வைத்து தம் மகனின் தகுதிக்கு சான்று பகர்கின்றார் “இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்படைகிறேன்”. இன்று நாம் பெறும் திருமுழுக்கு நீரினாலும் தூய ஆவியினாலும் ஆனது. அன்று இறைத்தந்தை தம் மகனில் பூரிப்படைந்ததுப்போல, இன்று நம்மில் பலர் பூரிப்படைய இவ்வழிபாட்டில் சிறந்த முறையில் பங்கு கொள்வோம்.

## புனிதர்களின் மன்றாட்டு மாலை

***விரிவுரையாளர்:*** இறைமகன் இயேசு, மதிப்பீடுகளை மலரச் செய்வதற்காக மலை போன்ற பாடுகளை பட்டபோதும், பாடுகளோடு பயணம் செய்து மகிழ்ச்சியை கண்டவர்கள், இறைவனையே செல்வமாக கொண்டவர்கள், இறைவனை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதியவர்கள் இந்த புனிதர்கள். தூய்மையான உள்ளங்களோடும், எண்ணங்களோடும் புனிதர்களின் மன்றாட்டு மாலையை பாடுவோம்.

## திருமுழுக்கு தண்ணீருக்கு ஆசியளித்தல்

***விரிவுரையாளர்:*** இப்போது திருமுழுக்கு தண்ணீருக்கு ஆசியளித்தல் நிகழ்வு நடைபெறுகிறது. தண்ணீர் புது வாழ்வின் ஊற்றாக அமைகிறது. தண்ணீரில் தான் தூய ஆவி அசைவாடிக் கொண்டிருந்தார் என்பதை பழைய ஏற்பாடு நமக்கு தெளிவு படுத்துகிறது. மீட்பின் வரலாற்றில் தண்ணீர் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆவியானவர் இத்தண்ணீரை அபிஷேகம் செய்து, ஆசீர்வரிக் வேண்டுமென்ற எண்ணத்துடனும், நம்பிக்கையுடனும் இந்திகழ்வில் பங்கெடுப்போம்.

## திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்தல்

***விரிவுரையாளர்:*** பாசமிக்கவர்களே, புதுப்பித்தல் என்பது புது அனுபவத்தை தருவது. புதிய சக்தியையும், புத்தெழுச்சியையும் தரும் புதுமையான அனுபவமே புதுப்பித்தல். நாம் குழந்தைகளாய் இருந்தபோது, நாம் பேச முடியாததால், நம் ஞானப் பொறோர் நமக்காக ஞானஸ்நான வாக்குறுதிகளை அளித்தார்கள். இப்பொழுது, நாம் அவ்வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொள்வோம். இப்போது நாம் அனைவரும் திரிகளை ஏற்றிக் கொண்டு எழுந்து நிற்போம். குருவானவர் கேட்கும் கேள்விகளுக்கு ஒருமையில் பதிலளித்து நமது வாழ்வை புதுப்பித்துக் கொள்வோம்.

## தீர்த்தம் தெளித்தல்

***விரிவுரையாளர்:*** நாம் புதுப்பிறப்பு அடைந்துள்ளதன் அடையாளமாகவும், உயிர்த்த இயேசுவில் புதுவாழ்வு தொடங்குவதன் அடையாளமாகவும் இப்புதுத் தண்ணீரை குருவானவர் நம்மீது தெளித்து நம்மைப் புனிதப்படுத்துகிறார். எசேக்கியல் இறைவாக்கினர் காட்சியில் கண்ட தேவாலய வலப்புறமிருந்து புறப்படும் ஆசிர்வாதமிக்க தண்ணீராக இதைப் பெற்றுக் கொண்டு, அதே வார்த்தைகளில் பாடி ஆர்ப்பரிப்போம்.

## திருமுழுக்கு வழிபாடு ~ 3

***அறிவிப்பாளர்:***

வரலாற்றில் புனிதமான இந்த இரவில்தான் ஆண்டிற்கு ஒருமுறை திருச்சபை திருமுழுக்கு அருட்சாதனத்தை வழங்கி உள்ளது. கிறிஸ்தவன் இயேசுவின் இறப்பில் பங்கெடுப்பதுதான் திருமுழுக்கு இயேசு உயிர்த்திராவிட்டால் நமது விசுவாசம் வீணான விசுவாசம். விசுவாசத்தின் அஸ்திவாரமாக இருக்கின்ற உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவாசத்தின் முதலம்சம். இதை விசுவசிக்கின்றவர்களாக இவ்வழிபாட்டில் பங்கெடுப்போம். புதியவர்களுக்காக வேண்டுவோம். நமது திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிப்போம்.

**(தீர்த்தம் மந்திரிப்பு)**

***தண்ணீர் மந்திரிக்கும் முன்:***

***அறிவிப்பாளர்:***

தண்ணீர் கடவுளுடைய கொடைகளில் முதன்மையானது. உலகம் உண்டாவதற்கு முன்பு தண்ணீர்தான் எங்கும் நிறைந்திருந்தது. இந்தத் தண்ணீருடைய தன்மைகள், பயன்கள் எண்ணிலடங்காதவை. பாலை வனத்தில் ஊற்றுச் சுனையாக பருக வைக்கிறது. யோர்தான் ஆற்றிலே இயேசுவை ஆவியால் அபிசேகம் செய்வதற்கு நீர் தேவைப்படுகிறது. இன்றும் நாம் புனிதமடைவதற்கு — புதுப்பிறப்படைவதற்கு தேவைப்படுவது தண்ணீர். என்றும் வாழும் இயேசுவே உயிருள்ள நீர் வாழ்வுச் சுனையாக வருகின்ற இயேசு வறட்சி நிறைந்த நமது வாழ்வை, உலகை நீரால் ~ அருள் நீரால் நிறைக்க வேண்டி நிகழ்விலே பங்கெடுப்போம்.

## திருமுழுக்கு வழிபாடு ~ 4

இன்றைய திருவழிபாட்டின் மூன்றாவது பகுதியான திருமுழுக்கு வழிபாடு இப்போது ஆரம்பமாகிறது. இவ்வழிபாடானது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

**புனிதர்களின் மன்றாட்டு மாலை:**

திருமுழுக்கின் அருளை நிறைவாகப் பெற்று கடவுளின் குழந்தை என்ற உரிமையோடும் திருச்சபையின் உறுப்பினர் என்ற கடமை உணர்வோடும் வாழ, இறை உறவில் நிலைத்திருந்து நமக்காக பரிந்துரைக்கும் புனிதர்களை நோக்கி மன்றாடுவோம்.

**திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்தல்:** தண்ணீர் புதுவாழ்வின் அடையாளம். மீட்பின் வரலாற்றில் இறைவன் அதனைப் பயன்படுத்திய விதத்தையும், தூய ஆவியார் அதன் மீது அசைந்தாடி மக்களினத்தை புதுப்பிறப்பாக மாற்றிய ஆற்றலையும் குரு இச்செபத்தில் நினைவு கூறுகிறார்.

**திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்:** அனைவரும் திரிகளைப் பற்றவைத்துக் கொண்டு எழுந்து நிற்போம். நாம் திருமுழுக்கு பெற்றபோது, நமக்குப் பதிலாக நமது பெற்றோர், ஞானப்பெற்றோர் ஆகியோர் குருவழியாகக் கிறிஸ்துவிடம் வாக்குறுதிகளைச் சமர்ப்பித்தனர். இப்போது குரு கேட்கும் கேள்விகளுக்கு பொருளுணர்ந்தவர்களாக ஒருமையில் நமது நம்பிக்கையை நாமே அறிக்கையிட்டுப் புதுப்பித்துக்கொள்வோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள் ~ 1

1. தந்தையே இறைவா, இறையாட்சியை அமைக்க பயணம் செய்யும் உமது திருச்சபைக்கு உம் அருளாசியை வழங்கியருளும், அதை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள் திருப்பணியாளர்கள், துறவியர் யாவருக்கும் ஆவியின் கனிகளைப் பொழிந்து அவர்கள் காலத்தின் அறிகுறிகளை அறிந்து திருச்சபையை வழிநடத்த ஆற்றல் அளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீர் உருவாக்கிய இந்த பூமியில் நாளும் காணும் வன்முறை, போர் கலவரம் இவை அகன்று மனிதர்கள் யாவரும் அமைதியின் தூதர்களாக வலம் வரவும் உலக சகோதரத்தை உயர்த்திப்படித்து மானுட நேயம் காக்கவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. சமத்துவத்தின் சங்கமமே இறைவா உலக மக்கள் யாவரும் செய்யும் தெரிலால், பேசும் மொழியால், சேர்த்துள்ள செல்வத்தால் பிறப்பால், வளர்ப்பால், உயர்வு தாழ்வு பார்க்கும் நிலையில் உள்ளனர். எங்கள் மனங்களில் மண்டியுள்ள ஏற்றத்தாழ்வு அழுக்குகள் அகன்று அனைவரும் சமம் என்ற உணர்வுடன் சமத்துவத்திற்கான உழைக்க அருள்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. தந்தையே இறைவா, திருமுழுக்கால் புதுப்பிறப்படைந்துள்ள மக்கள் யாவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழ்க்கை நடத்தவும் உலகில் உப்பாகவும் ஒளியாகவும் உமக்கு சாட்சியம் பகர்ந்திடவும் ஆற்றல் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. உறவுகளுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவா, விரோதத்தால் விலகி நிற்கும் மக்களைக் கடைக்கண் பாரும். இவர்களின் நெஞ்சங்களில் நிறைந்துள்ள பகைமை எண்ணங்கள் மாறி பாஸ்கா மகிழ்வினால் உறவுகளை ஊக்கப்படுத்தி வாழ அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள் – 2

***பணியாளர்:***

உயிர்த்த ஆண்டவர் நமது தேவைகளை உணர்ந்தவர். குறைபாடுகளைத் தீர்த்து வைக்க வல்லவர். புனிதமான இந்த இரவில் நமது தேவைகளுக்காக, நாடு, உலகு, திருச்சபையின் தேவைகளுக்காகவும் இப்போது வேண்டுவோம்.

1. சாவை வென்ற இயேசுவே, இன்று எங்களைச் சுற்றிலும் சாவின் சத்தம் கேட்குது. எங்கு நோக்கினும் சாவின் அறிகுறிகள். பசி, பஞ்சம், பட்டினி, நோய், போர் என்று வாழ்வைத் துண்டிக்கும் கொடுக்குகள் அச்சுறுத்துகின்றன. இறைவா, அழிவின் வெளிப்பாடுகளை அழித்து வாழ்வுச்சின்னங்களை நிலைநாட்ட அருள்தர உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியாகிய தேவனே, துணிந்து வாழத் துடிக்கின்ற எங்களை அவநம்பிக்கை அலகை அன்றாடம் அலைக்கழிக்கின்றது. அர்த்தமிழந்து சோம்பித் திரிகின்ற எங்கள் வாழ்வில் மீண்டும் நம்பிக்கையின் தீபங்கள் பற்றியெரியச் செய்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தந்தையாகிய இறைவனே, இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் நேரடியாக ஈடுபட்டதோடு, உமது அன்பு மகன் இயேசுவின் வழியாக இன்று உலக மக்கள் யாவருக்கும் மீட்பை அருளியிருக்கிறீர். அவர் அருளும் புது வாழ்வை நேர்மனத்தோடு உம்மைத்தேடும் மனிதர் யாவரும் பெற்று மகிழ திருச்சபை ஒளியாக, உப்பாக, புளிக்காரமாகச் செயல்பட ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. குடும்ப வாழ்வை நிறைவாக வாழ்வதில் இன்று எத்தனையோ பிரச்சினைகள், சிக்கல்கள். இவற்றைக் கண்டு மலைத்து நிற்கிறோம்ஸ்ரீ துவண்டு விடுகிறோம்ஸ்ரீ தனித்து விடப்படுவதை உணர்கிறோம். பாடுகளைத் தனித்துத் தாங்கி வெற்றிகண்ட இயேசுவே, எங்கள் ஒவ்வொருவருக்கும் துணிச்சலையும் தைரியத்தையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

5. அன்புக் கடவுளே, உமது விடுதலை வாழ்வை தனிப்பட்ட ஒரு நபருக்காக நீர் வழங்காமல், ஓர் இயக்கமாக, சமூகமாகச் செயல்பட்ட மக்களுக்கே வழங்க திருவுளமானதை மனத்தில் கொண்டு இந்த பங்கு மக்களாகிய நாங்களும் ஓர் இயக்கமாக, சமூகமாக ஒற்றுமையுடன் செயல்படத் துணை நிற்க தந்தையே உம்மை மன்றாடுகிறோம்.

***பணியாளர்:***

நமது தனிப்பட்ட தேவைகளுக்காகச் சிறிது நேரம் மௌனமாக வேண்டுவோம்...

வாழ்வை வாரி வழங்கிய இறைவனே, உமது மகன் வாழ்வாக, ஒளியாக எங்கள் வாழ்வில் நம்பிக்கையைத் தருகிறார். சாவைக் கடந்த அவரது வாழ்வு எங்களுக்குத் தெம்பைத் தருகிறது. அவரை ஆண்டவராக அறிக்கையிடும் எங்களில் வாழ்வைச் சீரழிக்கும் சிலுவைகளையும் சிறுமைகளையும் கல்லறையில் புதைத்துவிட்டு புதிய வாழ்விற்கு உயிர்த்தெழச் செய்தருள எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## காணிக்கைப் பவனி

***அறிவிப்பாளர்:***

காணிக்கைப் பவனி இப்பொழுது நடைபெறுகிறது. உயிர்த்த ஆண்டவர் உலகிற்கு விடுக்கின்ற செய்தி நாம் இருக்கிறோம், உயிர் வாழ்கிறோம், வாழ்வோரின் கடவுளாக நாம் வாழ்கிறோம் என்பது. இந்தக் கடவுளுக்கு நமது எளிய காணிக்கைகளை அடையாளமாக அருளும்போது நமது வாழ்வையே இந்த சமூகத்திற்காக அர்ப்பணிப்போம். அப்ப ரசத்தின் வழியாக ஆண்டவர் இயேசுவின் பாடுகளிலும் மரணத்திலும் பங்கெடுத்து உயிர்ப்பின் சாட்சிகளாக நம்மையே இந்த உலகிற்கு அர்ப்பணமாக்குவோம்.

*(இறுதி செபத்திற்கு முன்)*

**அறிவிப்பாளர்:**

நமது ஆண்டவர் இயேசு சாவின் சக்திகளை வேரறுத்து வாழ்வின் ஊற்றைத் திறந்துள்ளார். இனி நமக்கு நோயில்லை, சாவில்லை! இதை மகிழ்ச்சியோடு அறிக்கையிடும் வகையில் “அல்லேலூயா” என்று ஆர்ப்பரிக்கிறோம். “சென்று வாருங்கள், திருப்பலி முடிந்தது, அல்லேலூயா, அல்லேலூயா” என பணியாளர் பாட, பதிலுக்கு நாமும் “இறைவனுக்கு நன்றி, அல்லேலூயர், அல்லேலூயர்” என்போம்.